ரிஜிஸ்டர் நெ. 2041. தனிப்பிரதி விலை ஒரு அணு.

குடி அரசு

வருட சந்தா முன் பணம் — ரூ. 5—0
6-மாத சந்தா ,, — ,, 1—12
வெளி நாட்டிற்கு ,, — ,, 5—0

ஞாயிறுதோறும் வெளிவரும்.

வியாபாரிகள் விளம்பரம் அங் 1 க்கு ரூ. 1.
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1 க்கு ரூ. 2.
நீடித்த விளம்பரத்துக்கு தனி விகிதம்

மலை 7 | ஈரோடு, பிரஜோத்பத்தி-வரு பங்குனி-மீ 22-உ. (3—4—1932) | மலர் 49

தாதுபுஷ்டிக்கு

பழநி சி. எம். சாமி

மன்மத குளிகை

யை உபயோகியுங்கள்.

நீங்கள் என்றும் எதிர்பாராத ஆனந்தமும், மன உறுதியும், தேகவலிமையும், இல்லற சுகமும் அடைவீர்கள்.

புட்டி 1க்கு ரூ. 2. தபால் சார்ஜ் வேறு.

அந்நிய தேசவாசிகள் மருந்திற்கு ஆர்டர் செய்யும்போது முன்பணம் ரூ. 5 அனுப்பவேண்டும்.

பழநி சி. எம். சாமி

குருதாம்பர பஸ்பம்

சகல வியாதிக்கும் கைகண்டது.

தீராத திமிர், குஷ்டம், சூலை, மதமப்பு, தடிப்பு பத்து, கிரந்தி; ஆராத குழிப்புண், குறை நோய், ரணங்கள் முதலிய சகல வியாதிகளும் கண்டிப்பாய் தீரும். 50 வேளை பஸ்பம் விலை ரு. 25. 25 வேளை 12-8-0. ஏழைகளுக்கு பாதிவிலை.

ஏராளமான சற்சாட்சிகளைக் கேட்டாலுங்கில் பார்க்கலாம்.

வைத்திய ஆசிரியர் C. மலையப்பசாமி, நித்தியானந்த மெடிக்கல் ஹால் பழனி. S. I.

டாக்டர் சிங்காரம் அவர்களின்

மிகவும் குணமுள்ள மருந்துகள்.

உலகப்பிரசித்திபெற்ற

மஹா சந்தனுதித் தைலம்.

அநேக பச்சிலை மூலிகைகள் சேர்ந்தது. கண் பார்வை குறைவாயிருந்த அநேகருக்கு இந்தத் தைலத்தின் உபயோகத்தினால் நல்ல பார்வை ஏற்பட்டிருக்கிறது.

கை, கால், கண் எரிச்சல், கண் சிகப்பு, கண்ணில் நீர்வடிதல், கண் பூ, பீளை சாருதல், மேக நீர், வெள்ளெழுத்து, நித்திரையின்மை, ஒருத்தலை நோய், பீனிசம், காதிரைச்சல், காதுமந்தம், மண்டைக்குத்து முதலிய சிரசிலுண்டாகும் பல நோய்களைக் குணம்செய்யும். வெட்டைச்சூடு, திரேககாங்கை முதலிய எல்லாவித உஷ்ணத்தையும் போக்கி சரீரத்திற்கு குளிர்ச்சியையும் நல்ல சுகத்தையும் கொடுக்கும். 24 அவுன்ஸ் டின் ரூ. 4 12 அவுன்ஸ் டின் ரூ. 2—2—0

சாலாமிசிரி லேகியம்.

சிறந்த தாதுபுஷ்டி மருந்து.

கை கால் அசதி, சோம்பல், இடுப்புவலி, நரம்பு தளர்ச்சி, சொப்பனஸ்கலிதம், சம்போக காலத்தில் ஏற்படும் துரிதஸ்கலிதம் முதலிய கொடிய வியாதிகளை நீக்கி தளர்ந்த நரம்புகளை கெட்டிப்படுத்தி வீரிய விர்த்தியை உண்டாக்கும். மனதுக்கு உற்சாகத்தையும் சுறுசுறுப்பையும் உண்டாக்கும். சம்போக இன்பத்தை முற்றிலும் அனுபவிக்கச் செய்யும். சாப்பிட மதுரமுள்ளது.

ஒரு சேர் டப்பி விலை ரூ. 2—8—0

மகா வில்வாதி லேகியம்.

அஜீரணம், வயிற்றுப்பிசம், பசிமந்தம், நெஞ்சில் கரகரப்பு, குலை எரிவு, வாயில் ஜலம் ஊரல், நெஞ்செரிவு, வாந்தி, தலைசுற்றல் வயிற்றுவலி, அஜீரணத்தால் ஏற்படும் வயிற்றுப்போக்குகள் நாவறோசிகம், மயக்கம், கை, கால் குடைச்சல், முதலிய பித்தம், பித்த வாய்வு சம்பந்தமான பலவித வியாதிகளை நிவர்த்தி செய்து நல்ல பசிதீபனத்தையும், ஜீர்ண சக்தியையும் உண்டாக்கும். பத்தியமில்லை.

ஒரு சேர் டப்பி விலை ரூ. 2.

அமிர்த சஞ்சீவி லேகியம்.

மனிதருக்குண்டாகும் நோய்களுக்குப் பலகாரணங்கள் இருந்தாலும் மலசிக்கல் ஓர் முக்கிய காரணமாயிருக்கிறது. ஆதலால் மலசிக்கலை உடனே நிவர்த்திக்கவேண்டும். இந்த லேகியம் எவ்வித மலசிக்கலையும் நீக்கி, தாராளமாய் காலை, மாலை மலம் வெளியாகும்படி செய்வதுடன், வாய்வு, தொந்தரவுகளையும் போக்கும்.

பலவித பழச் சத்துக்களும், சிறந்த மூலிகைகளும் சேர்த்து தயார் செய்யப்பட்டது. சாப்பிட மதுரமுள்ளது, பாலர் விருத்தாப்பியர் யாவரும் சாப்பிடலாம்.

ஒரு சேர் டப்பி விலை ரூ. 2.

எல்லா மருந்துகளுக்கும் பார்சிங் தபால் செலவு பிரத்தியேகம். மலாய் நாட்டு வாசிகள் ஆர்டருடன் முன்பணம் அனுப்பவேண்டும் விலாசம் தெரிவித்தால் முழு விவரமடங்கிய கேட்லாக் இலவசமாய் அனுப்பப்படும். கமிஷன் ஏஜண்டுகள் தேவை.

டி. சி. சிங்காரம் அண்டு கோ.,
தெப்பக்குளம் போஸ்டு, திருச்சிராப்பள்ளி.

ஆனந்தரின்

இந்திய பற்பசை (டூத்பேஸ்ட்)

பற்களைப்பளிங்கு போலாக்கும். எல்லா ஷாப்புகளிலும் கிடைக்கும்.

தமிழ் வைத்தியசாலை,
221, தங்கசாலை வீதி,
சென்னை.

புதுவைமுரசு

ஆசிரியர்:-
அ. பொன்னம்
பலனர்,
அவர்கள்.

24 பக்கங்களோடு அழகிய முறையில் திங்கட்கிழமைதோறும் வெளிவரும் சுயமரியாதைச் செந்தமிழ் வாரப் பத்திரிகை. வருட சந்தா ரூ. 3. வெளிநாடு ரூ. 5.
மாதிரிபிரதி இலும்! மானேஜர்,
"புதுவை முரசு"
புதுச்சேரி (F. இந்தியா)

"சாமிகளின் அடிமை"

"இந்திய மாதா" என்னும் நூலை இயற்றிய மிஸ். மேயோவால் எழுதப்பட்ட ஆங்கில நூலின் மொழிபெயர்ப்பு. இதில் ஹிந்துக்கள் என்போரின் கடவுள், மதம் என்பவற்றின்பேரால் அநுஷ்டித்துவரும் கொடிய, அநாசாரபழக்வழக்கங்களைக்கண்டுணரலாம், இனிய தமிழ், எளியநடை, ருசிகர கதைகள்.

அசல் விலை ரூ. 1—8—0.

இப்போதைய விலை ரூ. 0—12—0.

கிடைக்குமிடம்:—

குடி அரசு புத்தகசாலை, ஈரோடு.

சோமதேவ இருஷியின் வரப்பிரசாத ஔஷதம்.

குஷ்டம்

தீராதகர்மரோகமென்றெண்ணி கஷ்டப்படுவதேன்?

எக்காரணத்தினலுமுண்டாகின்ற எவ்வித குஷ்ட நோய்க்கும் அனேக தொத்துவியாதிகளுக்கும சீரான சிகிச்சை முறைகளையும் சிறந்த ஔஷதங்களையும் சரத்மீகத்தோதுக்கிணங்கி அனுபவித்தானந்தப்படுங்கள். நோயினல் அவஸ்தைப்படுவோர் ஸ்டாம்புடன் எழுதுங்கள்

. சி. ஒ. கேசவவைத்தியர்

Bhaskara Vilasam (S. K. R.) Pharmacy
Cameron Road, Pallithottam, Quilon S I.

Read.

The 'Citizen'

and become a
True Citizen.

The only Monthly Magazine in India purely devoted to the civic, Social and economic Interests of the Indians. Annual Subscription Rs. 2—0—0.

For advertisement please apply to:—

The Publisher
The Citizen
86, East Andar Street,
Teppakulam, Trichy.

சுயமரியாதை இயக்கப் பத்திரிகைகள்.

'தமிழன்'

வாரப்பதிப்பு

உள்நாடு வருடசந்தா 3—0—0
வெளிநாடு ,, 4—0—0
ஆசிரியர்: ஜீ, அப்பாதுரையார்,
விலாசம்:—
மானேஜர் "தமிழன்"
ஆண்டர்சன் பேட்டை P. O.
கோலார் தங்கவயல் (S. I.)

முன்னேற்றம்.

வாரப்பதிப்பு.

சிங்கப்பூரிலிருந்து வெளிவருவது
உள்நாடு சந்தா $. 5—0—0
இந்தியாவுக்கு ரூ. 8—0—0
ஆசிரியர்:- கோ. சாரங்கபாணி.
விலாசம்:—
மானேஜர்: "முன்னேற்றம்"
152 சிலிகிரோட், சிங்கப்பூர்.

"போர் முரசு"

வாரப்பதிப்பு.
ஆசிரியர் ச. ம. சி- பரமசிவம்
தனிப்பிரதி காலணு.
வருட சந்தா ரூ. 1—8—0.
"போர் முரசு"
19, பெரிய செட்டி தெரு,
உறையூர்—திருச்சி.

ஜோதிமூத்து.

டாக்டர் B. A. எதிராஜுலுவினல் தயாரித்து 31 ஆண்டுகளாக அனுபவித்து கைகண்ட, கோஷாயி மேக எண்ணை.
(கோஷாயி ஒருவரால் அனுக்கிரகிக்கப்பெற்றது.)

சகோதர, சகோதரிகளே! வெட்டவாய்வு (அஷ்ட) எட்டுவிதங்களாக, கர்ப்ப,—விந்து ஸ்தானங்களில் தங்கி, வெளியாகிக் கொண்டிருப்பதை அக்காலங்களில் கண்டித்து நீக்காமல் விட்டு நீடித்து நின்று மேகவாய்வு என்று பெயர் பெற்ற கோடியோன் கபாலத்தில் தங்கி, கபால இடி, குத்தல் நேத்திரத்தில் பார்வை மங்கல், பல குற்றங்களும், நாசி, செவி, தந்தங்கள், கண்டம் இவைகளில் குற்றங்களும், நெஞ்சில் தங்கி, மாரடைப்பு, தமரகவாய்வு, திணரல், கொக்கிருமல், காசமாகவும், கீல்களில் தங்கி, சூலைகளாகவும், நரம்புகளில் தங்கி முன்-பின் (வீச்சுகள்) பலவித இழுப்புகளாகவும் வயற்றில் தங்கி, சகலவித குன்மங்கள் வாய்வு, குதகக்கட்டிகள், பக்கவிலா இழுப்பு குத்தல் கொர்ப குற்றங்கள் நித்திரை அற்ற நீர்தாரை ரோகங்கள், மூலங்கள், திமிர், மதமதப்பு, சகலவித மேகங்கள், சிட்டைகள் ரண குஷ்டங்களாகவும், மலப்போக்கு அல்லது சிக்கல் பட்டு ஜனிக்கும் (விரிக்கிர் பெருகும்) அனந்தமேக வாய்வு ரோகிகளும். 3 நேரம் நம் கோஷாயி மேக எண்ணை சாப்பிட்ட 7-வது நாளே, எல்லா உபத்திரவத்திலிருந்து விலகி 15-வது நாள்பாலியதே ஜசுடன் விருத்தரும் பாலிய உணர்ச்சிபெற்றுவருவது பிரத்தியகூம்.

யோகாப்பியாசிகளுக்கு சடலத்திலுள்ள துர்நீர்களை அகற்றி எல்லா அவயவங்களிலும் சுத்த இரத்தத்தை ஊட்டி, அறிவு இடத்தில் புக்தியை நிறுத்தி (ஜோதியாகிய) தன்னை தெரிசிக்க, காயத்தை இருகச்செய்து காக்கும் காயகர்பம். 3 நேரம் உபயோகிக்கும் கோஷாயி மேக எண்ணை கொண்ட சீசா 1-க்கு ரூ. 7—0—0. பத்திய விபரம் மருந்துடன். பாக்கிங்தபால் செலவு பிரத்தியேகம். மலாய்வாசிகள் ஆர்டருடன் ரூ. 8—12—0 அனுப்பவேண்டும்.

கோஷாயி வைத்தியசாலை
தென்னூர் திருச்சி.

ரோஜா முத்தையா
ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

குடி அரசு பத்திரிகையின் அபிப்பிராயம்.

மதுரை திரு. ஆர். எஸ். பதியையும், அவரது கம்பெனியையும்பற்றி நமக்கு நீண்ட நாளாகத்தெரியும். திரு. பதி அவர்கள் கை தேர்ந்த வைத் தியர் என்பதும், அவரால் செய்யப்படும் மருந்துகள் மிகவும் குணமும் மேன் மையும் பொருந்தியனவென்றே எண்ணுகிறோம். மருந்தை வாங்கி உபயோ கித்து குணம் பெற்ற நோயாளிகள் எழுதிய பல கடிதங்களும் அதற்குச்சா ன்று கூறுகின்றன. கெய்ரோடைன் மருந்தை நாமும் பெற்று உபயோகித் தும் பரீட்சை செய்தும் பார்த்தோம். உண்மை மருந்துகளால் செய்யப்பட்ட தென்றும், எவ்வித பத்தியமுமில்லாது சாப்பிடக்கூடிய டானிக் போன்றே இருக்கிறது. எல்லா வியாதிகளுக்கும் உபயோகிக்கத்தக்கதென்பது சிலாக்கிக் கக்கூடியதே.

கெய்ரோடைன் ஒரு மருந்தைப்பற்றி
18 நாளைக்குள் வந்த நற்நாட்சிகளும் கடிதங்களும்.

புதியசக்தியைஅளிக்கும். கொடியமூன்றுவியாதிகள்அறவேஒழிந்தன.

நன்னிலம். (தஞ்சாவூர்)

அன்பார்ந்த ஜீவகாருண்ய உதவியாளரவர்களுக்கு ஆனந்தமாய் தெரிவிப்பது; தங்களிடம் நான் கெய்ரோடைன் சாப்பிட்டுஅதன் சக்திதியால் கொடிய மூன்றுவியாதியை அறவே ஒழித்தது. அநேக ரிடம்தெரிவித்து சாப்பிட்டும் குணமில்லாமல் கெய்ரோடைனால்நிம் மதியடைந்தேன். இம்மருந்து உலகினர்க்கு புதியசக்தியை அளிக்கு மென்பதை தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

(Sd) ந. அ. நடேசன் c/o வி. ரெங்கசாமி, Esq.
20—2—31 பசார்தெரு, நன்னிலம்.

கள்ளிக்கோட்டை.

6 வருஷங்களாகமுழுகிக்கிடந்த பெருந்துன்பத்திலிருந்து காப்பாற்றி யது. இளம்பருவத்திலிருந்த ஊக்கத்தைவிட அதிகப்பலம்.

(ஆங்கிலக் கடிதத்திற்கு மொழிபெயர்ப்பு.)

கடந்த ஆறு ஆண்டுகளாக நான் வியாதியுற்றிருந்தேன். நான் மதுரையில் இருக்கும்பொழுது தெற்குமாசி வீதி வாசியான மிஸ்டர் ரெங்கமன்னர் நாயுடு என்னும் என் நண்பரொருவர் தங்கள்..... .....மருந்துகளைப் பற்றிச்சொன்னர். நான் அதை அந்த ரங்க உண்மையோடு நம்பி ஒரு பாட்டில் கெய்ரோடைன் விலைக்கு வாங்கித் தங்கள் முறைப்படி மூன்று வாரங்கள் உபயோகித்தேன். இந்த மருந்து எனது உடம்பில் அதிக தீவிரமான மாதிரியில் வேலை செய்து நான் முழுகிக்கிடந்த பெருந்துன்பத்திலிருந்து என்னைக்காப் பாற்றியது. கெட்டுப்போன நிலைமையிலிருந்த எனது திரேகத்தை எனது இளமைப் பருவத்திலிருந்த ஊக்கத்தைவிட அதிக ஸ்திரமான பலத்தைத் தந்திருக்கிறது. நான் இதை இலகுவில் மறந்துவிட முடியாது. (Sd) கே. பி. அருணாசலம் பிள்ளை,
கடற்காட்சி மாளிகை, களத்துப்பாடி, கள்ளிக்கோட்டை.

சிற்றின்ப வியாதியை நிவர்த்தி செய்ததைப் பற்றி சந்தோஷப்படுகிறேன்.

உப்பூர் சத்திரம். (இராமநாதபுரம் ஜில்லா)

தங்கள் கம்பெனி கெய்ரோடைன் மருந்து எனக்கு ஏற்பட் டிருந்த சிற்றின்ப வியாதியை நிவர்த்தி செய்ததைப் பற்றி மிகவும் சந்தோஷப்படுகிறேன்.

(Sd) சொ. தங்கச்சாமி பிள்ளை, மளிகை, உப்பூர் சத்திரம்,
17—2—31. இராமநாதபுரம் ஜில்லா.

நீற்றுப்போன இந்திரியத்தைக் கெட்டிப் படுத்தியது.

வெள்ளியக்குடி (சிதம்பரம் தாலூகா)

ஐயன்மீர், தங்களால் பரோபகாரத்திற்காக வெளியிட்டிருக்கும் தங்கள கம்பெனி ஔடதங்களில் முதன்மை பெற்ற கெய்ரோடைன் என்னும் டானிக் மருந்தை நான் நாற்பது நாள் எண்பது வேளை சரியான முறைப்படி சாப்பிட்டு வந்ததில் எனக்கிருந்த மலச்சிக்கல், தேக காங்கை, அசதி, கண்ணெரிச்சல், பசியின்மை முதலிய வியாதி கள் பானுவைக் கண்ட பனிபோல் பறந்தே போயின. மற்றொன்று நீற்றுப்போன இந்திரியத்தைக் கெட்டிப் படுத்தியதில் இதற்கு நிகர் மற்றொன்றுண்டோ என்று ஆனந்திக்கிறேன். மற்ற மருந்துகளின் குணாதிசயங்களைக் குறிப்பிடுவதென்றால், தனிப்புத்தகமொன்று எழுத வேண்டி வரும். தங்கள் கம்பெனி மருந்துகளின் குணாதிசயங்களைத்

தெரிவிப்பதற்கு நானருகனல்ல.....தாங்கள் வைத்தியசாலை ஒன்று ஸ்தாபித்து மேற்கண்ட முதன்மையான ஔடதங்களை வெளியிட்டதற்கு நான் தங்களுக்கு என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு என் நண்பர்களுக்கும் தங்கள் ஔடதங்களைப் பற்றிச் சிபார்சு செய்து கொண்டிருக்கிறேன்.....

12-2-31. (Sd) பி. என். ரத்தினம்,
மானேஜர், H. A. E. ஸ்கூல் வெள்ளியக்குடி,
பரதூர் போஸ்டு, சிதம்பரம் தாலூகா.

---

4 வருஷமாயிருந்த சுவாசகாசம் குணம்.

நாகைப்பட்டினம்.

எனக்கு வயது 50 சுமார் 4 வருஷகாலமாக சுவாசகாசம்போல் இரைப்பு வலிப்புகள் அடிக்கடி வந்து நான் பட்ட கஷ்டத்திற்கு அளவேயில்லை. அநேக மருந்துகள் சாப்பிட்டும் விழலுக்கிரைத்த நீராகி விட்டன. குடியரசில் தங்கள் கெய்ரோடைன் குணாதிசயங்களைப் பற்றி கண்ணுற்றேன். உடனே ஒரு பாட்டில் கெய்ரோடைனும், ஒரு பாட்டில் சஞ்சீவி மாத்திரையும் வி. பி. யில் அனுப்பும்படி செய்து சாப்பிட்டுக் கொண்டு வருகின்றேன். குடியரசில் குறிப்பிட்டிருந்தபடி நல்ல பலனைக் கொடுத்து வருகின்றன.

(Sd) கலிய பெருமாள் பிள்ளை,
393-நிர். எட்கான்ஸ்டேபிள், ஆர்பர் அவுட்போஸ்டு,
13—2—31. நாகப்பட்டினம்.

சூரியனைக்கண்ட பனிபோல்.....
நிவாரணை ஆகி விட்டது.

ஏரல்-ஸ்ரீ வைகுண்டம் தாலூகா

தங்களுடைய கெய்ரோடைன் மருந்து ஒரு பாட்டிலும் சித்தர் சஞ்சீவி மாத்திரை ஒரு பாட்டிலும் நான் வாங்கிச் சாப்பிட்டதில் என் வியாதிகள் எல்லாம் சூரியனைக்கண்ட பனிபோல்..... .....நிவாரணையாகி விட்டன. நான் தங்களுக்கு என் மனமார்ந்த நன்றியை இக்கடித மூலமாய்த் தெரிவித்துக்கொள்கிறேன்.....

14-2-31. (Sd) S. S. A. வெள்ளைய நாடார்,
தேங்காய் வியாபாரம், ஏரல், ஸ்ரீவைகுண்டம் தாலூகா.

நெடுநாளாய் இருந்த வேள்வி தீர்ந்து விட்டது.

கரூர்-பள்ளபாளையம்.

தங்கள் கம்பெனி கெய்ரோடைன் மருந்து வாங்கிச் சாப்பிட்ட பின் எனக்கு நெடுநாளாய் இருந்த வேள்வி தீர்ந்த பின் தங்கள் கம்பெனியின் சந்தனாதித் தைலம், கெய்ரோடைன் மருந்தும்; பேனியம் என்னும் மருந்தும் இன்னும் பல வியாதிகளுக்கும் மருந்தும் தருவித்து என் சினேகிதர்களுக்கும் கொடுத்து தூர் நீர் வியாதிகள் தீர்ந்து விட்டன. ஆகையால் இன்னும் வேறு மருந்துகளுக்குஎழுதுகிறேன். தயவு செய்து அனுப்பும்படி கேட்டுக்கொள்கிறேன்..... .....தங்கள் கம்பெனி மேன் மேலும் விருத்தி அடையுமென்று நம்புகிறேன்.

(Sd) அ. முத்துசாமி செட்டியார், எண்ணெய் வியாபாரம்,
17—2—31. பள்ளபாளையம், கரூர் தாலூகா.

உங்கள் மருந்து நல்ல வேலை செய்கிறது.

சிதம்பரம்.

உங்கள் மருந்து நல்ல வேலை செய்கிறது. மருந்து பூராவும் சாப்பிட்டதில் என் உடம்பிலிருந்த அசதி, தேக காங்கை, மஞ்சள் மூத்திரம், மலச்சிக்கல், பசியின்மை முதலிய உஷ்ண வியாதிகள் நீங்கி நல்ல ரத்த விருத்தி உண்டாகியிருப்பதைஎன் அனுபவத்தால் கண்டறிந்தேன். உங்கள் கியாட்லாக்கில் பிரசரித்திருக்கிற குணங்களெல்லாம் கெய்ரோடைனுக்கு அமைந்திருக்கிறது என்று சொல்வது மிகையாகாது. அதிக மனோமுயற்சி எடுத்துக்கொண்டு உழைக்கிற மாணவர்கள் முதலியவர்கள் இந்த கெய்ரோடைனைத் தினந்தோறும் டானிக் மாதிரியாக உபயோகித்தால் நல்ல பலனை அடைவார்கள் என்பது திண்ணம்.....

உங்கள் நன்றிமறவாத,
14—2—31. (Sd) ரா. வெங்கட்ராமன், சிதம்பரம்.

எனது சரீரம் ஆச்சரியமான விதமாய் மாறியிருக்கிறது.

நீலாங்குடி.

ஐயா! தாங்கள் அனுப்பிய (கெய்ரோடைன்) மருந்தை இருபது நாட்கள்தான் சாப்பிட்டேன். சாப்பிட்டபிறகு ஆச்சரியமான விதமாய் எனது சரீரம் மாறியிருக்கிறது. அதற்குமுன் இருந்த இளைப்பும், வாயுவின் மிகுதியால் உடம்புவலி முதலிய உபத்திரவங்களும், ஞாபகமறதி முதலியனவும் முற்றிலும் குணமானதோடு தேகம் சுறுசுறுப்பும் தைரியமும் உண்டாயிருக்கிறது. இதற்குக்காரணம் தங்கள் கெய்ரோடைன் மருந்தே அன்றி வேறில்லை. பாக்கியிருக்கும் மருந்தையும் சாப்பிட்டுக்கொண்டு வருகிறேன். தங்கள் கம்பெனியில் நான் அநேக வருஷங்களாக மருந்துகள் வரவழைத்திருக்கிறேன், முக்கியமாய் ஆர். எஸ். பதி மருந்தைப்பற்றி சொல்வதற்கு என் நாக்கு ஒன்று போதாது. அதை வாங்கி இவ்விடம் இலவசமாய் அநேக வியாதியஸ்தர்களுக்குத் தங்கள் முறைப்படி உபயோகிக்கிறதில் நாள்பட்ட வியாதிகள் எல்லாம் பறந்துபோய்விட்டன. இவ்வளவு விலை சரசமான மருந்தும் இவ்வளவு சீக்கிரம் குணப்படுத்தும் மருந்தும் வேறு இல்லை என்றே நான் சொல்லுவேன். தங்கள் ஆர். எஸ். பதி. மருந்தில் நாள்பட்ட மண்டைக்குத்தல், பீனிசம், தேள்கொட்டு, வெட்டுக்காயங்கள், ஆறாத சிரங்குகள், உடம்பு வலி முதலிய வியாதிகளும், தலைவலி, ஜலதோஷம், முதலிய வியாதிகளும், இன்னும் அநேகமான வியாதிகளும், மிக ஆச்சரியமாய் குணமடைந்திருக்கிறதை நான் அனுபவ பூர்வமாய் கண்டிருக்கிறேன், தங்கள் கம்பெனி மருந்துகள் எல்லாம் உயர்தரமானதும், கேட்டல்க்கிற்சொல்லியபடி வியாதிகளைத் தீர்ப்பதில் மிகவும் மேன்மை பெற்றன.

இம்மாதிரியான குறைந்த விலைக்கு வியாதிக்குத்தகுந்த உயர்தரமான மருந்துகளைத் தயார்செய்து அனுப்பும் உங்கள் கம்பெனி எப்பொழுதும் சிறப்பாக நடைபெறும்படி.....

(Sd) V. பார்த்தசாரதி அய்யங்கார், நீலாங்குடி,
16—2—31. கமலாபுரம் போஸ்டு, குழிக்கரை

போலி மருந்துகளை வாங்கி ஏமாறுதீர்கள்.
ஆறுபேர்கள் பூரணசௌக்கியம் அடைந்திருக்கிறார்கள்.

கரூர்.

இப்பவும் உங்களுடைய கம்பெனியிலிருந்து நாங்கள் தருவித்த (கெய்ரோடேன்) மருந்து ஆறுபுட்டியை நானும் கீழ்கண்டஎன்சினேகிதர்களும் சாப்பிட்டுப்பார்த்ததில் (1) Mr. M. பெரியண்ண ஆச்சாரி, (2) Mr. M. தர்மசிவம் ஆச்சாரி, (3) Mr. M. நாராயண ஆச்சாரி, (4) நாமக்கல் Mr. V. துரைசாமி ஆச்சாரி ஆகிய நாங்கள் எல்லோரும் கெய்ரோடைன் என்னும் மருந்தைச் சாப்பிட்டு பூரண சவுக்கியம் அடைந்திருக்கிறோம். ஆகையால் நம் பாரதமக்கள் அனைவரும் கெய்ரோடைன் என்று சொல்லப்பட்ட சிறந்த மருந்தை வாங்கி உபயோகப்படுத்தி போலி மருந்துகளை வாங்கி ஏமாராமல் இந்த மருந்தை வாங்கி உபயோகிக்கவேண்டியது. இந்த மருந்தைச்சாப்பிடுகிறவர்கள் சூரியனைக்கண்ட பனிபோல் வியாதிநீங்கி சுகம் அடைவார்கள் என்பதில் சந்தேகமில்லை. ஆகையால் ஒவ்வொருவரும் இந்த மருந்தையேகைக்கொள்ளவேண்டியது. மிகச்சொல்லின் யாது பயன்.....

(Sd) M. R. சோமசுந்தரம் செட்டியார்,
C/o S. P. தங்கவேலு ஆச்சாரியார் அவர்கள்,
16—2—31. தங்கவேலை, கடைவீதி, கரூர்.

வியாதிகள் யாவும் பாஷைக்கண்ட பனிபோல் பறந்துவிட்டன.

திருச்சிராப்பள்ளி, பொன்மலை.

நான் தங்களிடத்தில் வாங்கிச் சாப்பிட்ட கெய்ரோடைன் டானிக் மருந்தினால் என்னுடைய உடம்பிலிருந்த வியாதிகள் யாவும் பாஷைக்கண்ட பனிபோல் எல்லாம் பறந்துபோய்விட்டன. நான் இப்பொழுது சௌகரியமாய் சரியான ஆகாரங்களைச் சாப்பிட்டுக் கொண்டு இருக்கிறேன். என்னுடைய சினேகிதர்களுக்கும் இதுமாதிரியான வியாதி வந்தால் இந்த டானிக்கையே வாங்கி உபயோகப்படுத்தும்படியாகச் சொல்லியிருக்கிறேன்.

(Sd) வி. ஜி. பக்கிரிசாமி,
17—2—31 பவுண்டரி ஷாப், பொன்மலை, திருச்சி.

(இதன் தொடர்ச்சி 17ம் பகுதம் பார்க்க.)

ரோஜா முத்தையா

கூட்டு.

மானங்கெட்டதன்மை போனால் மனிதத்தன்மை தானே வரும்.

[கைவல்யம்]

2-ம் பாகம்.

கடவுள் எல்லாருக்குமுண்டு. கடவுள் எதற்காக சுகத்தைக் கொடுக்கச் சுகமெங்கிருக்கிறது. அறிவிலிருக்கிறது. அறிவெங்கிருக்கிறது. ஆலோசனையிலிருக்கிறது. ஆலோசனை எங்கிருந்துவரும். புத்தியிலிருந்து, ஆகவே சுகம் வேண்டுமானால் விசாரித்தறியும் புத்தியை வணங்கவேண்டும்.

அறிவினுக்கறிவாகி யானந்தமய மான ஆதியே என்றும், அறிவிற்கறிவாயறிவிப்பானென்றும், விண்ணிருந்த வெளியாயென் மனவெளியில் கலந்தறிவாம் என்றுமே நம்பெரியவர்களும் கடவுளைச் சொல்லிப்போனார்கள்.

சுயமரியாதை இயக்கமென்றால் கடவுளை இல்லை என்று சொல்வது என்று பலர் சொல்லுகிறார்கள். கடவுளென்றால் என்ன? எப்படி இருக்க வேண்டும்? எப்படி இருந்தால் கடவுள் என்கிற பெயருண்டு என்பவைகளைப்பற்றி ஆலோசித்துப் பார்க்காதவர்களும், கடவுள் பேரைச் சொல்லி காலச்க்ஷேபம் செய்கிறவர்களும், கடவுளைக் காட்டி ஜாதியாலும், மதிப்பாலும், பொருளாலும் லாபமடைகிறவர்களும், தாங்கள் செய்யும் பாவத்திற்குக் கைகூலி வாங்கக் கடவுளை ஏற்படுத்திக் கொள்ளுகிறவர்களும், தாங்கள் செய்த அக்கிரமங்களுக்குக் கடைசி காலத்தில் கடவுளைக் காணப் புறப்படுகிறவர்களும் சுயமரியாதைக்காரர்கள் கடவுள் இல்லை யென்று சொல்லுகிறார்கள் என்று சொல்லுவது விவேகத்துடன் ஒட்டினதல்ல.

ஓட்டுகளைப்பற்றியும், ஓட்டர்களைப்பற்றியும், மெம்பர்களைப்பற்றியும், பிரசிடெண்டுகளைப்பற்றியும், நமது கடவுளுக்கு முன்னுந்தெரியாது பின்னுந்தேரியாது தெரிந்துகொள்ள அவனுக்குச்சொல்லுவாருமில்லை. என்றாலும்திருப்பதிபெருமாளும், பழனி முருகனும் தங்களை மெம்பர்களாகவும் பிரசிடெண்டுகளாகவும் ஆக்கியதற்கு அருள்புரிந்தவர்களென்று ஆராதனை அபிஷேகம் செய்யப்போகிறார்களேயல்லாமல் ஜன சமூகத்திற்கு நன்மை செய்வதில் கவலையற்றவர்களாகவேயிருக்கிறார்கள். ஏனெனில் தெய்வத்திற்குச் செய்வதே விசேடமெனப் பழக்கப்பட்டிருக்கிறார்கள்.

இப்பொழுது உலகத்தில் சொல்லப்பட்டு எல்லாராலும் அங்கீகரிக்கும்படியான நியாயம், உண்மை, விடுதலை என்ற ஆதர்சங்களை யாதார்த்தமாக நம்பும்படியாய் மனிதர்களுடைய ஜீவன், இலக்கியம், சாஸ்திரம், கலை, ஊர்க்குடித்தனம் இவைகளெல்லாம் முழு வெள்ளமாகப்பாய்ந்து, மனுஷ ஜாதியை அவமானப்படுத்தி அதற்கெதிரே பொய் மாதாபிமானம், பொய்பக்தி, பொய் தேசாபிமானம் இவைகளின் கர்வத்தையெல்லாம் பாழ்படுத்தும் ஜனநாயகத்துவம் கடவுள் என்னும் பொருளுக்குள்ளிருக்கலாம்; என்றாலும் நாம் கும்பிடும் தெய்வங்களில் எந்தத் தெய்வத்திற்கும் தெரியாது. அவை அவைகளின் அனுபோகத்திலில்லை. அந்தத் தெய்வங்கள் சொன்ன சாஸ்திரங்களிலுமில்லை. தெய்வ அவதாரங்களான ஆசாரிகள், தெய்வங்களாகிப் போன பக்தர்கள், தெய்வ அருள்பெற்ற பண்டிதர்கள் இவர்கள் செய்த வியாக்கியானங்களிலுமில்லை. ஜாதிக்குரவர், சந்தானக்குரவர், சமயக்குரவர், சாத்திரக்குரவர், சர்வ வல்லபக்குரவர், சற்சங்கக்குரவர் முதலிய குரவர்கள் சொன்ன தனித்தனி சாத்திரங்களிலுமில்லை. இப்பொழுது நமது தெய்வங்களின் பிரதிநிதிகளான லோக குருக்கள், மகுந்துக்கள், மடாதிபதிகள் இவர்களுக்கு இப்பொழுது சொல்லப்படும் ஜனநாயகத்துவம் அர்த்தமாவதேயில்லை. அவர்கள் மண்டையில் பதிவதுமில்லை.

நமக்கு தெய்வம், ஆசாரி, குரு, புரோகிதன் இவர்களைவிட்டால் மோட்சத்திற்கு வழியில்லை. தெய்வத்தை விட்டால் நரகம், ஆசாரியை விட்டால் பாவம், குருஉபதேசத்தை விட்டால் தீமை, புரோகிதகர்மத்தைவிட்டால் புண்ணியமில்லை. இந்த நிற்பந்தமான நிலையிலிருக்கும் நாம் உலகப்பொதுக் கடவுளாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஜனனுயகத்துவத்தை விரும்பிநிற்கிறோம். இனி அதை வஞ்சிக்க முடியாது. கடவுள் கட்டளை யென்றும், சமய சாஸ்திர நிச்சயமென்றும், முன்னோர் நடந்த வழக்க பழக்கவழியென்றும் ஏய்க்கவுமாகாது. வாய்சாமார்த்தியத்தினால் வழக்கிட்டு ஒரு மூலையில் ஒதுக்கிவிடவும் சாத்தியமில்லை. எனெனில் இந்த உலகத்தில் இப்பொழுது ஜனத்தின் ஜீவசக்திக்கும், ஜாதியின் நிபந்தனைகளுக்கும் போர்நடக்கிறது. அப்போரில் பார்வைகுப் பலமுள்ளனபோல் தோன்றும் காரணத்தால் அழிவதற்கு அசாத்தியமாகிய பழங்காலத்து மத நம்பிக்கைகள் தம் தம் கொள்கைகளே உண்மையெனச் சாற்றிவந்த சமயவாதிகளின் கட்சிவாதங்கள் எல்லாம் தற்கால பௌதிக விஞ்ஞான சாஸ்திரப் பிரகாசத்தின் வன்மையால் நிர்த்தூளியாய் வருகின்றது போல மனுஷிய பொதுஜன உத்தமலட்சியங்களைத் தடுக்கும் ஜாதியின் திறமையாகிய கல்நெஞ்ச சம்பிரதாயமும் மொத்துண்டு படுசூரணமாய் மறைந்துவருகின்றன.

இன்னிலைமையிலிருக்கும் உலகத்தில் ஆனரபுளாய் வந்தார். கனம் எ. ரெங்கசாமி அய்யங்கார் காந்திஜி மடியிலிருந்திறங்கி கட்டுரை எழுதும் வேலையில் கவனத்தைத் திருப்பிக் கொண்டார். கனம் ராமசாமி முதலியார், கனம் பாத்ரோ மற்றுமுள்ள இந்துமூலகப் பிரமுகர்களெல்லாம் அமிங்கி ஒடிங்கி அங்குமிங்கும் பார்த்தார்கள். இவர்களெல்லாம் நமது தேசத்தில் படித்தவர்கள். பிரமுகர்கள், தலைவர்கள், பிரசங்கிகள், ஏகாதிபத்தியத்தில் நமது தேசத்துப் பொருப்பை எற்றுக் கொள்ளுகிறவர்கள். இவர்களெல்லாம் அந்தக் கேள்விக்குப் பதில் சொல்ல கடவுள் நினைத்தார்கள். கையைப் பிசைந்தார்கள். சாஸ்திரத்தை எண்ணினார்கள். ஆங்கிலேயர் முகத்தைப் பார்த்தார்கள். தங்கள் முகத்தைத் தரைக்குக் காட்டினார்கள். தாங்கள் வந்த காரியத்தை நினைத்தார்கள். வாயை மூடி முகம் சோர்ந்து மூக்கைச் சிந்தினார்கள். என்றால் அந்தக் கேள்வியின் உண்மையான ஜனனுயகத்துவத்தின் சத்தியம் எவ்வளவு மேன்மையுடையதாயிருக்கவேண்டுமென்பதை ஆலோசித்துப்பாருங்கள். தெய்வங்களெத்தனை, சாஸ்திரங்களெத்தனை, சமயவாத தர்க்கங்களெத்தனை, மந்திரங்கள், மர்மங்கள், ஆசாரங்கள், அனுஷ்டானங்கள், பூசைகள் எத்தனை? அத்தனையும் ஒடுகிறவனைத் துரத்தவும், ஒன்றுமரியாத ஏழைகளைத் துன்புருத்தவும், புண்ணிய லோகமென்று சொல்லிப் பொருள் பரித்து வயர் வளர்க்கவும், வந்தவர்களுக்கெல்லாம் அடிமையாக ஆளாக்கவும் இங்கு உபயோகப்பட்டு வந்ததேயல்லாமல், மனிதரும் மனிதத் தன்மையுடையவரும் இருந்த அந்த சபையின் ஒரு கேள்விக்கு உபயோகப்படவில்லை. இனியும் அந்தக் கேள்விக்கு இடமளித்துக்கொண்டிருந்தால் மானங்கெட்டு மதிகெட்டுப் போவதேயல்லாமல் வேறு என்ன நன்மை உண்டாகும்?

அந்தத் தீண்டாமை என்னும் கொடுமையின் பாவத்திலுல்தான் நாங்கள் இந்த சபையில் வாய்பேச முடியாமலும் உலக சபையில் எங்கள் பெருமை சிறுமையடையவும் ஏதுவாயிருக்கின்றன. அதை நாங்கள் உணர்ந்துகொண்டோம். அதைப்போக்கப் பிரயத்தனமும் செய்கிறோம் என்று கனம் காந்தி ஒருவாறு சமாதானம் சொல்லிவிட்டு அதோடு அவர் திருப்தியடையாமல் ஐரோப்பாவைவிட்டு பம்பாய் வந்திறங்கின உடனே மானங்கெட்டதன்மையான தீண்டாமையை நாம் விட்டுவிடவேண்டும் என்று நமக்குச் சொன்னார். மானங்கெட்ட தன்மையை விட்டுவிட்டால்தான் மனிதத் தன்மைவருமென்றார். கனம் காந்தியைப்போற்றுகிறார்கள் பூசிக்கிறார்கள். அவர் சொன்னதை நினைத்து அங்கீகரித்து அதற்கு வேண்டிய காரியங்களில்கவனம் செலுத்துகிறவர்கள் சொற்பமே.

தொடர்ச்சி 16-ம் பக்கம் பார்க்க.

(The Work before us)
நாம் செய்யவேண்டிய வேலை என்ன?

ஒடுக்கப்பட்டவர்களும் சுயராஜ்யமும்

எந்த அரசியலில் தான் இவர்களுக்கு விமோசனம்?

[தோழர் M. சிங்காரவேலு B. A., B. L.,]

(XI)

நமது "குடி அரசு" "சண்டமாருதம்" மற்றும் பல சுயமரியாதை பத்திரிகைகளும் பல தடவைகளிலும், தாழ்த்தப் பட்டவர்களுடைய நிலைமையைக் குறித்து, அடித்தடித்து, பொது ஜனங்கள் உணரும்படி எழுதி வருகின்றன. "சண்டமாருதம்" பத்திராதிபர் பிரசுரத்திலும் (1-2-32) தாழ்த்தப்பட்டவர்களாகிய ஆதிதிராவிடர் நிலைமையைக்குறித்தும், அவர்களின் நிர்பாக்கியத்தைக் குறித்தும் வரைந்துளது. அதனை இவ்விடத்தில் சுருக்கமாக எடுத்துரைத்து, அதன் மேல், நமது அபிப்பிராயத்தையும் வெளியிடுவாம். தாழ்த்தப் பட்டோர் இந்தியாவில் 5 கோடியே. இவர்கள் வாழ்க்கை மிருகத்தை வொத்தது. இந்த நிலைமையில் இருக்கும் வரை, சுயராஜியமோ, சமதர்மமோ பேசுவதால் யாது பயன்? சுயராஜியம் வந்தாலும், அது முதலாளி ராஜியமாகவோ, அல்லது வைதீக ராஜியமாகவோ இருக்கும். ஆதலின் சுயராஜியம் வருமுன், யாவரும் சரிநிகர் சமானமாக வாழ சௌகர்யம் ஏற்பட வேண்டும். ஒடுக்கப்பட்டவர்கள் விடுதலைக்கு உதவி புரிவோர் அதிகமாகக் காண வில்லை. காரியத்தில் இல்லாமல், எழுதுவதாலும், பேசுவதாலும் பிர யோஜனமில்லை. ஆனால், சிலர் மட்டும் ஆஸ்டல் கட்டவும், ஆஸ்பத்திரி, பள்ளிக்கூடங்கள், புஸ்தகசாலை ஏற்படுத்தவும், 40 லட்சம் செலவு செய்து சிதம்பரத்தில் கலாசாலை ஏற்படுத்தியும், 500 ரூபாய் இலவச பாடசாலைக்கு நன்கொடை அளித்தும்வருகின்றனர். இன்னுருக்குவாழ்த்து கூறல் மிகையாகாது. இன்னும் ஆதிதிராவிடர்களுக்கு ஆங்கில அரசுஎவ்வளவோ கல்வி வசதிகள் செய்திருந்தும், ஜாதித்திமிர் கொடுமையினால், எந்த வசதிகளும் ஆதி திராவிடர்களுக்கு நலம் செய்யமுடிய வில்லை. நமது "சண்டமாருதம்" ஒடுக்கப்பட்டவர்கள் பால் இவ்வளவு குறிப்புகளை வரைந்துள்ளது நன்கு மதிக்கத்தக்கதே ஆயினும், 5 கோடி தாழ்த்தப்பட்டோர், சமூக விருத்தியும் உயர்வும் அடைந்து வாழ வேண்டியதற்கு வழி, செல்வம் படைத்தோரில் சிலர், "கோதான பூதானத்தைப் போன்ற" தானங்களை, சில ஆதிதிராவிடர்களுக்குச் செய்வது போதுமா? என்பது தான் கேள்வி. கலாசாலைகளும், ஆஸ்பத்திரிகளும், ஆஸ்டல்களும் சிதம்பரத்திலும் தஞ்சையிலும், சீர்காழியிலும், சென்னையிலும் ஏறபடுத்துவதால், 5 கோடி ஆதிதிராவிட மக்களின் "மிருக வாழ்வு" போமா என்பது தான் கேள்வி? காந்தியார் சுயராஜ்யம் முதலாளி ராஜ்ய போக்காகத்தான் இருக்கு மென்பது உண்மையே. ஆனால், எந்த ராஜியத்தில், நமது 5 கோடி தோழர்களின் வாழ்வு உயர்வடையும் என்பது தான் விளங்கவில்லை இன்னுடைய நன்மையைக் குறித்து பேசுகின்றவர்களோ, பிரசங்கிப்பவர்களோ, தங்கள் கார் யாம்சதில் தங்கள் சொல்லின் திரத்தைக் காட்ட வேண்டு மென்பதும் உண்மையே. ஆனால், அவர்கள் முன்னேற்றத்தைக் குறித்து பேசாமலும், பிரசங்கியாமலும் இருந்தால் என்ன காரியம் சித்தியாகும் என்று கேட்கின்றோம்? பல கோடி தாழ்த்தப்பட்டவர்கள் மிருக நிலைமையிலிருந்து, மனித நிலைமைக்கு வரும் வரை, சுயராஜியமோ அல்லது சமதர்மமோ இவைகளைப் பற்றிப் பேசுவதில் பயனில்லை என்பது, வண்டியை குதிரைக்கு முன் பூட்டுவதைப் போல் காண்கிறது! இனி வரும் சுயராஜியம் (அது இந்த ஜன்மத்தில் வருவது சந்தேகம்) வைதீக ராஜியமாக இருந்தாலும் இருக்கலாம். ஆனால் சுயராஜியம் வருவதற்கு முன் யாவரும் சரிநிகர்சமானமாக வேண்டும் என்பது தான் விளங்கவில்லை. கடைசியாக, நமது துரைத்தனத்தார், தாழ்த்தப் பட்டவர்களுக்கு, எவ்வளவோ செய்து வருவதாகவும், ஆனால் ஜாதித்திமிரால் அவை தாழ்த்தப் பட்டோருக்கு பயன்படவில்லை என்பது, நிகழும் தோற்றங்களுக்கு முரணுகவேதோன்றுகின்றது.

எப்படி எனில், நிகழும் பிரிட்டிஷ் ராஜியத்தில், 5 கோடி பஞ்சமர்களுக்கு: என்ன அபிவிருத்தி அடைய சௌகரியங்கள் செய்யப்பட்டுள்ளன? என்ற கேள்விக்கு யார் தான் விடை அளிக்க முடியும்? லேபர் கமிஷன் என்ற ஓர் இலாகாவை, ஏற்படுத்தியுள்ளார். இரண்டொரு பஞ்சம பிரதிநிதிகளை, சட்ட சபைகளில் நியமித்துள்ளார். சில காடு கரம்பு நிலங்களை, தர்காஸ்து கொடுத்துள்ளார் சில கிணறுகள் வெட்டியுள்ளார். சில இலவச பள்ளிக்கூடங்களை, சில சேரிகளில் ஏற்படுத்தியுள்ளார். நேற்று அரசியல் திட்ட சப்கமிட்டியில், தாழ்த்தப் பட்டோர் வேண்டுமாலல், தாங்களே தனிக்கோயில் குளங்கள்அமைத்துக் கொள்ளலா மென்றும் அவர்கள் உரிமையை அங்கீகரித்துள்ளார்! இத்துடன் அவரவர்கள் ஜாதி சமயம் சொத்துரிமை யாவும் பாதுகாக்கப் படுமென்றும் வாகுறுதியும் செய்துள்ளார்!! நமது 5 கோடி ஆதிதிராவிடர்களுக்கு இதைவிட என்ன உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும்!!! இதனைத் தடுக்க எந்த ஜாதி மமதை குறுக்கே நின்றது? இவ்வளவும், நமது ஆதிதிராவிடர் நன்மைக்கென நமது காருண்ய சர்க்கார் செய்தும், நமது 5 கோடி தாழ்ததப்பட்டோர் "மிருக வாழ்க்கையில்" கடந்த 100 150 வருடங்களாக இருப்பின், இதை யார் குற்றமென்று கூறுவது? இந்நிலைமைக்கு யாரைப்பழிப்பது? இவ்வளவும் பயன் படாமைக்குக் காரணமென்னே? இரண்டாவது, ஜாதி மத கற்பிதங்களை ஒழிக்க, நமது பத்திரிகைகளும் சுயமரியாதைக்காரர்களும், பலதுரையிலிருந்து உழைத்து வருவது உலகறிந்த விஷயம். சுயமரியாதை கோஷ்டியார், தாழ்த்தப்பட்டோரின் சமூக நிலைமைக்குறித்தும், அறியாண்மையைக் குறித்தும், தங்கள் மகா நாடுகளில் தீர்மானங்கள் செய்து வருகின்றனர். தாழ்த்தப்பட்டோர், பண்டைக்கால முதல் இருந்து வரும் பரிதாப நிலைமைக்கு அடிப்படையாகவுள்ள இரண்டு மூலாம்சங்களாகிய, பொருளாதாரத்தாழ்வு, ஜாதி மத இழிவுகளில் ஜாதிமத இழிவை நீக்க சுயமரியாதையோர் அரும்பாடுபட்டு வருவதைப் பார்த்தவர்கள் அவர்களை சிலாகிக்காமல் இரார்கள். எனினும் 5 கோடி மகளை, சமூக வாழ்வில் சமத்துவம் பெற முயற்சித்து வந்தும், அரசியல் திட்டத்தில் அவனவன் மதத்திற்கும், அவனவன் ஜாதிக்கும், அவனவன் பழக்க வொழுக்கங்களுக்கும் பாதுகாப்புக்குத் தகுந்த ஏற்பாடுகள் செய்வது அவசியமென 3-வது வட்டமேசையோர், அபிப்பிராயப்பட்டால், வைதீகமும், ஜாதி பேதங்களும், மதக்கொழுப்பும், தீண்டாமையும் தழைத்தோங்க என்ன தடை? மதங்கள் இந்தியாவை விட்டு ஒழிய வேண்டுமென்று சுயமரியாதையோரும், சுயமரியாதைப் பத்திரிகைகளும் வாதித்து வருகின்றனர். கார்யாம்சத்திலும் காட்டி வருகின்றனர். ஜாதியும் அதனைச் சேர்ந்த தீண்டாமையும் நாட்டை விட்டு நீங்க வேண்டு மென்றும் சாதித்தும் வருகின்றனர். ஆனால், நமது அரசாங்கம், ஜாதி மதங்கள் அவைகளில் அடங்கியுள்ள நடையுடை பாவனைகள், காப்பாற்றப்படுமென்று அரசியல் திட்டத்திலேயே, விசேஷ திட்டமாக செய்யப்புகின், சுயமரியாதைக்காரரும் மற்றுமுள்ள சமூக சீர்திருத்தக் காரரும், மதமொழியவும், ஜாதி நீங்கவும் என்ன பாடு பட்டும் என்ன பிரயோஜன மெனக் கேட்கின்றோம்? "பாலுக்கும் காவல் பூனைக்கும் தோழுகை" அரசாங்கம் நடித்தால், நீரும், நாமும் என்ன செய்ய முடியும்? எந்த மதஸ்தர்களும், எந்த (ஜாதி திமிர் பிடித்தோரும், அவரவர்கள் மதத்தையும் ஜாதியையும் மட்டும் மித மிஞ்சி அனுசரித்து வரலாமென்றால், சீர்திருத்தக் காரர்கள், அல்லும் பகலும் புலம்புவதால் என்ன பிரயோஜனத்தைத் தருமெனக கேட்கின்றோம்? பள்ளிக்கூடங்களில் ஜாதிமத வித்தியாசம் பாராட்டுவதில்லையாம்! ரயில் கப்பல், உத்தியோகம், பொருள் சம்பாதித்தல் எந்த இடத்திலும் தங்கி வாழல், இந்த இடங்களில் ஜாதி மத விதியாசம் இன்றி அனுபவிக்க யாவருக்கும் சுதந்திரமும் உளதாம்!! அரசியல் நிர்வாகத்திலும், ஜாதி மத திமிர் நுழைய முடியாதாம்!!! நிகழ்ந்து வரும் அரசுக்கு ஜாதி மதம் என்ற பேச்சே இல்லையாம்!!!! இவைகளை பாதுகாக்க சட்ட திட்டங்கள் செய்யப்படுமாம், செய்யப் பட்டும இருக்கின்றதாம்!!!!! இருந்தும, கடந்த 5000 வருஷமாகவும், நமது காருண்ய சர்க்கார் வந்த 150 வருஷமாகவும், மேற்கண்ட உரிமைகளை அங்கீகரித்துள்ள ராணி விக்டோரியா பிரசுரம் செய்த 70, 75 வருஷங்களாகவும், 5 கோடி பஞ்சமர்களின் வாழ்வு மிருக வாழ்வாக இருக்கின்றதாம்!!!!!! இது என்ன விபரீத மென்று கேட்கின்றோம்? ஜாதி மதங்கள் பொது ஸ்தாபனங்களில் கொண்டாடப்பட்டு வந்த இந்து அரசாங்கங்களிலும், ஜாதி மதங்களை, பொது ஸ்காபனங்களிலிருந்து விலக்கப்பட்டதாக தாவா செய்து வரும் பிரிட்டிஷ் அரசாங்கத்திலும், ஜாதி மத கற்பனைகளும் அதன் கொடிய பழக்க வழக்கங்களும் தழைத்துக் கொண்டு இருக்கின்ற தென்றால், பண்டை அரசுகளுக்கும் தற்கால அரசுகளுக்கும், என்ன வித்தியாச மென்று கேட்கின்றோம். நமது "சண்டமாருதம்" இந்த முரண்பாட்டை அறியாமல் இல்லை என்று நாம்சொல்லவரவில்லை, 25-2-32 'சண்டமாருதத்தில்' வட்டமேசை முரண்களை இதே சந்தர்ப்பத்தில்எடுத்துக்காட்டியுள்ளது. ஆனால், நாம், என்ன சொல்ல வந்தோ மென்றால், அம்பை எய்கிறவனை நோகாமல், அம்பை நோவதால் காரியமில்லை என்பதே.

தொடர்ச்சி 15-ம் பக்கம் பார்க்க.

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

மதமும் முன்னேற்றமும்.

I

மதம் பயத்திலிருந்து பிறந்த ஒரு நிராதவியாதி அது மனித வர்க்கத்திற்கு அளவிறந்த தீமைகளே விளைவிக்கும் ஓயாத துன்பக்களஞ்சியம். ஆனால் உலகில் நாகரீக வளர்ச்சிக்கு சிலவகைகளில் உதவியுள்ளது என்பதை மறுக்க முடியாது. மதம் ஆதிகாலத்தில் கால நிர்ணயம் செய்யும் பஞ்சாங்கம் ஏற்படுவதற்கும், கிரகணங்களை கவனமாக குறித்து வைத்ததின் மூலம் பின்னால் அவைகளை முன் கூட்டியே தெரிவிப்பதற்கும் காரண பூதமாக விருந்திருக்கிறது.

இப்பொழுது மதம் என்னும் வார்த்தை குறிப்பிட்ட ஒரு பொருளில் லாது பலவாறுகவும் உபயோகிக்கப் படுகிறது. கடந்த ஞானிகளெனச் சொல்லிக்கொள்ளும் சிலர் ஒழுக்கத்தைப்பற்றியோ, பிரபஞ்சத்தைப் பற்றியோ, தமக்குள்ள சொந்தக்கொள்கைகளை மதமெனக்குறிப்பிடுகிறார்கள். மதமென்பது முதன்மையாக ஒரு சமுதாய நிகழ்ச்சி அல்லது சம்பவமாகும். (Social Phenomena) கோவில்உண்டாவதற்குத் தீவிரமான சொந்தக்கொள்கைகள் உடைய ஆச்சாரியார்கள்காரணமாக இருக்கலாம். ஆனால் அவர்கள் நிறுவிய கோவில்களில் அவர்களுக்கு அவ்வளவு செல்வாக்கும் அதிகாரமுமிருப்பதில்லை. இவ்வாறு ஏற்பட்ட கோவில்களும், மடங்களுமோவெனில் தாம் செழித்தோங்கிய சமுதாயத்தினிடையே அளவிறந்த செல்வாக்குடையனவாகவிருந்தன. உதாரணமாக புத்தரது அல்லது எசுநாதரது உப்தேசங்களை எடுத்துக்கொள்வோம். அவைகளுக்கும் நடைமுறையிலிருக்கிற பௌத்தர்கள் அல்லது கிறிஸ்தவர்கள் அனுஷ்டிக்கிற ஒழுக்கத்திற்கும் சம்பந்தமேயில்லை. சமுதாயம் அல்லது சரித்திர சம்பந்தமாகப் பார்க்கும்பொழுது கிறிஸ்து மார்க்கத்தில் முக்கியமானது கிறிஸ்து அல்ல. ஆனால் கிறிஸ்துவ கோவில்களாகும். கிறிஸ்துவ மார்க்கத்தை ஒரு சமுதாய எழுச்சி என்ற முறையில் பரிசீலனை செய்யப் புகுந்தால் கிறிஸ்துவின் உபதேசங்களில் யாதொரு பலனும் கிடைக்காது. கிருஸ்து உங்களுடைய பொருள்களை ஏழைகளுக்கு அளிக்கவேண்டுமென்றும், சண்டையிடக்கூடாதென்றும், சோரம் செய்வதைத் தண்டிக்கக்கூடாதென்றும் போதனை செய்தார். ஆனால் எவ்வகுப்பு கிருஸ்தவர்களும் இவைகளைப் போற்றி பின்பற்றுவதில்லை. அதேமாதிரி புத்தரும் அன்பும் அறிவும் உடையவராக இருந்தார். மரணத தருவாயில் தான் இறக்கப்போவதில்லை யென்று நம்பியிருந்த தனது சிஷ்யர்களைக் கண்டு சிரிசித்தார். பௌத்த மதப் பூசாரிகளோ விநோதத்திலும் கொடுமையிலும் குரூரத்திலும் சிறந்த சிகாமணிகளாக இருக்கிறார்கள்

ஒரு ஆலயத்திற்கும், அதன் ஸ்தாபகருக்கும் இல்வித விதியாசமிருப்பதில் யாதொரு அசம்பாவிதமும் கிடையாது. ஏனெனில், ஏதாவது ஒரு மனிதனின் வார்த்தைகளில் என்றுமிறவாப் பூரா உண்மையும் அடங்கி இருப்பதாகக் கருதப்பட்ட உடனே அவைகளை விளக்கிக் காட்டுவதற்காக மேதாவிகள் கூட்டமொன்று ஏற்படுகிறது- இம் மேதாவிகள் அவ்வுண்மையெனும் பெட்டகத்தின் சாவியை வைத்திருப்பதால் தாறுமாறு பெரும் அதிகாரம் படைத்தவராகிறார்கள். சிறப்பாகத் தமக்கென உரிமைகளையுடைய வேறெந்தச் சாதியையும் போலவே இவர்களும் தங்களது அதிகாரத்தைத் தம் சுயநலத்திற்காகவே உபயோகப்படுத்துகிறார்கள். ஆனால் ஒருவிதத்தில் இம்மேதாவிகள் தமக்கெனப்பட்ட உரிமையுடைய ஜாதியினரிலும் கீழ்மையானவர்களாகயிருக்கிறார்கள். ஒரே தடவையில் பூரண ஞானமாக தெரிவிக்கப்பட்ட, என்றும் மாறுத உண்மையை விளக்குபவர்கள் என்ற முறையில் அவர்கள் எவ்விதமான ஒழுக்கவளர்ச்சிக்கும், அறிவு வளர்ச்சிக்கும் விரோதிகளாகிறார்கள்- முன்னர் காலிலியோ, டார்வின்போன்ற அறிவாளிகளுக்குக் கிறிஸ்தவக் கோவில் விரோதமாக இருந்ததும், இக்காலத்தில் வேதங்களையும், சாஸ்திரங்களையும் வியாக்கியானம் செய்பவர்கள் தீண்டாமையை ஒழிப்பதற்கு விரோதமாக விருப்பதும் உதாரணங்களாகும். மதமானது அறிவு வளர்ச்சிக்கின்றி, ஒழுக்க வளர்ச்சிக்கும் பெருங்கேடாக இருக்கிறது. எப்படியெனில் மனிதவின்பத்திற்கு மாறான ஒழுக்கக் கட்டுப்பாட்டுகளைப் பிறப்பிக்கின்றது. அடிமை முறையை (Slavery) ஒழிப்பதற்கு விரோதமாக கூடுமானவரையில் கிறிஸ்தவக் கோவில்கள் உழைத்தன' அதேமாதிரியாகப் பொருளாதார நிலையில் நியாயம் தரத்தக்க எந்த இயக்கத்தையும் மதம் எதிர்த்துப் போராடுகின்றது. கத்தோலிக்க மதத்தலைவரான போப் (Pope) பொதுவுடமையை (Socialism) கண்டிக்கிறார்.

மதத்தினுடைய மிகக் கேவலமான குணம் என்னவென்றால் அதற்குப் பெண்பாலிடத்துள்ள மிகத் தாழ்மையானதும், இயற்கை விரோதமான வெறுப்பாகும். மதங்கள் மங்கையர் தம் பதவியை உயர்த்த உதவியதாகச் சிலர் சொல்லக் கேட்கிறோம், இதனினும் சரித்திரத்திற்கு நேர் மாறான கூற்று வேறொன்றும் கிடையாது. எந்த சமுதாயத்தில், ஒரு இறுகிய, கட்டுப்பாடான ஒழுக்க முறையிலிருந்து அணுவளவும் விலகாது நடப்பது பெண்களுக்கு மிகவும் முக்கியமானதாகக் கருதப்படுகிறதோ, அந்த சமுதாயத்தில் பெண்கள் ஒரு சகிக்கக்கூடிய பதவியை அனுபவிக்கமுடியாது. அறம் கொல்லப் பிறந்த தொல்லுக்காகவும் காம இச்சைகளை கிளப்பும் இம்சைகளாகவுமே மாதர்களை பல மதாச்சாரியர்களும் குருக்களும் கருதினர். ரிஷிகளின் தவ வன்மையை சோதிக்கவும் கெடுக்கவும் ஊர்வசி, ரம்பை போன்ற தேவ மாதர்களை அனுப்பப் பட்டதாகக் கூறும் புராணக் குப்பைகளிலுள்ள பொருளுமிதுவே. கன்னிகையாக இருப்பதே நலம் அது முடியாதாயின் மணம் செய்து கொள்ளலாமெனக் கிறிஸ்தவ மார்க்கம் போதித்தது. "காமத்தீயினுல் எரிக்கப்படுவதினும் மணம் புரிந்து கொள்ளலாம்" என்றார் செயீன்ட் பால்' என்னும் மதாச்சாரியார்.

மணவினையை ஏற்போரைஎன்றும் பிரிந்து கொள்ளுவதற்கு முடியாதவர்களாக்குவதின் மூலம், மதம் தான் அனுமதித்த ஒரே விதமான ஆண் பெண் சேர்க்கைக்கும், அளவிலாத துன்பமும் சிறிதளவே இன்பமும் தந்தது. ஹிந்து மதத்தில் இதனின்றும் ஆடவருக்கு மட்டும் விலக்குண்டு. கருப்பத் தடைக்கு விரோதம் பாராட்டுவதும் இந்நோக்கமே உடையது. ஒரு பெண் வருடந்தோறும் பிள்ளை பெற்று வைத்து வாடுவாளேயானால் அவளுக்கு மண வாழ்க்கையில் யாதொரு இன்பமும் கிடைக்கப் போவதில்லை. ஆகையால் கருப்பத்தடையை அனுமதிக்கக் கூடாதென்றது மதம்.

இன்னும் மதங்கள் "பாவம்" என்பதைப் பற்றிக் கொள்ளும் பொருள் மக்களுக்கு பெருந்தீமை உண்டாக்கத் தக்கதாக விருக்கிறது. அப்பொருள் தங்களுக்கு ஞாயமானதாகவும், உயர்வானதாகவும் கூட கருதுகிற சோர்வுத் தன்மையை வெளிப்படுத்தும்படிக்கு உதவுகிறது. பல கொடிய தொத்து வியாதிகளை தடுப்பதற் குண்டான முறைகளை யாவர்க்கு மூணர்த்துவதின் மூலமாக அதை வரவிடாது செய்யலாம். ஆனால் பல மதங்கள் பாவிகள் தண்டிக்கப்படுவது நலமென்றபோலி நியாயம் காட்டி. இதற்கு இடையூறு செய்கின்றன. இத்தண்டனை யாதொரு பாவமும் செய்யாத அவர்களது மனைவி, குழந்தைகள் முதலியோருக்கும் கிடைத்தல் ஞாயமன்தென்பர். ஐரோப்பாவிலும் உலகத்திலும் அநேக ஆஸ்பத்திரிகளில் ஆயிரக்கணக்கான குழந்தைகள் சிபிலிஸ் (Syphilis) என்னும் கொடிய ரோகத்திலுல் அவதிப்படுவதற்கு கிறிஸ்துவ மதத்தின் பாவக்கொள்கையே காரண பூதமாகிறது. இத்தகைய பேய்த்தனமான கொடூரத்திற்கு காரணமாகும் கொள்கைகள் எவ்வாறு ஒழுக்க உலகில் உதவிதரு மென நமக்குப் புரியவில்லை. இதே மாதிரியாக ஆண் பெண் சம்பந்தமான விஷயங்களைப்பற்றிய அறிவையும் அறவே ஒதுக்கி தள்ளிவைக்க வேண்டுமென்று மதங்கள், அதிலும் கிறப்பாக கிறிஸ்துவ மதம் போராடுக்காண்கிறோம். இவ்விதமான கொள்கையின் மூலமாக இவ்விஷயத்தில் ஏற்படுத்தப்படும் கட்டாய மூட்டத்தனமானது குழந்தைகளிடத்து ஆண் பெண் சம்பந்தத்தைப்பற்றிய ஏனான கேவல புத்தியை உண்டாக்குவதோடு அவர்கள் உடல், மனநிலைகளையும் பாதிக்கக்கூடியதாக இருக்கிறது என்றும் எவ்விஷயத்திலும் அறியாமை நன்மை தருவதில்லை. அதிலும் இவ்விஷயத்தில் உண்மையானவற்றை தெரிந்து கொள்ளுதல் மிகவும் அவசியம். ஒரு முக்கியமான விஷயத்தை தெரிந்து கொள்ள எழும் இயற்கையான ஆசையைப்பாவமெனக்கண்டிப்பது பெரு மூடத்தனமாகும. குழந்தைகளையும் இளைஞர்களையும் இவ்விஷயத்தை பாவமெனக்கருதுங்படி கட்டாயப்படுத்தி செய்து விட்டபடியால் அவர்கள் பின்னால் வாழ்க்கையில் பயங்கொள்ளிகளாகவும் மூடர்களாகவும் இருக்கிறார்கள்.

இதற்குமேலாக மதங்களுக்கு அடிப்படையான கொள்கைகள் அவைகளைநாம் அங்கீகரிக்கு முன்னதாக, ஒழுக்கத்தை பலவிதத்திலும் தலைகீழாகச்செய்து விடுகின்றன. சர்வவல்லமையுள்ள நல்லவரானஒரு கடவுள் இந்தஉலகத்தை சிருஷ்டித்ததாகச்சொல்லப் படுகிறது. அவர் அவ்விதம் சிருஷ்டிக்கு முன்னரே அதில்வாளையும் இன்பம் துன்பங்களைக்கண் டறிந்திருக்க வேண்டும். ஆகையால் அவரே அவையாவற்றிற்கும்பொருப்பாளி எனவே உலகில் ஏற்படும் துன்பங்களுக்குப்பாவங்கள் தான் காரணமெனக்கூறுதல் பொருந்தாது. முதலாவது இதுஉண்மையல்ல. ஆறுகள் கரைபுரண்டோடுவதையும் எரிமலைகள் ஊர்களைத்தீயிடுவதையும் பாவங்கள் உலகில்உண்டாக்குவதில்லை. துன்பங்களுக்கு பாவமே காரணமென வைத்துக் கொண்டாலுங்கூட. கடவுள்முன்னதாகவே மனிதர்கள் செய்யப்போகும் பாவங்களை உணர்ந்திருந்தும் அவர்களைச் சிருஷ்டிக்கத் துணிந்தாராதலால், அவரேஅதனால் விளையும்பலாபலன்களுக்கு ஜவாப்தாரியாகிறார். மதமானது நமக்கு விளையும்துன்பம் பாவத்தைக் களைவதற்கு சாதனம் என்றுபோதிக்கிறது. இவ்வாதமானதுமனிதனுடைய சோர்விலிருந்

இந்திய சாமான் பிரசாரமா? பார்ப்பன பிரசாரமா?

மயிலை பார்ப்பனர்களின் புதிய வேஷம்.

ஹிந்தியை மண்டையிலடியுங்கள்.

(சென்னை ஸ்ரீமதி எ. சுந்தரி எழுதுவது)

நமது மாகாணப்பார்ப்பனீயம் மீண்டும் புத்தம் புதியசூழ்ச்சிகளைச்செய்து, புதுப்பெயர்களுடன் தலையெடுக்க ஆறம்பித்திருக்கிறது. இம்மாகாணத்தில் உள்ள நம்மவர்களை இதுவரையில் யேமாற்றி வருவதற்கு, மாகாணப் பார்ப்பனீயத்தின் உற்றதுணையாகவும், ஆயுதங்களாகவும்இருந்து வந்தசகல சங்கங்களும், சர்க்காரால்சட்ட விரோதமானவைகள் என்று பகிறங்கப்படுத்தப்பட்ட பின்பு, அச்சங்கங்களின் தலைவர்களாகவும், ஊழியர்களாகவும், உள்ளவர்களில்பெறும் பான்மையோர் விலகியும்,எஞ்சியவர்கள் சிறைக்கும் சென்றபின்பு, பார்ப்பனர்கள் நிலைபரிதாபகறமாகவேஇருந்தது. தங்களாயுதங்களான. காங்கிரஸ், சுதேசியம், தொண்டர்சபை, தேசியசபை, சேவாதளம், அநுமந்தர்படை, மாதர்கள் தேசியசங்கம், என்பதுபோன்றசகல ஆயுதங்களும், முனைமழுங்கி, விட்டதால் நீண்டகால யோஜனைக்குபின்பு நமதுமாகாண பார்ப்பனர்கள் புதிதாகஇரண்டு ஆயுதங்களைத் தயார் செய்திருக்கிறார்கள்.

°° °°

அவைகள்தான்.

"தெஷிணபாரதஹிந்தி பிரசார சபை"

"இந்தியசாமான்கள் பிரசாரசபை"

இம்மாதத்தில் இவ்விருசங்கங்களைப்பற்றிநமது மாகாணத்தில்பிரபலமாகஎல்லாபத்திரிக்கை களிலும் செய்திகள்வந்துவிட்டது. இப்புறட்டுகளை உணர்ந்துகொள்ள முடியாத நிலைமையில், நமதுபார்ப் பனரல்லாதார்கள் இல்லைஎன்ற நம்பிக்கையினாலேயே, இவ்விருசங்கங்களின் செய்கைகளை பற்றி நாம் எதுவும்இதுவரையில்கூற முற்படவில்லை. சுயமரியாதைக்காரர்கள் இச்சங்கங்களையும் மண்டையிலடித்து உட்காரவைக்கக்கோருகிறோம்.

இச்சங்கங்களிரண்டும் சமீபத்தில் வரவிருக்கும் தேர்தலுக்காக சிருஷ்டிக்கப்பட்டது என்பது தமிழ்நாட்டின்சாதாரண மனிதருக்கும் நன்கு தெரிந்ததே யாகும். இந்தியதேசிய பொதுபாஷையாக- ஹிந்தியையும், இந்தியக்கைத்தொழிலையும் ஆதரிக்க முன்வந்திருக்கும் கனவான்களின் பெயர்களைபார்த் தளவிலேயே இவ்விருசபைகளின் யோக்கியதைவிளங்காமல்போகாது.

°° °°

சனியன்று தாலிகட்டி. செவ்வாயன்றுதாலியறுத்த கனம்வெங்கட்ட

தேஎற்படுகிறது. ஆஸ்பத்திரிகளில் அவதிப்படும் பச்சைக்குழந்தைகளின் துயரத்தைக்கண்டோர் யாரும்அக்குழந்தைகளின் பாவத்திற்குஇத்தண்டனைபொருந்து மெனக்கூரமுன் வரார். அவர்கள் அப்படிச்சொல்வார்களேயானால் அவர்கள்தாம் நம்புகிற கடவுளைப்போன்றே கல்மனதுடைய கொடியர்களாக இருக்கவேண்டும்.

(தொடரும்.)

ரூமசாஸ்திரிகளும்- தொழிலாளர்களின்உயிர்என்று தன்னைப்பிதற்றித்திரியும்மற்றுமோர் பஞ்சாங்கப்பார்ப்பனரானசிவரூவின் கூட்டுரவாலும் தோன்றியுள்ள இந்தியசாமான்பிரசாரசபையைப்பற்றி கூறுவதற்கு முன்பு, ஹிந்தியைப்பற்றி. சிலவார்த்தைகள்கூறவிரும்புகிறேன்.

°° °°

தக்ஷணபாரத ஹிந்திபிரசாரசபை விண்ணப்பம் என்ற, பெயருடன்ஓர் செய்தி பத்திரிக்கைகளில் வந்தது அதில் 50 கனவான்களுக்கு குறையாது. ஒப்பம்-என்பதற்குக் கீழ்பெயர் போடப்பட்டிருந்து. இவ்வைம்பது பெயர்களில்பாதிபெயர்கள்பார்ப்பனர்கள்என்பது ஒருபுறமிருக்க, இவ்விவாப்பம்எப்பொழுது, எதன் பேரால் அக்கனவான்களிடம் வாங்கப்பட்டது என்பது வெளியாலேயே, ஹிந்திகமிட்டியின் பார்ப்பனீய சூழ்சிஅதிகம் தெரியும்அதில்உள்ள 3—4 கனவான்களின்பெயர் எப்படியோஅதில் சேர்க்கப்பட்டிருக்கிறது. அவர்கள் பெயர்கள் இருப்பதாலேயே அக்கையொப்ப கூட்டத்திற்கு சற்று மதிப்புக்கொடுக்கலாம் எனினும்எத்தகைய, பேரோ, புகழோ செல்வாக்கோ, உள்ள மிகபெரியவர்களாலும் இம்மாகாண பார்ப்பனரல்லாதாரை அடியுடன் அழிக்கவும்; கேவலப்படுத்தவும் செய்யப்படும் ஓர் செய்கைக்கு, உடந்தையாக யார் இருந்தாலும், அவர்கள் செய்கை பொறுப்பற்றது என்று நாம் எண்ணும் போது;அதை எடுத்துக் காட்டாமலிருப்பதற்கில்லை.

* *

ஹிந்தியை ஆதரித்தும், 50000 கொடுக்கவேண்டுமென்றும்கையொப்பம் போட்டுக் கொடுத்தவர்களில் முக்கால்பாகத்தினர்கள் பெயரையும், இந்திய சாமான் பிரசார சபையில் உள்ளவர்களில் இரண்டொருவர் போக மிருதியுள்ளவர்கள் பெயர்களையும் இது வரையில் நமது இயக்கத்துக்கும், ஜஸ்டிஸ் கட்சிக்கும், டாக்டர் சுப்பராயன் அவர்களின் தனிமுற்போக்கிற்கும், அம்முயற்சிக்கும் எதிரிடையாக இருந்தவர்கள்-எதிரிடையாக தனித்தனி சங்கங்கள் நிருவி நம்மை எதிர்த்தவர்கள் என்று ஓர் லிஸ்டு தயாரித்தால் அப்பொழுது ஹிந்து புரட்டர்கள்-இந்திய சாமான் பிரசார புரட்டர்கள் இவர்கள்யோக்கியதைநன்கு விளங்கி விடும்.

°° °°

தக்ஷிண ஹிந்தி பிரசார சபையில் கையெழுத்திட்டவர்களின் செய்கையைப் பற்றி கூறு முன்பு அப்பிரசார சபையை ஒன்று கேட்கிறோம்.

1. இந்நாட்டில்- பதின்மூன்றுவருடமாக வேலை செய்ததாகச் சொல்லப்படுகிறதே இவ்வருடங்களில் இருந்த உத்தியோகஸ்தர்கள் பெயர்கள்-வரவு செலவுகள் இதை வெளியிட முடியுமா?

2. 400 லட்சம் ஜனங்கள்வசிக்கும்இம்மாகாணத்தில்ஐந்துலட்சம்பேர் ஹிந்தி கற்றுக் கொள்ளுகிறார்கள்என்பதில் கற்றுக் கொள்ளும் மக்களின் ஜாதிக்கணக்கு வெளியிடுவார்களா?

3. 13-வருடத்தில் கற்றுக்கொண்டதாக வந்த பெயரின் மொத்த அளவு நான்கரை லட்சமா? தொடர்ந்தே இவர்கள் படித்து வருகிறார்களா?

4. இதுவரையில் 5-லட்சம் பிரதி அச்சிறுத்தியதில் - 472 பிரதிகள் விற்றது என்றால் இது ஹிந்தி இந்நாட்டில் அதிகம் பரவுவதை காட்டுகிறதா?

5. பூரண யோக்கியதை பெற்ற 300 ஆசிரியர்களை அனுப்பி இருப்பதாக சொல்லப்படுகிறதே அவர்கள் பெயரும், ஜாதியும் வெளியிடுவார்களா?

6. தென்னிந்தியாவில் 850இடங்களில் இப்பொழுது ஹிந்திபோதனை நடந்து வருகிறது என்பது உண்மையா?

7. உண்மையானால் அவ்விதம் நடக்கும் ஊர்-இடம், இவைகளையாவது சபையார் வெளியிட தயாராக இருக்கிறார்களா?

8. இவைகள் எல்லாம் போதாதென்று ஹிந்திபாஷையை பறப்புவதே தனது வாழ்க்கையின் பணியாக கொண்டும், ஹிந்தி தான் நமது தேசிய பாஷையாக இருக்க முடியும் என்ற தத்துவத்தை ஒவ்வொருவருக்கும் தெரிவிக்கிறவர்களாக 50 பிரசாரகர்களை சபை இப்பொழுது நேரில் ஆதரித்து வருகிறது, என்றும் சொல்லப்படுகிறதே! இத்தியாகிகளின் முழு விபரங்களை-தெட்சணை ஹிந்தி சபையார் வெளியிட்டு மக்கள், அத்தியாகிகள்யார் யார் என்று உணரும்படி செய்வார்களா?

9. இவர்களில் மாதம் 150, 250 என்று சம்பளம் பெற்றவர்களில்-6-7 பெயர்கள் இன்று நடக்கும் சட்ட மறுப்பில் கிராமங்களுக்கு சென்று மதியலுக்கு தொண்டர்களை ரகசியமாக சேர்த்தார்கள் என்பதற்குக்குற்றம் சாட்டப்பட்டு சிறை புகுந்திருப்பதை ஹிந்திசபை பகிரங்கமாக ஒப்புக் கொள்ளுமா?

10. இந்த 5, 6 பெயர்கள் சிறையில் இருக்கும்காலங்களுக்கும்ஹிந்தி சபையே மாதா மாதம் 50, 60 பணம் அவர்கள் குடும்பம்களுக்கு கொடுத்து வருவதை நாம் விபரமாக எடுத்துக் காட்டு முன்பு-ஹிந்தி சபையாரே அதை வெளியிடுவார்களா?

11. ஹிந்தி கட்டிடம் கட்ட ரூ. 50000 வாங்குவதற்காக பொதுஜனங்கள் மலைக்கும்படியும்-பிறமிக்கும்படியும் தெட்சணை ஹிந்தி சபையானது மிக பிரமாதமாக வேலை செய்து வருவதாகவும், அதற்கு பார்ப்பனரல்லாதாரிலேயே பெரும் பான்மையானவர்கள் பெயர்கள் ஆதரவு இருப்பதாகவும் பார்ப்பன பத்திரிகைகளில் பக்கம் பக்கமாய் போடுவது பார்ப்பனரல்லாதாரை ஏமாற்ற என்பதில் ஆட்சேபணை ஏதேனும் உண்டா?

நமது சிறு சந்தேகங்களுக்கு பதில் அளிக்குமாறு தெட்சணை ஹிந்தி பிரசார சபையைக் கேட்டுக் கொள்வதுடன் அதில் கையொப்ப மிட்ட கனவான்களில் பொறுப்புள்ளவர்கள் யாராவது இருப்பவர்கள் இதைப் பற்றி முயற்சி எடுத்துக் கொள்வார்கள் என்றும் நம்புகிறோம்.

(தொடரும்.)

தோழர் அ. பொன்னம் பலனார் அவர்களின் நாகை விஜயம்.

நாகைசுயமரியாதை சங்கஅங்கத்தினர் தோழர் வி. சாமிஞதன் அவர்களின் திருமணம் நாகைக்கடுத்தஅந்தணர்பேட்டையில் மாயவரம்தோழர் சி. நடராஜன்அவர்களின் தலைமையில் 3-4-32 ஞாயிற்றுக்கிழமைகாலை 10மணிக்கு நடைபெறும்.

புதுவைமுரசு ஆசிரியர் தோழர் அ. பொன்னம்பலனர் அவர்கள் சுயமரியாதைகொள்கைப்படி திருமணத்தைநடத்திவைப்பார்கள் அன்றுமாலை 5மணிக்கு பொதுக்கூட்டமும், மறுநாள்நாகை நாகூர், சிக்கில், முதலியவிடங்களில் தொடர்ந்து பலபொதுக் கூட்டங்களும் நடத்தத்தக்க ஏற்பாடுகள்நடைபெற்று வருகிறதுஎனநாகை சுயமரியாதை சங்கக்காரியதரிசி எழுதுகிறார். ——

மரணம்.

பெரியகுளம் வடகரையில்பிரபல வியாபாரி சு. காமாக்ஷிநாயுடு காரு அவர்களின் இரண்டாவது மனைவி நாச்சாரம்மாள்27-3-32ந்தேதிமரணமடைந்தாரெனஒருநிருபர்எழுதுகிறார்.

பகுத்தறிவு (அல்லது) கத்தோலிக்க குரு, "ஜீன்மெஸ்லியரின்" மரணஸாசனம்.

(மொழிபெயர்ப்பாளர் எஸ். குருசாமி பி. ஏ.)

கட்டுரை 13.

காப்பி, ரைட்..

(முன் தொடர்ச்சி)

51 மனிதனைச் சந்தோஷப் படுத்துவதே தான் கடவுளின் நோக்கமா?

கடவுள் உலகத்தைப்படைத்ததின் முழு நோக்கமும் மனிதனைச் சந்தோஷப்படுத்வதற்காகவே என்று சொல்லப்படுகிறது. ஆனல், மனிதனுக்காகவே உண்டாக்கப் பட்டும், சர்வ வல்லமையுள்ள கடவுளால் அரசு செலுத்தப்பட்டும் வரும் இவ்வுலகத்தில், மனிதன் உண்வையாகவே ரொம்ப சந்தோஷமாகவே இருக்கிறானு? அவன் அனுபவிக்கும் சுகங்களெல்லாம் அழியாமல் இருக்கின்றனவா? மனிதனுடைய சந்தோஷங்களில் துன்பங்களும் கலந்து இருக்கின்றனவே? தங்களுக்குக் கிடைத்ததைக் கொண்டு திருப்தியடைகின்றவர்கள் நூற்றுக்கு எத்தனை பேர் இருப்பார்கள்? மனித சமூகமானது தேக சம்பந்தமான கெடுதிகளுக்கும் தானே சதா ஆளாய்க் கொண்டே யிருக்கிறது? கடவுளினுடைய தொழிலிலேயே முதல் தரமான வேலைப்பாடு என்று சொல்லப்படும் இந்த மனித இயந்திரமானது எத்தனை ஆயிர விதங்களில் கெட்டுப் போகக்கூடியதாய் இருக்கிறது? மிகவும் சிக்கலான ஒரு இயந்திரம் அந்த இயந்திரமும் எந்த நிமிஷத்திலும் சீக்கிரம் கெட்டு போகக் கூடியதாகவும், அதுவும் கொஞ்ச நாளில் அழிந்து போகக்கூடியதாகவும், இம்மாதிரி யெல்லாம் இருக்கின்ற ஒரு இயந்திரத்தைச் செய்த ஒரு இயந்திர வேலைக்காரனின் மூளையை நாம் சிறப்பித்துக் கூற முடியுமா?

52. கடவுள் என்ற வார்த்தைக்கு அர்த்தமே இல்லை.

கடவுள் நம்முடைய தேவைகளையெல்லாம் பூர்த்தி செய்து, நமக்கு சந்தோஷத்தையும், கொடுத்து, நம்மை ரக்ஷிக்கிறபடியால் அவரை ரக்ஷகன் என்று அழைக்கிறோம். ஆனால் உண்மை என்னவென்றால், நம்மைச் சுற்றி நன்கு பார்ப்போமானல், நமக்காக கடவுள் ஒன்று கூட அளிக்கவில்லை யென்பதை உணரலாம். ரக்ஷகராகிய கடவுள் இவ்வுலகிலுள்ள பெருவாரியான மக்களை உதாசீனப்படுத்தியே இருக்கிறார். ஏதோ ரொம்ப சிறு தொகையினரான மக்கள் சந்தோஷமாகஇருப்பது போல் தோன்றினாலும் எவ்வளவு கோடான கோடி மக்கள் துன்பத்திலும் கொடுமையிலும் சிக்குண்டு கதறுகிறார்கள்! ஏதோ சில கொடியவர்கள் சுகம் அனுபவிப்பதற்காக எவ்வளவு தேசங்கள் பட்டினியாலும், வறுமையினாலும், வாடும்படி நேரிடுகின்றன. ஆனல் நமது தத்துவ ஞானிகளோ கடவுளின் பரோபகாரத்தைப்பற்றி மாத்திரம் சாங்கோபாங்கமாக வாய்கிழியக்கத்துவதில் குறையவில்லை 'கடவுள் எதிர்பாராத விபத்துக்களை உண்டாக்குவதிலிருந்தே மனிதனுடைய எண்ணங்கள் நிறைவேறுமலிருப்பதற்காக கடவுள் விளையாடுகிறார் என்பது தெரியவில்லையா'? என்று கேட்கிறார்கள் 'மனிதர்களை அவர்கள் வழிகளிலிருந்தும் திருப்பி அவர்களுடைய முயற்சிகளைக் கண்டு கடவுள் பரிகசித்து அவர்கள் முயற்சிகளைத்தோல்வியடையும்படி செய்வதிலிருந்தே அவரை எல்லோரும் நம்பவேண்டும் என்பது விளங்கவில்லையா?" என்றுஇம்மேதாவிகள் கேட்கிறார்கள். ஆனல் நான் கேட்பது என்னவென்றால் நம்மைப்பரிகசித்து நம்முடைய துன்பத்தில் சந்தோஷப்படும் குரோத குணமுடைய ஒரு கடவுளிடத்தில் நாம் எப்படி நம்பிக்கை வைக்கமுடியும் என்பதேயாகும். ஒரு மறைவான அறிவை அதனுடைய நடவடிக்கைகளே எனக்கு விளங்காமலிருக்கும் பொழுது—எப்படி நான் புகழமுடியும்? அதனுடைய பலன்களைக் கொண்டு நிர்ணயிக்கவேண்டும். என்று நீங்கள் சொல்வீர்கள்..ஆம் பலன்களைக்கொண்டுதான் நிர்ணயிக்கிறேன். ஆனல் அந்தப்பலன்கள் சில சமயம் எனக்கு நன்மையாகவும் சிலசமயம் தீமையாகவும் ஏற்படுகிறதே என்பதுதான் என துகேள்வி.

'இல்லை, இல்லை கடவுளை அவ்வாறு நிர்ணயிக்கக்கூடாது. ஒவ்வொரு தனிப்பட்ட மனிதனும் கஷ்டத்தைவிட அதிகமான சுகமே அநுபவிக்கிறானுதலால் அதைக்கொண்டே கடவுள் இருப்பதைத் தீர்மானித்துக்கொள்ளவேண்டும்' என்பீர்கள் சரி அப்படியேவைத்துக்கொள்வோம். இந்தக்கடவுள் நமக்கு 100 நன்மைகளைக்கொடுத்திருப்பதாகவும், அதில் 10 மாத்திரம் தீமைகள் என்றும் வைத்துக்கொள்வோம் அப்படியானல் கடவுளுக்கு இருக்கும் ஒவ்வொரு 100 நல்ல குணங்களுக்கும் பத்தில் ஒரு பங்கு குரோத புத்தியும் இருக்கிறது என்பதை ஒத்துக்கொள்ளவேண்டாமா? இதை ஒத்துக்கொண்டால் கடவுள் பரிபூர்ணமானவர் என்று சொல்லப்படுவதற்கு முரணாக ஏற்படவில்லையா?

எல்லா புத்தகங்களும் கடவுளைப்பற்றியும் அவருடைய ரக்ஷிக்கும் குணத்தைப்பற்றியும் பிரமாதமாகப் புகழ்கின்றன. அவைகள் சொல்வதைப்பார்த்தால் மனிதன் இவ்வுலகில் சந்தோஷமாக வாழவேண்டுமானல் கொஞ்சங்கூட சிரமப்படவேண்டியதில்லைபோல் தோன்றுகிறது. ஆனல் அதற்கு விரோதமாக மனிதன் ஏதேனும் ஒரு தொழிலைச் செய்யாமல் ஒருநாள் கூட வசிக்கமுடியவில்லை என்பதைக்காண்கிறோம். மனிதன் தன்னுடைய வாழ்க்கையை நடத்தும் பொருட்டு கொஞ்சமும் ஓய்வின்றி ஓடியும், ஆடியும், நெற்றி வேர்வை நிலத்தில் விழப்பாடுபடவேண்டியிருக்கிறதென்பதை என் கண்முன் பார்க்கிறேன். இந்த மாதிரி இரண்டாவது காரணங்களில்லாமல் முழுமுதற்காரணத்தால் மாத்திரம் (கடவுள்) மனிதன் தன்னுடைய தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ள முடியவில்லையென்பதையும் பார்க்கிறேன். இப்பூகோளத்தில் சகல பாகங்களையும் நான் பரிசீலனை செய்யும்போது நாகரீகம் அடைந்தவனுயிருந்தாலும்சரி, நாகரீகமே தெரியாதவனுயிருந்தாலும் சரி, இருவரும் கடவுளோடு சதா போராடிக் கொண்டிருப்பதையே காண்கிறேன், ரக்ஷகராகிய கடவுளால் அனுப்பப்படும் புயல்காற்று கள், பனிக்கட்டி, வெள்ளம், பஞ்சம், நோய்முதலியவைகளால் தன்னுடைய வேலைகள் பாழாய்ப் போகாதபடி காத்துக்கொள்வதில் மனிதன் சதா கஷ்டப்பட்டுக்கொண்டிருப்பதையும் என் கண்முன் காண்கிறேன். சுருக்கமாகக்கூறவேண்டுமானல் மனிதர்களுடைய சந்தோஷத்திலேயே சதா கண்ணுங்கருத்துமாக இருந்துவேலை செய்துகொண்டிருப்பதாகச்சொல்லப்படும் கடவுளால் செய்யப்படும், மிகக்கொடுமையான, வேடிக்கைகளினின்றும் மனித சமூகமானது தன்னைக் காப்பாற்றிக்கொள்வதற்காக சதா பிரயத்தனப்பட்டுக்கொண்டிருப்பதைக் காண்கிறேன். அறிவு சொரூபியான கடவுளானவர் மக்கள் உண்டாக்கி யிருக்கும் பெரிய நகரங்களிலெல்லாம் ஆறுகள் ஓடும்படி அநுபுத்திசாலித்தனமாக ஏற்படுத்தி யிருப்பதைப் பற்றி கடவுளை ஒரு பக்தன் மெச்சிக்கொண்டானும். ஆறுகளிருக்கும் இடத்தில் மனிதன் பட்டணங்களை உண்டாக்கிக் கொண்டானு அல்லது பட்டணங்கள் இருந்த இடத்தில் கடவுள் ஆறுகளை உண்டாக்கினாரா ஞரா, இதில் எது முதற்காரணம் என்பதை அறியாத பக்தன் போலவே தான் எல்லா மதக்காரர்களும், தர்க்கம் செய்கிறார்கள்.

53. கடவுள் மனிதனுடைய நண்பன் அல்ல; கொடுமையான விரோதி.

அதெல்லாம் போகட்டும் கடவுளானவர் தன்னுல் படைக்கப்பட்ட அபூர்வமான வேலைகளை அப்படியே பத்திரமாக வைத்துக் காப்பாற்றுவதற்காக, அவருடைய சமர்த்தை நாம் மெச்சிக் கொள்ளலாமா என்பதையாவது சற்று கவனிப்போம். ரக்ஷகரான கடவுள் தான் இவ்வுலகத்தை ஆளுகிறார் என்றும், அவர் உண்டாக்குவதில் எவ்வளவு சுறுசுறுப்போடு இருக்கிறாரோ, அவ்வளவு சுறுசுறுப்பாகவே அவைகளை அழிப்பதிலும் இருக்கிறார்! மனிதர்களைப் படைப்பதற்கும் அவர்களைக் காப்பாற்றுவதற்கும் எவ்வளவு அக்கரையும் சிரமமும் எடுத்துக் கொள்ளுகிறாரோ அதைவிட வெகு லெகுவாக நினைத்த க்ஷணத்தில் அவர்களை ஆயிரக்கணக்காய் ஒரே மூச்சில் அழித்துவிடுகிறாரே! ஒவ்வொரு நிமிஷமும் தான் படைத்த அருமை ஜீவன்களைப் புறக்கணித்தபடி தானேஇருக்கிறார். அவர்களினு

தொடர்ச்சி 13-ம் பக்கம் பார்க்க

குடி அரசு.

ஈரோடு 1932 எப்ரல்மீ 3-உ

சுதேசிப் பிரசாரம்.

—:o:—

நமது நாட்டின் பொருளாதாரத்துறையை விருத்தி செய்ய வேண்டுமென்பதிலும் இதற்கு ஆதாரமான தொழில்களை அபிவிருத்தி செய்ய வேண்டுமென்பதிலும், நாம் யாருக்கும் பின் வாங்கியவர் அல்லோம் என்பதை நமது மகாநாடுகளில் அவ்வப்போது நிறைவேற்றப் பட்டிருக்கும் தீர்மானங்களைக் கொண்டு அறியலாம்.

பொருளாதாரத் துறையிலும் தொழில் அபிவிருத்தியிலும் நாம் முன்னேற்றமடைய வேண்டுமானால் கூட்டுறவுத் தொழில் முறையில் இயந்திரங்களை விருத்தி செய்தால் ஒழிய நாம் வியாபாரத்தில் அன்னிய தேசங்களுடன் போட்டி போட ஒரு நாளும் முடியாது என்பதே நமது கொள்கையாக இருந்து வருகின்றது. இந்த தத்துவத்தைக் கொண்டு தான் நாம், ராஜீயச் சின்னமாக உபயோகப்பட்டு வருகின்ற கதர்த் திட்டத்தைப் பலமாக எதிர்த்து வருகின்றோம்.

அன்றியும் இப்பொழுது காந்தீயத்தினால் ஏற்பட்ட 'சுதேசீயம்' என்னும் பிரசாரம், மக்களை மீண்டும் பழைய மிருகப் பிராயத்திற்கு இழுத்துச் செல்லும் தத்துவத்தையுடையதென்று கூறி அதை அடியோடு கண்டிக்கின்றோம்.

ஒவ்வொரு மனிதனும் தனக்கு வேண்டிய பொருள்களைப் பிறருடைய கூட்டுறவை விரும்பாமல் தானே உண்டாக்கிக் கொள்ள வேண்டும் என்னும் தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டதுதான் திரு. காந்தியின் தேசீயமாகும். இத்தேசீயத்தினிருந்து முளைத்தது தான் கதர்த் திட்டம் என்பதும். மேற்கூறிய "தனக்குத் தானே உதவி செய்துகொள்ளுதல்" என்னும் கொள்கையை அஸ்திவாரமாகக் கொண்டு தான் இப்பொழுது நமது நாட்டு "ராஜீயம்," "தேசீயம்," "காந்தியம்," "சுதேசியம்" ஆகிய எல்லாம் தடை பெற்று வருகின்றன.

மனிதர்கள் உற்பத்தியான பழைய காலத்தில்-அவர்கள் மிருகப் பிராய முடையவர்களாக இருந்த காலத்தில், ஒவ்வொருவரும் தத்தமக்கு வேண்டிய உணவுப் பொருள்களைத் தேடிக்கொண்டு தனித் தனியே வாழ்ந்து வந்தனர். அதன்பின் சிறிது அறிவு விளக்கமான பின்பு தனித்தனிக் குடும்பங்களாக இருந்து வாழ்க்கை நடத்தத் ஆரம்பித்தனர். அதன் பின் தனித்தனி சமூகங்களாகப் பெருகினர். இப்பொழுது எல்லா மக்களும் ஒரே சமூகமாக வாழ வகை தேடுகின்றனர்.

இதைப் போலவே தொழில்களும் கூட்டுறவு முறையில் வளர ஆரம்பித்தன. ஒருவனுக்குவேண்டிய பண்டத்தை அவனே செய்து கொள்ளாமல், ஒவ்வொன்றை ஒவ்வொருவன் செய்யவும், ஒருவன் தான் செய்த பொருளை மற்றொருவனிடம் கொடுத்து தனக்கு வேண்டிய பொருளை அவனிடமிருந்து பெற்றுக் கொள்ளவும்நேர்ந்தது. இதுதான் பண்டமாற்றுதல் என்னும் வியாபாரத்திற்குக் காரணமாகும். இந்த முறையில் தான் பொருளாதாரத் துறையும், தொழில் அபிவிருத்தியும் முன்னேற்ற மடைய முடியும். மக்களுடைய தனித்தனி சமூக அமைப்பும் ஒழிந்து ஒரே சமூகமாக வழியும் உண்டாகும். இந்த முறைதான் தேசத்தின் முற்போக்குக்கு ஏற்ற வழியாகும்.

இதை விட்டு விட்டுத் திரு. காந்தியின் "தனக்குத் தானே உதவி செய்து கொள்ளுதல்" என்னும் தத்துவத்தையுடைய தேசீயத்தைப் பின் பற்றும் தேசம், தொழில் முறையிலும், வியாபாரத்துறையிலும், பொருளாதாரப் பெருக்கத்திலும் வளர்ச்சியடைய முடியாமலும், மக்களுக்குள் சமத்துவமும், சகோதரத்துவமும்உண்டாக முடியாமலும், வருணாசிரம தரும வாழ்க்கையிலேயே இருந்து கொண்டு அநி விரைவாகப் பழைய மிருகப் பிராயத்திற்குச் செல்ல வேண்டியது தான் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை. இதனால் தான் தேசீயமும், சுயமரியாதையும் எந்தக்காலத்திலும்ஒன்று சேர முடியாதென்றும் கூறி வருகின்றோம.

இவ்விஷயங்களையே சென்ற ஆண்டில் விருது நகரில் நடந்த சுயமரியாதை மூன்றுவது மகாநாட்டில் நிறைவேற்றிய.

"பொருளாதாரத் துறைக்கும், தொழில் அபிவிருத்திக்கும், இயந்திர வளர்ச்சிக்கும், சமதர்ம உணர்ச்சிக்கும் கதர்த் தத்துவம் விரோதமாயிருப்பதால் கதர் தேசீயப் பொருளாதாரத்துதொழில் திட்டம் என்பதை இம்மகாநாடு மருக்கின்றதுடன் தொழில் முறை இயந்திர வளர்ச்சியை இம்மகாநாடுஆதரிக்கின்றது."

என்ற தீர்மானமும் வற்புறுத்துகின்றது.

ஆகவே, தேசத்தில் பொருளாதார முன்னேற்றத்தையும், சமூக சமத்துவத்தையும் உண்டாக்க விரும்புகின்றவர்கள் எவரும்இயந்திரங்களினால் செய்யக் கூடிய தொழில்களை யெல்லாம் இயந்திரங்களைக் கொண்டே கூட்டுறவு முறையில் அபிவிருத்தி செய்வதற்கு முயற்சி பண்ணினால்ஒழிய நமது நாடு முன்னேற்ற மடைய முடியாது என்பதை உணர்ந்திருக்க வேண்டியது அவசியமாகும்.

ஆனால் இந்த முறையில் பண்டங்களை உற்பத்தியாக்க நமது நாட்டில் இது வரையிலும் ஒரு முயற்சியும் செய்யப்படவுமில்லை; பண்டங்கள் உற்பத்தியாகவும் இல்லை. ஆனால் அன்னிய நாட்டுப் பொருள்களை பகிஷ்கரிக்க வேண்டும் என்னும் சத்தம் மாத்திரம் பலமாக இருந்து கொண்டு வருகிறது.

இப்பொழுது "பகிஷ்காரக் கூச்சல்காரர்களு"க்கு ஆபத்து உண்டானவுடன் இக்கூச்சலே வேறு விதமாக மாறி "சுதேசிப் பொருள்களை வாங்குங்கள்" என்ற கூச்சலாகப் புறப்பட்டிருக்கின்றது.

உண்மையிலேயே நமது நாட்டில் சுதேசிப் பொருள்கள் உற்பத்தி செய்யப்பட்டிருக்குமானால் அவற்றை வாங்குங்கள் என்று செய்யும் பிரசாரத்தை நாம் வரவேற்பதுடன், நாமும் அந்தப் பிரசாரத்தை மேற் கொண்டு முன்னணியில் நின்று வேலை செய்வோம். ஆனால் நமக்குத்தேவையான சுதேசிப் போருள்கள் கிடைக்காமலும், கூட்டுறவுமுறையில் இயந்திரத் தொழில்களை உற்பத்தி செய்யாமலும், இவ்வாறு தொழில்களைச் செய்யச் சிறிது கூட முயலாமலும், இக்கொள்கையைக் கூட "தேசீய வாதிகள்" ஒப்புக் கொள்ளாமலும் இருக்கின்றபோது "சுதேசியை வாங்குங்கள்" என்னும் பிரசாரமும், இப்பெயரினால் சங்கங்களும் உண்டாவதில் என்ன அர்த்தமிருக்கிறது என்று நமக்குவிளங்கவில்லை.

ஆனால் இது வரையிலும், நமது நாட்டில், "ஹோம்ரூல்" "சுயராஜ்யம்" "காங்கிரஸ்" "காந்தியம்" "தேசீயம்" என்ற பற்பல வார்த்தைகளைக் கூறித் தேசாபிமானிகளாக' விளங்கியவர்கள் எவ்வாறு அவ்வார்த்தைகளைக் கொண்டு பொது ஜனங்களை ஏமாற்றிப் பட்டங்களையும், பதவிகளையும் பெற்று வந்தார்களோ, அவ்வாறே தான் இப்பொழுதும் 'சுதேசியை வாங்குங்கள்' என்ற பிரசாரத்தை மேற்கொண்டிருப்பவர்களும் வரப் போகும் தேர்தல்களில் வெற்றி பெறுவதற்கு இதை ஒரு தந்திரமாக ஏற்படுத்தியிருக்கிறார்கள் என்றுதான் கூறவேண்டும்.

'சுதேசியை வாங்குங்கள் என்னும் இந்த புதியதேர்தல் பிரசாரம் முதலில் யாரால் கிளப்பிவிடப்பட்டது, இப்பொழுதும் யாரால் நடத்தப்படுகிறது? எப்படி நடத்தப்படுகிறது? என்றவிஷயங்களை அறிந்தால் அதன்பின் இதைக் கண்டு யாரும் ஏமாறமாட்டார்களென்பது நிச்சயம். ஆகையால் அவ்விஷயங்களை ஆராய்வோம்.

வருணாச்சிரமதரும வாதியாகிய திரு. மாளவியா பண்டிதர் இங்கிலாந்திலிருந்து வட்டமேஜை மகாநாட்டைவிட்டுத் திரும்பிவந்தவுடனேயே இந்த இயக்கத்திற்கு விதைபோட்டார். காங்கிரஸ் பெயராலோ, காந்தியின் பெயராலோ, சத்தியாக்கிரகத்தின் பெயராலோ, பகிஷ்காரத்தின் பெயராலோ, தேர்தல் பிரசாரம் பண்ணினால் நிச்சயமாகத்தடியடியோ, அபராதமோ,சிறைதண்டனையோ பெற்றுக்கஷ்டமடையும்படி நேரும் என்பது அவருக்குத்தெரியும். ஆகையால் அன்னிய நாட்டுப்பொருள்களை பகிஷ்கரியுங்கள் என்று சொல்லுவதைவிடச் 'சுதேசியை வாங்குங்கள்' என்று பிரசாரம் செய்வது சட்டவிரோதமும் ஆகாது; தேர்தல் பிரசாரம் நடப்பதற்கு வழியும் ஆகும் என்றுகருதிப்பிரசாரம் பண்ண ஆரம்பித்தார்.

இச்சமயத்தில் அடக்குமுறைச் சட்டங்களால் முலைகளிற்பதுங்கிக்கிடந்த பதவி வேட்டைக்காரர்கள் அனைவரும் இப்பிரசாரத்தை வரவேற்றனர். இவர்கள் எல்லோரும் பார்ப்பனர்கள் என்பதை நாம் சொல்லவேண்டியதில்லை, உதாரணமாகச் சென்னையிலும், கும்பகோணம், கோயமுத்தூர், திருநெல்வேலி, முதலிய இடங்களிலும் இப்பொழுது ஆரம்பிக்கப்பட்டிருக்கும் இச்சங்க நிர்வாகிகளைப்பார்த்தாலே இவ்வுண்மை விளங்கும். இனிமற்ற ஊர்களில் ஆரம்பிக்கப்படப்போகும் சங்க நிர்வாகிகளும் பார்ப்பனர்களாகவேதான் இருப்பார்கள் என்பதில் யாரும் சந்தேகப்படவேண்

டியதில்லை. இவர்கள் எல்லோரும் அடக்குமுறைச்சட்டங்கள் ஏற்படுவதற்கு முன்பு தேர்தலுக்காக வேண்டி 'காந்தி' 'காங்கிரஸ்' 'சத்தியாக்கிரகம்' 'சட்டமறுப்பு' 'பூரணசுயேட்சை' 'கதர்' என்றவார்த்தைகளைக் கூறித்திரிந்தவர்கள் தான் என்பதையும் ஞாபகப்படுத்திக்கொள்ள விரும்புகின்றோம்.

இப்பொழுது 'சுதேசியைவாங்குங்கள்' என்பதுபற்றிப்பிரசாரம் செய்யப்புறப்பட்டிருப்பவர்கள், இவர்கள் கொள்கைப்படி செய்யப்பட்டிருக்கும் சுதேசிப்பண்டங்கள் ஒன்றும் இல்லாமையால் கதர் ஒன்றைத்தான் பிரசாரம் பண்ணமுடியும். கதர் ஒரு தொழிலாகாமையாலும் அதனால் இதுவரையிலும் ஒரு லாபமும் கிடைக்காமையாலும் இனியும் கிடைக்கப்போவதில்லையாகையாலும் கெஜம் இரண்டரை அணு மூன்று அணு பெறக்கூடிய துணிக்கு 9 அணு 10 அணு கொடுத்து வாங்கவேண்டியிருப்பதனாலும்கதரை நம்பி நூல்நூற்கின்றவர்கள் ஒரு நாளைக்கு 1 அணு 1½ அணுவுக்கு மேல் பெறவழியில்லாமையாலும் கதர்ப்பிரசாரத்தால் பரம்பரையாக நெசவு செய்துவாழ்ந்து வந்தவர்களிலும், அதன் மூலம் வியாபாரம் செய்துவந்தவர்களிலும், ஆயிரக்கணக்கான குடும்பங்கள் வேலையின்றி பட்டினிகிடக்க நேர்ந்தமையாலும், 'கதர்ப்பிரசாரம்' என்பது ஏழைமக்களின் பொருளைக்கொள்ளையடிக்கப் பார்ப்பனர்களால் செய்யப்படும் ஏமாற்றுப் பிரசாரம் என்பதை நாம் இப்பொழுது புதிதாக எடுத்துக்காட்ட வேண்டியதில்லை.

நமது நாட்டில் தொழில்களை அபிவிருத்தி செய்து வியாபாரம் பண்ணுவதன் மூலம் பொருளாதாரத்தை வளர்க்க இந்த 'சுதேசி பக்தர்கள்' ஒரு முயற்சியும் செய்யாமல் 'சுதேசியை வாங்குங்கள்' என்றுமாத்திரம் பிரசாரம் பண்ணுவதில் என்ன அர்த்தமிருக்கிறது என்று மீண்டும் மீண்டும் யோசனை செய்துபார்த்தால் இதில் உள்ள சூழ்ச்சி வெளிப்படாமல் போகாது, சுதேசிப்பண்டங்கள் இருந்தால்லவோ அவைகளை வாங்குங்கள் என்று பிரசாரம் பண்ண வேண்டும் அவையில்லாமலிருக்கும்போது இப்பிரசாரம் செய்ய முன்வந்திருப்பது தேர்தலுக்காகச்செய்யப்படும் சூழ்ச்சியா? அல்லவா? என்று யோசனை செய்து பாருங்கள்.

ஆகவே யாரும் இந்த சுதேசிப் பிரசாரத்தைக்கண்டு ஏமாறாமலிருக்கும்படி எச்சரிக்கை செய்ய விரும்புகிறோம். ஆங்காங்கேயுள்ள நமது இயக்கத்தோழர்கள் பார்ப்பனப்புலிகள் இந்தச் 'சுதேசி' என்னும் பசுத்தோலைப்போர்த்துக்கொண்டு பொதுஜனங்களை ஏமாற்ற முன்வந்திருப்பதை எடுத்துக்காட்டிப் பாமரமக்களை எச்சரிப்பார்களென்று நம்புகின்றோம்.

காங்கிரஸ் பிரசாரத்தின் பெயரால் தேர்தலுக்குப்பணம் சேர்க்கமுடியாமல் போய்விட்டபடியால் இப்பொழுது சுதேசிப்பிரசாரத்தின் பெயரால் பார்ப்பனர்கள் பணம் சேர்க்கப்புறப்பட்டிருக்கிறார்கள் என்ற உண்மையைப்பொதுஜனங்களுக்கு எடுத்துக்காட்டி அவர்களை ஜாக்கிரதையாக இருக்கும்படி செய்யவேண்டுகிறோம்.

சுதேசி என்னும் பதத்தில் உள்ள ஏமாற்றங்களை எடுத்துக்காட்டுவது நமது கடமையாகும். இப்பொழுது நாம் சும்மா இருந்துகொண்டு சுதேசியின் பேரால் பார்ப்பனர்களைப்பணம் சேர்க்கவிட்டு விடுவோமானால் பின்னால் அது பார்ப்பனரல்லாத பொதுஜனங்களுக்கே ஆபத்தாய் முடியும் என்பதில் சந்தேகமில்லை.

வரிந்திக்கொள்ளை.

ஒரு தேசத்தில் உள்ள மக்களைச் சுலபமாகவும், சீக்கிரமாகவும், அறிவுடையவர்களாகச் செய்வதற்கு, முதலில் அவர்களுடைய தாய்மொழியின் மூலம் எல்லா விஷயங்களையும் போதிக்கப்படவேண்டும் என்று சொல்லப்பட்டுவருகிறது. இதுதான் பொதுஜனங்களின் மனத்தில் தேசாபிமான உணர்ச்சியை உண்டாக்குவதற்கு அடிப்படையான வேலையென்றும் சொல்லப்படுகிறது. இதுபோலவேதான் சுதந்தரப் போர்புரிந்த நாட்டினர் செய்து தங்கள் காரியங்களில் வெற்றி பெற்றிருக்கின்றார்கள் என்றும் அறிகின்றோம். ஆனால் நமது தமிழ் நாட்டின் தேசாபிமானமோ இதற்கு முற்றிலும் வேறுபட்டதாகவே இருந்துவருகிறது,

சுயராஜ்யம் வேண்டுமென்று கூச்சலிடுகின்ற தேசத் தலைவர்கள் என்பவர்களில் யாரும் இதுவரையிலும் தாய்மொழியின் வளர்ச்சியில் மனஞ் செலுத்தவும் முயற்சி செய்யவும் முன்வரவே இல்லை.

அனால் வட நாட்டினர் அரசியல் விஷயத்துடன் ஹிந்தியையும் சேர்த்துக்கொண்டு, அதையே இந்தியா முழுவதுக்கும் பொதுப்பாஷை ஆக்கவேண்டுமென முயற்சி செய்யத் தொடங்கியவுடன் நமது நாட்டுத் தேசாபிமானிகளும் அவர்கள் கொள்கையை ஆதரித்துப் பிரசாரம் பண்ணத் தொடங்கிவிட்டனர். தேசாபிமானியாக வெளிவருகின்ற ஒருவன் "காந்திக்கு ஜே" "காங்கிரசுக்கு ஜே" "கதர் கட்டுங்கள்" என்று சொல்லவேண்டிய அவசியம் ஏற்பட்டிருப்பதுபோலவே "இந்தியைப் படியுங்கள்" என்றும் சொல்லவேண்டிய அவசியமும் இப்பொழுது ஏற்பட்டுவிட்டது.

தெலுங்கர்கள், வங்காளிகள் முதலானவர்கள் தங்கள் தாய் பாஷையை மிக உன்னத பதவிக்குக் கொண்டுவந்து வைத்திருக்கின்றனர். அவர்கள் தங்கள் மொழிகளில் மக்களின் அறிவு வளர்ச்சிக்கு ஏற்ற புதிய நூல்களையெல்லாம் ஆக்கிவைத்திருக்கின்றனர். அவைகளைப் படிக்குமாறு மக்களுக்கு ஊக்கமூட்டுகின்றனர். நமது தமிழ்மொழியோ வென்றால் ஒன்றுக்கும் பயன்படாத நிலையிலேயே இன்னும் இருந்துவருகிறது. மக்களுடைய அறியாமையைப் போக்கி நவீன அறிவையும், உலகப்பொருள்களின் தன்மைகளை அறிந்து அவைகளைத் தமது வாழ்க்கைக்கு உபயோகப்படுத்திக்கொள்ள அறிவையும் ஊட்டக் கூடிய நூல்களைச் செய்ய முயற்சி எடுத்துக்கொள்ளவே இல்லை.

தமிழ் மொழிக்காக உழைக்கின்றோம் என்று சொல்லிக்கொண்டிருக்கின்றபண்டிதர்களும், சங்கங்களும் தமிழ் மொழியிலில் பொதுஜனங்கள் நன்மையடையத் தகுந்த உறுப்படியான வேலைகள் ஒன்றுமே செய்வதில்லை. ராமாயணக் கதையையும், பாரதக் கதையையும், சிலப்பதிகாரம், மணிமேகலை முதலிய கதைகளையும் வசனமாகவும், பாட்டாகவும், சுருக்கமாகவும், விரிவாகவும் திருப்பித் திருப்பி எழுதிக்கொண்டிருக்கின்றனர், அல்லது அந்தப் புலவர் எந்தக்காலத்திலிருந்தார். இந்தப் புலவர் எந்தக்காலத்திலிருந்தார் என்று கணக்குப் போட்டுக்கொண்டிருக்கின்றனர். இதுதான் ஆராய்ச்சி யென்று சொல்லப்படுகின்றது. இவ்வளவுதான் இவர்கள் தமிழ்பாஷைக்குச் செய்யும் தொண்டு. இதனால் மக்களை இன்னும் மூட நம்பிக்கைக உடையவர்களாக்குவதற்கு வழிதேடுகின்றார்களே யொழிய வேறு தேசத்திற்கு என்ன நன்மை செய்கின்றார்கள் என்றுதான்கேட்கின்றோம்.

ஆனால் தேசாபிமானிகளாக வருகின்றவர்களுக்கோ இதில் கூடக் கொஞ்சமும் கவலை இருப்பதில்லை. பொதுவாக நமது நாட்டுத் தேசாபிமானிகளுக்கு எந்த வகையிலும் சொந்த அறிவு என்பதே இருப்பதில்லை. வட நாட்டுத் தேசாபிமானிகள் எந்தக் காரியங்களை ஆரம்பிக்கின்றனரோ அதையே பின்பற்றுவதுதான் நமது நாட்டு அரசியல்வாதிகளின் போக்காக இருந்துவருகின்றது. சமூகவியலாகட்டும், மதவியலாகட்டும், அரசியலாகட்டும், பாஷாவியலாகட்டும் மற்ற எந்த இயலாகட்டும் எல்லாவற்றிலும் நமது நாட்டினர் வட நாட்டினர்கு அடிமைப்பட்டே வந்துகொண்டிருந்தனர். இதற்கு உதாரணமாக இதுவரையிலும் நடந்துவந்திருக்கும் கதர் இயக்கம், காங்கிரஸ் இயக்கம். இந்தியியக்க முதலியவைகளை எடுத்துக்கொண்டாலே போதுமானதாகும்.

சமீபத்தில், சென்னையிலுள்ள இந்திப் பிரசாரசபைக்கு ஒரு கட்டடம் கட்டும்பொருட்டு நிதிசேகரிப்பதற்காகப் பத்திரிக்கைகளில் ஒரு வேண்டுகோள் வெளிவந்தது. அதில் இந்தியின் அவசியத்தையும், அதற்குக் கட்டடம் கட்டவேண்டியதன் அவசியத்தையும் வற்புறுத்திப் பொது ஜனங்களைப் பொருளுதவி செய்யுமாறு வேண்டிக்கொண்டு, பல வகையான அரசியல்கட்சிகளைச் சேர்ந்தவர்களும், சட்ட சபை மெம்பர்களும், தாலுக்காபோர்டு, முனிசிபாலிட்டி, ஜில்லாபோர்டு முதலிய ஸ்தாபனங்களில் பதவி வகிப்பவர்களுமாகச் சுமார் 50 பேர்களுக்கு மேல்கையொப்பமிட்டிருக்கின்றனர்.

உண்மையிலேயே இவர்கள் இந்திமொழி தேசீய பாஷையாக வேண்டும். அதன்மூலம் மக்கள் நன்மையடையவேண்டும். என்ற கருத்துடன் இந்தி மொழிக்கு ஆதரவளிக்க முன்வந்தார்களா என்பதுதான் நமக்குச் சந்தேகம். இவர்கள் தங்கள் சொந்த பாஷையின் வளர்ச்சிக்குக் கடுகளவாவது நன்மை செய்திருப்பார்களானால் இந்திமொழிக்கு ஆதரவளிக்க முன்வந்ததில் ஏதாவது அர்த்தம் இருக்கமுடியும். அப்படியில்லாமல், தமிழ் மக்கள் முன்பின் அறியாததும்; சமஸ்கிருதம் தெரிந்த பார்ப்பனர்களைத் தவிர மற்றவர்களுக்குப் படிக்கக் கஷ்டமாயிருப்பதும், துளசிதாஸ் ராமாயணத்தைத்தவிர வேறு இலக்கியங்களோ அல்லது நவீன கலைகளோ இல்லாததும் ஆகிய ஒரு பிரயோசனமற்ற பாஷையைத் தமிழ் மக்களிடம் பரப்ப முன்வருவார்களா?

தங்கள் சொந்த மொழியையே கற்கமுடியாமல் வாழுகின்ற பொ துஜனங்கள் இந்திமொழியை எவ் வளவு தூரம் கற்றுக்கொள்ளப் போகிறார்கள்?

இவையெல்லாம் அந்தப் பிரமு கர்களுக்குத் தெரியாத விஷயம் அல்ல. ஆயினும் ஏன் கையெழுத் திடமுன்வந்தார்களென்றால், தங் களைத் தேசாபிமானி என்று கா ட்டிக்கொள்வதன்மூலம் அடுத்த தேர்தலுக்கு ஆதரவு பெறவே என்பதில் சிறிதும் சந்தேகமே இல்லை. ஆதலால் இதைக் கண்டு யாரும் ஏமாந்துவிட வேண்டா மென்று எச்சரிக்கை செய்கின் றோம்.

யோகப்புரட்டு.

மூச்சடிக்கிப் பலவகையாக யோ கஞ்செய்வதன் மூலம் சிறிது சரீர திடம் பெறுவதற்கு ஏதாவது மார்க்கமிருக்குமேயொழிய அதில் வேறு "தெய்வீகத்தன்மை" யா தொன்றுமில்லை யென்பதே நமது அபிப்பிராயமாகும். ஆகவே இது வும் கழைக்கூத்து, சர்க்கஸ், ஜால வித்தை முதலியவைகளைப்போல ஒன்றுதான் என்பதில் சந்தேக மில்லை.

ஆனால் நமது மக்கள் யோகத் தில் ஏதோ "தெய்வீகத்தன்மை" இருப்பதாக நம்பியிருப்பதால் அநேகர் யோகிகள் என்று கிள ம்பி, சில ஜாலங்களைச்செய்து பா மர மக்களை மயக்கச்செய்து ஏமா ற்றி வருகின்றனர். ஜன சமூக மும் இவர்கள் பால் பரம்பரை யாகவே ஏமாந்து கொண்டும் வரு கிறது.

இதற்கு உதாரணமாகச் சமீபத் தில் நடந்த ஒரு நிகழ்ச்சியைக் கவனித்தால் விளங்கும். "ஹட யோகம்" என்பதில் சித்திபெற்ற வராகச் சொல்லப்பட்ட நரசிம்ம சாமியென்பவர் சென்னை, கல்கத் தா முதலிய இடங்களில், பிரபல ரசாயன சாஸ்திரிகளின் முன்னி லையில், கொடிய விஷம், கண்ணு டித்துண்டுகள், ஆணிகள் முதலிய வற்றை விழுங்கி உயிரோடிருந்தா ராம். இந்த நிகழ்ச்சியைக்கண்டு ரசாயன சாஸ்திரிகள் எல்லோ ரும் மலைத்துப் போய் விட்டனர். ஆகவே யோகத்தின் மகியைப் பற்றிப்பத்திரிகைகளில் விளம்பர ப்படுத்தப்பட்டது.

ஆனால் இதே நரசிம்மசாமியார் சில தினங்களுக்கு முன் ரெங்கூ னில் இரண்டாம் முறையாக விஷ ங்களையும், கண்ணாடித்துண்டுகளை யும் விழுங்கிய கொஞ்ச நேரத்திற் குள் மரண யோகம் பெற்று விட் டார். இதற்குக்காரணம், விஷம் உண்டவுடன் "ஹடயோகம்" பண்ணுவதற்குக் கொஞ்சம் நேர மாகிவிட்டது என்று புத்திரிகை களில் சொல்லப்படுகின்றது. ஆ னால், அவைகளை உட்கொள்ளும் சாதுரியத்திலோ அல்லது மாற்று மருந்தை உட்கொள்ளுவதிலோ அல்லது பழக்கப்பட்ட அளவை உட்கொள்ளுவதிலோ தவறி விட் டார் என்று ஏன் சொல்லக்கூடா தென்று தான் நாம் கேட்கின் றோம்.

யோகத்தில் "தெய்வத்தன் மை" உண்டென்பது வீண் புரட் டே ஒழிய வேறில்லை. சாதுரி யத்தினாலோ அல்லது பழக்கத்தி னாலோ, அல்லது மாற்று மருந்து களினாலோ செய்யப்படும் காரிய ங்களை யெல்லாம், யோகமென்றும் மந்திரமென்றும், தேவதையென் றும், தெய்வ சக்தி யென்றும் சொல்லி ஒருகூட்டத்தார் ஜனசமூக த்தை ஏமாற்றி வருகிறார்கள் என் பதை அறிய வேண்டுகிறோம். ஆகையால் இனியேனும் இது போன்ற மோசடியான காரியங் களைக்கண்டு ஏமாறாமலிருக்கும்படி எச்சரிக்கை செய்கிறோம்.

ஜஸ்டிஸ் கட்சியில் மாறுதல்.

சமுதாய விஷயங்களிலும், அரசி யல் விஷயங்களிலும் பிற்போக்க டைந்து பார்ப்பனர்களுக்கு அடிமை யாகக் கிடந்து வந்த தென்னிந்தியப் பார்ப்பனரல்லாதார்களின் முன் னேற்றத்திற்காகவே, காலஞ்சென்ற டாக்டர் நாயர் அவர்களாலும், சர். பி. தியாகராயர் அவர்களாலும் ஜஸ்டிஸ் கட்சி தோற்றுவிக்கப் பட்டது என் பது பார்ப்பனரல்லாதார்களுக் கெல் லாம் தெரியும். ஆனால் அக்கட்சி தோன் றிய நாள் முதல் அரசியல் விஷயங் களில் பார்ப்பனர்களுடன் போரா டிப் பார்ப்பனரல்லாதார்க்கு உத்தி யோகம் தேடிக் கொடுப்பதில் மாத்தி ரம் முழுதும் கவனம் செலுத்தி வந்த தே யொழிய சமூகச் சீர்திருத்த சம் பந்தமாகப் போதுமான காரியங்க ளைச் செய்து விட்டதாகக் கூற முடி யாது. அதிலும் தற்சமயம் அக்கட்சி யில் உள்ள தலைவர்கள் சமூகச் சீர் திருத்தம் சம்பந்தமாகப் பேசுவதற் குக் கூடக் கொஞ்சம் பயமடைகிறார் கள் என்று தான் சொல்ல வேண்டி யிருக்கிறது.

இந்த நிலையில் ஜஸ்டிஸ் கட்சியில் பார்ப்பனர்களையும் சேர்த்துக் கொள் ளப்பட வேண்டுமெனச் சில தலைவர் களால் முயற்சி செய்யப்பட்டு, பெரும் பாலும் அதற்காகவே செல்லூரில் கூடிய மகாநாட்டில் அத்தீர்மான மும் தோல்வியடைந்தது. அதன் பின் அக்கட்சியின் நிர்வாக சபைக் கூட்டத்தில் பார்ப்பனர்களையும்கட்சி யில் சேர்த்துக் கொள்ளுவதாகத் தீர் மானம் செய்து, அதன் மூலம் சில பார்ப்பனர்கள் ஜஸ்டிஸ் கட்சியை ஆதரிக்கும்படியும் செய்து கொண்டி ருக்கின்றனர். ஆனால் இத்தீர்மா னத்தை அமுலுக்குக் கொண்டுவர வேண்டுமானால் மற்றொரு மகாண மகாநாடு கூட்டி அம்மகாநாட்டில் ஒப் புக் கொள்ளச் செய்த பின்னரே அமுலுக்குக் கொண்டு வருதல்முறை யாகும். இதன் பொருட்டு ஜஸ்டிஸ் கட்சி மகாநாடு கூட்டுவதற்காக, எத் தனையோ முறை முயன்றும் இதற் காகப்பலதடவை, மாதங்கள், வாரங் கள் குறிப்பிட்டும் மகாநாடு நடத்தப் பட்டவில்லை. இது வரையிலும் மகா நாடு நடத்தப்படாமைக்கு அவர்க ளால் எந்தக் காரணமும் சொல்லப் படவுமில்லை.

ஆனால் சென்ற சில தினங்களுக்கு முன் திருச்சி, உறையூரில் அக்கட்சி யின் தலைவராகிய முதல் மந்திரி, திரு. முனிசாமி நாயுடு அவர்கள் தென்னிந்திய நல உரிமைச் சங்கத் தின் கூட்டத்தினரால் படித்துக்கொடுத் த உபசாரத்திற்குப் பதில் சொல் லும் போது, அவசரச் சட்டங்கள் நீங்கிய பின் மகாநாடு கூட்டப்படும்" என்று ஒரு சமாதானம் கூறினர். அவசரச் சட்டங்களுக்கும், ஜஸ்டிஸ் கட்சி மகாநாட்டிற்கும் என்ன சம் பந்தமென்று நமக்குத் தெரிய வில்லை.

இச்சமயத்தில் மற்றொரு விஷயத் தையும் முதல் மந்திரி குறிப்பிட் டார். அதாவது "ஜஸ்டிஸ் கட்சி யில் மாறுதல் ஏற்பட வேண்டிய காலம் வந்துவிட்டதென்றும், ஆகை யால் பார்ப்பனர்களையும் கட்சியில் சேர்த்துக் கொள்ள வேண்டு மென் றும்" தமது கருத்தை வெளியிட் டார்.

சென்ற ஆண்டிலும், அதற்கு முன்பும் ஜஸ்டிஸ் கட்சியில் பார்ப்பனர்களைச் சேர்த்துக் கொள் ள வேண்டும், என்ற பிரஸ்தா பம் வந்தபோது தென்னாட்டில்உள்ள பார்ப்பனரல்லாத மக்கள் அனைவரும் அதை எதிர்த்த விஷயம் எல்லாருக் கும் தெரியும். அக்கட்சியின் தலை வர்களிலும் அனேகர் இதற்கு எதிரா கவே இருந்து வருகின்றனர். இந்த நிலையில் கட்சியின் தலைவராக இருக் கின்ற ஒருவர் தனது சொந்த அபிப் பிராயத்தை வெளியிட்டு அக்கொள் கைக்கு ஆதரவு தேடமுயற்சிப்பது அவ்வளவு சரியான காரியமாகாது என்றுதான் நாம் அபிப்பிராயப்படு கின்றோம்.

உண்மையிலேயே ஜஸ்டிஸ்கட்சி பார்ப்பனரல்லாத மக்களுக்கு அரசி யல் விஷயத்திலாவது, சமுதாய சீர் திருத்த விஷயத்திலாவது, சிறிதள வாவது உதவி செய்யக்கூடியதா கஇருக்கவேண்டுமானால் அதன் ஆதி க்கொள்கையிலிருந்து தவறாமல் இருப்பதே ஒழுங்காகும், அவ்வாறி ல்லாமல் அக்கட்சியை ஸ்தாபித்தவர் களின் எண்ணங்களுக்கு மாறுக அதில் பார்ப்பனர்களைச்சேர்த்துக் கொள்வார்களானால் ஜஸ்டிஸ் கட்சி யும், மற்ற காங்கிரஸ்கட்சி, மதவாத க்கட்சி முதலியவைகளைப்போல பார்ப்பனர்களின் அடிமையாகவே ண்டியதுதான் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை. இதுவரையிலும் பார்ப்பனர்கள் சேர்ந்திருக்கின்ற எந்த ஸ்தாபனமாவது பார்ப்பனரல் லாதார் நன்மையைக்கவனிக்கக்கூ டியதாக இருக்கிறது என்று யாரா வது எடுத்துக்காட்ட முடியுமா? இந்த நிலையில் பார்ப்பனர்களைச் சே ர்த்துக்கொள்ளும் ஜஸ்டிஸ் கட்சி எப்படிப் பார்ப்பனரல்லாதார்களுக்கு நன்மை செய்யமுடியும்? என்று கேட் கிறோம்.

ஜஸ்டிஸ் கட்சியின் எதிரிகள் அதனை வகுப்புத்துவேஷக்கட்சி என்று குறை கூறுகின்றார்கள் என் பதற்காகவே பார்ப்பனர்களையும் அக் கட்சியில் சேர்த்துக்கொண்டால் அக்குறை நீங்கி விடும் என்று கூறு கின்றனர். இவ்வாறு கூறுவதில் சிறிதும் பொருள் இல்லையென்று தான் நாம் நினைக்கிறோம். நமது நாட்டில் வகுப்புப்பிரிவினைகள் இரு ந்துகொண்டும்; ஒருவகுப்பினர் மற்ற வகுப்பினர்களை அடிமையென நினை த்துக்கொண்டும் இருக்கும் வரையி லும் வகுப்புத்துவேஷம் இருந்து தான்தீரும். தனித்தனி வகுப்புக ளின் நன்மையைக்கவனிக்கின்ற கட்சிகளும் இருந்துதான் தீரவேண் டும்.

அன்றியும் "வகுப்புத்துவேஷம்" என்று கூச்சலிடுகின்றவர்கள் யாரோ அவர்கள்தான் உண்மையில் வகுப் புத்துவேஷிகளே தவிர பிற்போக் கடைந்திருக்கும் சமூகத்திற்கும் அர சியல் சமூக சமத்துவம் வேண்டு மென்று கூறுகின்றவர்கள் வகுப் புத்துவேஷிகளாக மாட்டார்கள். பல நாட்களாக ஏமாந்துகிடந்த மக்கள் சிறிதுகண்விழித்து தங்களுக்கும் மற்றவர்களைப்போல் அரசியலிலும் சமூகத்திலும், சமத்துவம் வேண்டும் என்று கேட்பது எவ்வாறு வகுப்புத் துவேஷமாகும் என்று கேட்கின்றோம். ஆகையால் "வகுப்புத் துவேஷம்" என்ற வார்த் தைக்கு யாரும் அஞ்சவேண்டியதே இல்லை.

தற்காலத்தில் உள்ள ஜஸ்டிஸ் கட் சியின் தலைவர்கள் அக் கட்சி ஸ்தா பகர்களின் அபிப்பிராயத்திற்கு விரோதமாக, அதில் பார்ப்பனர்களை யும் சேர்த்துப் "பார்ப்பனரல்லாதார் கட்சி" என்னும் பெயரையே அடி யோடு கொலைசெய்ய எண்ணுவதை விட துரோகமான காரியம் வேறு ஒன்றுமில்லை. ஆதலால் அக் கட்சி யின் உண்மையான தலைவர்களும், பார்ப்பனரல்லாதாருடைய அரசியல் முன்னேற்றத்திலும், சமுதாய முன் னேற்றத்திலும் உண்மையான கவலை உடையவர்களும் அக் கட்சிக்கு யா தொரு ஆபத்தும் வராமல் பாதுகாப்

சமாதானமா?

"கெவிடன் காதில் சங்கு கூறியது போல்" என்னும் பழமொழி, உண்மையாகி விட்டதைக்காண, யாரும் வருந்தாமலிருக்கக் கூட வில்லை. நம்மீதும் நம் கட்சியார் மீதும் போலித் தேசீயப் புலிகள் நூறை கூறுவதில் பின் வாங்குவதில்லை. சட்ட மறுப்பிலும் சுதேசி மறியலிலும் நமது பார்ப்பனரல்லாத பெருவாரியான மக்கள சிறை சென்றது தன் மிச்சமேயொழிய, சுயேச்சையோ? அல்லது ராமராஜ்யமோ? இந்தியாவிற்குக் கிடைத்து விட்டதாவென்றால் முன்னை நிலைமையில் அணுவளவும் மாறவில்லை யென்பதை தேச பக்தர்கள் உணரவேண்டுகிறோம். பல்லாயிரக் கணக்கான மக்கள் போலீஸ்காரர் கரிலால் அடிபட்டதையும் உதைபட்டதையும் அவமானமடைந்ததையும் நினைக்கும் போது பரிதாபங் கொண்டாலும், மற்றொரு புறம், தேச நிலைமையும், இந்து முஸ்லீம் வேற்றுமையும் இந்தக் காலுக்கும், தாழ்த்தப்பட்டார்க்கு மூள்ள, ஒன்று சேர முடியாத பார்ப்பனீயக் கொள்கைகள் தலை விரித்தாடுதலையும் பகுத்தறிந்து சட்ட மறுப்பையும், மறியலையும், செய்வதால் வெற்றி கிடைக்குமா? தோல்வி நேருமா? என்பதை, ஆராய்ந்துணர்ந்து தங்கள் கடமையை சேரிய துறையில் ஆற்றுமைக்கு ஒரு பக்கம் வருந்தவேண்டியதாயிருக்கிறது. நம்நாட்டிலுள்ள சில பத்திரிகைகள், பொதுமக்களின் பரிபக்குவத்திற் கேற்ப நல்வழியில் நடத்தத் தூண்டுகோலாய் நில்லாது, வாணிபத்துறையில் தலைவிரித்தாடியதை கண்டிக்காமலிருப்பதற்கில்லை. சட்டமறுப்பையும், மறியலையும், முஸ்லீம்கள் ஆதரிக்க வில்லை, தொழிலாளர்கள் ஆதரிக்கவில்லை, பார்ப்பனரல்லாதார்கள், மிதவாதிகள் ஆதரிக்கவில்லை. இந்திய மன்னர்கள் ஆதரிக்கவில்லை, பணக்காரர்கள் மிட்டாதாரர்கள், ஜமீன்தார்கள் ஆதரிக்கவில்லை இந்நிலைமையை எல்லா பத்திராதிபர்களும், தலைவர்களும் தொண்டர்களும் நன்கு அறிந்திருந்தும் இவைகளை இந்துக்களுக்கு நன்கு எடுத்துக் காட்டியிருந்தால் பார்ப்பனரல்லாத மக்கள் நிதானத்துடன் நடந்துகொண்டிருப்பார்கள். லார்டுவில்லிங்டன் துரையவர்கள் அடக்குமுறையாகிய அவசரச் சட்டங்களைப் பிரயோகம் செய்ததும், தலைவிரித்தாடிய போலித் தேசீயப் பத்திரிக்கைகள் தலையங்கம் எழுதுவதற்குத்தைரியமும், வீரமும் இல்லாது பேடித்தனமாக மூலையில் ஒதுங்கிவிட்டன. இதை கண்டாவது பொதுமக்கள் நல்லறிவு பெற்றிருக்கவேண்டும். நமது காங்கிரஸ் நண்பர்கள் தீவிரவுணர்ச்சி கொண்டு சிறை சென்றதினால் தற்போதையாது பயன் விளைந்தது பண்டிட் மாளவியா, — திருமதி. சரோஜினி, சர்தேஜ்பகதூர் சாப்ரு, திரு. பிரிலா முதலியவர்கள் வைசராயுடன் சமாதானம் பேச முற்பட்டுவிட்டார்கள். சமாதானம் நடைபெற்றால் எவ்விதப் பயன் விளையும் என்பதை யாம் அறிந்தேயிருக்கிறோம். பொது மக்களும் நன்கு அறிந்துள்ளார்கள் என்பதைச் சொல்லவேண்டியதில்லை.

முன்னைய சமாதானத்தினால் முடிந்த முடிபும் அதனால் இந்தியா அடைந்த பயனும் என்ன? என்பதைப்பற்றி சொல்ல வேண்டியதில்லை. காங்கிரஸ், சட்டமறுப்புக் கூச்சலினாலும் மற்றப்போறினாலும் சென்னை மாகாணத்தில் பார்ப்பனப்பத்திரிகைகளுக்கு பணம் கிடைத்ததுதான லாபம்.

டில்லியில் நடைபெறும் சமரசப்பேச்சு வெற்றிபெற்று, இது பார்ப்பனரல்லாத மக்கள் சிறையினின்றும் வெளிவரவேண்டுமென்று எதிர்பார்க்கிறோம். அஹிம்சையை கைக்கொண்ட திரு. காந்தியார் பல்லாயிர மக்களை சிறைக்கனுப்பி ஹிம்சையுறும்படி செய்வது அறமாகுமாவென்று கேட்கிறோம். ஹிம்சையுற்று சுயராஜ்யம் வாங்கவேண்டிவதவசியமாயின் அஹிம்சை தருமத்தைப் போதிக்காது வெளிப்படையாண் போர் நிகழ்த்துதல் அறமுடைத்தாகும். இஃதும் இந்தியாவின் நிலைமைக்கு ஏற்றதல்லவென்றால் சமரசமுறையில் அரசியல் சுதந்திரம் பெற முயலவேண்டும். இதுவே சரியான வழியென்பதை பகுத்தறிவுடைய அரசியல் நிபுணர்ந்த எவனும் ஒத்துக்கொள்வான், ஆனால் ஆங்கில அரசாங்கம் செய்வதெல்லாம் நேர்மையுடையதென்றோ? ஆங்கில அரசாங்கம் எப்போதும் இருக்கவேண்டுமென்றோ? யாம் கூறமுன்வரவில்லை. எந்தெந்தவரசியல் கட்சிக்காரர்கள் என்னென்ன நிட்டங்களைக்கூறினாலும், எந்தெந்த அரசியல் தலைவர்கள் என்னென்ன கொள்கைகளை எடுத்துச்சொன்னாலும் தங்கள் பகுத்தறிவினால் நன்கு ஆராய்ந்துணர்ந்து பின்பற்றுதல்தான் அறிவுடமையாகும். சட்டமறுப்பும் மறியலும் செய்யவேண்டுமென்று திரு காந்தியவர்கள் எடுத்துக்காட்டியதும், அவரது கொள்கையை சரியென்று ஒத்துத்தாளம்போட்ட பத்திரிகாசிரியர்களும், படித்தக்கூட்டங்களும் நடந்துகொண்ட பான்மையை நன்னிந்நியா நன்கு அறிந்திருக்கலாம். சிறைசென்ற தொண்டர்களின் நியாகம், கஷ்டம், உணர்ச்சி, எல்லாம் டில்லி சமாசத்தால் விழலிற் கிரைத்த நீராகுமென்பதில் ஐயமில்லை. இவ்விதநிலைமைக்கு வருமென்பதை யாரும் எதிர்பார்க்கக்கூடியதாகும். மற்றும் சட்டமறுப்பும், மறியலும், ஏற்பட்டதின் காரணமாக வியாபாரம், ஏற்றுமதி, இறக்குமதி, முதலியவைகளுக்கு இடையூறும் லட்சக்கணக்கான கைத்தறி நெசவுக்காரர்களுக்கு துன்பமும் நேர்ந்ததேயன்றி நாட்டில் யாதொரு பயனும் உண்டாகவில்லை. ஆகையால் தென்னிந்திய மக்கள் எப்பொழுதும் எதையும் கூர்ந்து அறிந்து நடக்கவேண்டியது இன்றியமையாததாகும். 'நிராவிடன்'

சுயமரியாதை பிரசாரம்.

திரு. அருணாசலம் அவர்களும் அவரது நண்பர்களான திருவாளர்கள் கே. விஸ்வநாதன் மஸ்தான் இவர்களும் அன்பர்களது அழைப்பிற்கிணங்கி, சுயமரியாதை இயக்க ஆங்கிலவாரப்பத்திரிக்கை சம்பந்தமாயும் சுயமரியாதைப்பிரசார சம்பந்தமாயும் அடியில்கண்ட விடங்களுக்குபோகிறார்கள். போடிநாயக்கனூர் ஏப்பரல் மீ 5. பெரியகுளம் 8, 9, 10, கொடைக்கானல் 11, 12, நிலக்கோட்டை 13, மேலூர் 14, விருதுநகர் 15 முதல் திருவிழாவரையில் சுயமரியாதைபிரசாரம் நிகழ்த்துவார்கள். எல்லா அன்பர்களும் ஆதரவளிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார். எனஒரு நிருபர்எழுதுகிறார்.

[9-ம் பக்கத் தொடர்ச்சி]

டைய வாசஸ்தலங்களை நிமிஷத்தில் அழித்து விடுகிறார்; அவர்களுடைய பயிர் பச்சைகளை அடியோடு அழித்து விடுகிறார், வயல்களை வெள்ளங்கொண்டு போகும்படி செய்கிறார்; மழையில்லாமல் பயிர்களை வாடும்படி செய்கிறார்; இயற்கை முழுவதையும் மனிதனுக்கு விரோதமாக ஏற்படுத்துகிறார்; மனிதனையே மற்றொரு மனிதனுக்கு விரோதமாக ஆக்குகிறார்; கடைசியாக மனிதன் துன்பத்திலேயே அழிந்துபோகும்படி செய்து முடித்துவிடுகிறார். இதுதானா உலகத்தைப் பாதுகாப்பது என்பது! பேஷ்! கடவுள் மக்களிடத்தும் பிற ஜீவன்களிடத்தும் நடந்துகொள்ளும் தோரணையைப் பாரபக்ஷமின்றி ஆராய்ந்து பார்ப்போமேயானால் அவர் ஒரு அன்பான தாயைப்போலவே இல்லையென்பது விளங்கும். அதற்கு மாறுகதான் ஒரு கள்ளப் புருஷனிடத்தில் அனுபவித்த சுகத்தை பயனாய் எப்பட்ட பச்சிளங்குழந்தையைத் தூக்கி எறிந்துவிட்டோ அல்லது கொன்றுவிட்டோ போகும் ஒரு கருணையற்ற, இரக்கமற்ற, கன்னெஞ்சுடைய, கொடூரமான, பாதகியான ஒரு தாயாரைப்போல அல்லவா உங்கள் கடவுள் இருக்கிறார்.

ஹொடென்டாட் (Hottentots) என்ற மனிதர்கள் இவர்கள் ஆப்பிரிக்காவில் வசிக்கிற ஒரு அநாகரீக ஜாதியார்கள். கடவுளை வணங்க மறுக்கிறார்களாம்; ஏனென்றால் அவரால் இன்பத்தைவிட துன்பமே அதிகமாயிருக்கிறதென்று நம்புகிறார்களாம். இந்த விஷயத்தில் நாகரீகமுடைய மக்களைவிட அவர்கள் எவ்வளவோ புத்திசாலிகள்தான். கடவுளானவர் அன்பு, அறிவு, முன்யோஜனை முதலியவைகளை சொரூபமாக இருப்பவர் என்று விடாப்பிடியாய்ச் சொல்பவர்களைவிட இவர்கள் சொல்வது எவ்வளவோ அறிவுக்கும், அனுபவத்திற்கும் ஒத்த தாய் இருக்கிறது என்பதில் ஏதேனும் சந்தேகம் உண்டா? என்னிக்கையற்ற இன்னல்களை இவ்வுலகில் உண்டாக்கிய ஒன்றினுடையைகளை சந்தோஷத்தினால் முத்தங் கொடுக்கவும் சோணகிரிகளைவிட, மேற்சொன்னவர்கள் எவ்வளவோ அறிவாளிகள் என்பதில் என்ன சந்தேகம்?

(தொடரும்

பார்களென்று நம்புகின்றோம்.

இப்படியில்லாமல், அக் கட்சியில் பார்ப்பனர்களும் சேர்க்கப்பட்டு, அதன் சமுதாயச் சீர்திருத்தக் கொள்கைகளும் வாய்ப்பேச்சளவில்கூட இல்லாமல் கைவிடப்பட்டு வெறும் அரசியல் கட்சியாகப் போய்விடுமானால், அப்பொழுது பழைய கொள்கையுடைய பார்ப்பனரல்லாதார் கட்சி ஒன்று புதிதாகத் தோன்றினாலொழிய, பார்ப்பனரல்லாதார் அரசியல் செல்வாக்குப் பெற முடியாதென்பதை எடுத்துக்காட்டி எச்சரிக்கை செய்ய விரும்புகின்றோம்.

S. C.

சென்னை சமூக ஊழியர்கள் மகாநாடு.

சமூக ஊழியத்திலீடுபட்டவர்களை ஒன்று கூட்டுவதற்காகவும், அவர்களுடைய அபிப்பிராயங்களை வெளியிட சந்தர்ப்பமளிப்பதற்காகவும், சமூக ஊழியத்திற்குபயோகமானமுறைகளையும்,வளர்ச்சிக்குசாத்தியமான வைகளையும் பற்றி ஆலோசிப்பதற்காகவும், சமூக ஊழியர்களின் மகாநாடொன்று 28-3-32 மாலை கோக்கலோ ஹாலில் சர். சிவசாமி அய்யர் தலைமையில் நடைபெற்றது. மகாநாட்டிற்கு ஏராளமான பிரதிநிதிகள் விஜயம் செய்திருந்தனர். சமூக ஊழியத்தில் யாவரும் ஒத்துழைக்க வேண்டுமென தலைவர் கூறினர். அபிப்பிராயபேதமும், வித்தியாசமுமில்லாதவாறு சிற்சில சீர்திருத்தங்கள் செய்யவேண்டுமென்று அவர் மேலுங்கூறினர். சென்னை பாதிரி சென்னை உஷார் சங்கத்தின் நடவடிக்கைகளைப்பற்றி விவரித்தார். இம் மகாநாட்டைக் கூட்டுவித்த பிரதிநிதிகளும், நிர்வாகஸ்தர்களும் கமிட்டிகளாக சேர்ந்து சமூக ஊழியத்திற்கும் முன்னேற்றத்திற்கும் உதவி செய்ய வேண்டுமென சென்னை கார்ப்பொரேஷன் தலைவர் திரு. ராமசாமி அய்யர் ஒரு தீர்மானம் கொண்டு வந்தார். மகாநாட்டில் மேற்படி தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது.

"சண்டமாருதம்"

நீடாமங்கலத்தில் சீர்திருத்தக் கலப்புத்திருமணம்.

27—3—32 ஞாயிற்றுக் கிழமை நீடாமங்கலம் மேல் இராஜ வீதியில் பகல் 11-மணிக்கு ஓர் சீர்திருத்தக் கலப்புத் திருமணம் சுயமரியாதை முறைப்படி வல்லம் போர்டு பாட சாலைஆசிரியர் எஸ். வாசுதேவன் அவர்களுக்கும், நீடாமங்கலம் செல்வி இராஜம்மாள் அவர்களுக்கும் நடைபெற்றது. நீடாமங்கலம் தோழர் ஒய். சோமசுந்தரம் அவர்கள் பிரேரேபனையின்மீது எல்லோருடைய ஆமோதிப்புடன் தோழர் எ. ஒய். அருளானந்தசாமி (தஞ்சை தாலூக்கா போர்டு உபத்தலைவர்) அவர்கள் தலைமையில் தோழர் கே. கே. நீலமேகம் (கும்பகோணம் சுயமரியாதைச் சங்கத்தலைவர்) அவர்கள் திருமணத்தை நடத்தி வைத்தார்கள். மணமக்கள் இருவரும் திருமண ஒப்பந்தம் படித்து முடித்த பின் மணமகன் மணமகளுக்கும் மணமகன் மணமகளுக்கும் முறையே மாலைகள் சூட்டியும் மோதிரங்களும் மாற்றிக்கொண்டனர். கலப்புத் திருமணத்தின் அவசியத்தையும் புரோகிதக் கொடுமை விதவா விவாகம் முதலியவைகளைப்பற்றியும் தோழர்களான டி. சோமசுந்தரம், இரத்தினசாமி, சண்முகசுந்தரம், எ. ஆறுமுகம் (வி. எம்.) நாராயணசாமி (பட்டுக்கோட்டை) கே. நடராஜன் (யூனியன் போர்டு மாஜித் தலைவர்) முதலியவர்கள் இனிய சொற்பொழிவாற்றினர்கள். திருமணத்திற்கு வர முடியவில்லையென்று பலர் கடிதங்களை எழுதியிருந்தனர். திருமணத்திற்கு ஏராளமான பெண்களும்ஆண்கள்மாக விஜயம் செய்திருந்தனரென ஒரு நிருபர் எழுதுகிறார்.

குளியபத்தூர் திராவிடவாலிபசங்க ஆண்டு விழா.

ஷைசங்கத்தின் ஆண்டு விழா 27-3-32ந்தேதி. கோவைசுயமரியாதைவாலிபர் சங்கத்தின் தலைவர்திரு. எ. ஆர். சிவானந்தம் அவர்கள்தலைமையில் நடைபெற்றது. அதற்கு கோவையிருந்து திருவாளர்கள்

ஆர். ரங்கசாமி, என். கே. கஸ்தூரி, எஸ். குப்புசாமி, கெம்பையா பி. இரங்கசாமி, வி, சுப்பிரமணியம் வி. செகப்பணன், வி. ஆர். கோபால் இ. தர்மலிங்கம் எச். எஸ். முனிசாமி சி கே. ஆறுமுகம் ஆர். கிஸன் ஆகியவர்களும், உள்ளூர், வெளியூர் பிரபலஸ்தர்களும் ஆண்களும், பெண்களுமாக சுமார் 500 பேர்களுக்குமேல் விஜயம்செய்திருந்தனர். தலைவருக்கு வரவேற்புப்பத்திரம் காரியதரிசியால் வாசித்துக் கொடுக்கப் பட்டபின் தலைவர் திரு.சிவானந்தம் அவர்கள் முகவுரையாக அரியசொற்பொழிவு நிகழ்த்தினர். பின்பல அன்பர்கள் அதைத்தழுவிப் பேசினர்கள். திரு. எம். சி. ராஜாஅவர்கள் மீதுநம்பிக்கை இல்லையென்றும், திருவாளர்கள் அம்பெட்கார் சீனிவாசன் ஆகியவர்களைப்பாராட்டியும் இன்னும்பலமுக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு சமபந்தி சிற்றுண்டிக்குப்பின் கூட்டம்கலைந்ததென ஒருநிருபர்எழுதுகிறார்,

பட்டுக்கோட்டை சீர்திருத்தத் திருமணம்.

மேற்படி திருமணம் 17-3-32-ந்தேதி இவ்வூர் நியூஸ் ஏஜண்டு திரு. மருதமுத்துக்கும், திருமதி மாரிமுத்துக்கும் கும்பகோணம் சுயமரியாதைச் சங்கத் தலைவர் திரு. கே கே. நீலமேகம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. தலைவர் சுயமரியாதைத் திருமணத்தின் அவசியத்தைப் பற்றியும், தற்கால, பண்டைக்கால திருமணங்களைப்பற்றியும் பேசி மணமகனுக்கும், மணமகளுக்கும் மலர் மாலை மாற்றி மாங்கல்யம் சூட்டப் பட்டது.

பின் சில அன்பர்கள் அங்கு கூடியிருந்த ஜனங்களின் மனதில் பதியும்படியாக திருமணம் என்பதைப் பற்றிப் பேசினர்கள். பின் திருமணத்திற்கு வரமுடியாமல் வருந்தி பல நண்பர்களிடமிருந்து வந்த கடிதங்கள் படிக்கப்பட்டது என ஒரு நிருபர் எழுதுகிறார்.

சாத்தூர்காட்டை சுயமரியாதைச்சங்கம்.

ஷைசங்கத்தின் கூட்டமொன்று 27—3—32 ந்தேதி மாலை 4மணிக்கு திரு கே.. கணபதி தலைமையில் நடைபெற்றது அதுசமயம் திரு. ஆர். முத்துகிருஷ்ணன்அவர்கள் நாஸ்திகரும், ஆஸ்திகரும்என்னும் பொருள்பற்றிபேசினர். பின் திருவாளர்கள் எஸ். வீரப்பன் பொன்னுசாமி ஆகியிருவரும் அதைத்தழுவிப்பேசினர்கள் பின்பலதீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன என காரியதரிசி வந்தனைச் சாரத்துடன் கூட்டம்கலைந்ததென எழுதுகிறபனர்.

மாதர்சுதந்தர சங்கம்.

முத்து ராமலிங்காபுறம் மாதர் சுதந்திரசங்கத்தின் கூட்டமொன்று 23-2-32ந்தேதி திருமதி சிரங்கம்மாள் தலைமையில் நடைபெற்றது அதுசமயம்பல தீர்மானங்கள்நிறைவேறிய தெனஒருநிருபர் எழுதுகிறார்.

திருப்பூர் டி. மு. கோர்ட்டில் 1931-ஷ O S No 995.

பல்லடம் தாலூகா திருப்பூரிலிருக்கும் நாராயணபிள்ளை குமாரர் சங்கரன் பிள்ளை—வாதி.

சிலோன் தேசம், கொளும்புவில், தாவுட்பாய் ஜாபர்ஜீ கம்பெனியில் மேனேஜராயிருக்கும் தர்ம புத்ர பிள்ளை குமாரர் ஷெண்பகம் பிள்ளை—பிரதிவாதி.

இதனால் ஷை பிரதிவாதிக்கு தெரிவிப்பதாவது:—

ஷை வாதியானவர் ஷை பிரதிவாதியின் பேரில், வாதி பிரதிவாதியிடம் டிபாசிட்டாக கொடுத்து வைத்திருந்த தொகை ரூ. 500க்கும் அதற்கு கோர்ட்டு செலவுக்கும் பின் வட்டிக்கும் தாவா செய்து ஷை தாவாவானது இக்கோர்ட்டில் 1932-ஷ எப்ரல்-மீ 18-ந் யில் வாய்தா ஏற்பட்டிருக்கிறது. ஷை வாய்தாவில் ஷை பிரதிவாதி இக்கோர்ட்டில் காலை 11-மணிக்குள் நேரிலாவது வக்கில் மூல்யமாகவாவது ஆஜராகி தமக்குள்ள ஆட்சேபணையைத் தெரிவித்துக் கொள்ளாவிடில் ஒரு கட்சியப்பித் தீர்ப்பு ஏற்படும் என்கிற விபரம் அறியவும்.

S. ராஜம் அய்யர்,
வாதியின் கவன்சல்.
திருப்பூர், 30-3-32.

மலையாளம் சில்க்.

2½ வீதி 5-நீளம்பட்டு 1க்கு ரூ. 1-8-0
ஷேகம்பிக்கரை டஜன் 1க்கு ரூ. 15.
3-வீதி8-நீளம் வேஷ்டி 1க்குரூ. 3-8-0

S. K. R. வீவிங் பாக்டரி,
கோட்டார் திருவிதாங்கூர்.

"செவிடு"

மற்றெல்லாவித காது நோய்களையும் குணப்படுத்துவது "காமத் எண்ணெயே" ஒரு பாட்டில் வாங்கி உபயோகித்துப் பாருங்கள். பலனுக்கு உத்திரவாதம்.

1 பாட்டல் எண்ணெய் விலை ரூபாய் 1—4—0.

1 பாட்டில் டிராப்பர் உள்பட விலை ரூபாய் 1—8—0.

3 பாட்டல் வாங்குபவர்களுக்கு தபால் செலவு இலவம். இங்கிலீஷில் விண்ணப்பிக்கவும்.

Ballabha & Sons,
Filibhit R. K. Ry., U. P.

பெற்றோர்களே! கவனியுங்கள்.

உங்கள் குழந்தைகளுக்குகுலைக் கட்டி வயிற்றுக்கட்டி என்ற அபாயத்தினின்று நிச்சயமாய் குணப்படுத்தும் கைகண்ட மருந்து தெரியுமா? பிரசித்தி பெற்ற விஜய நகரம் டாக்டர் ஜம்மி வியாசராவ் அவர்களிடமும்

(விஜயநகரம் B. N. Ry.)
M. கல்யாணசுந்திரம்,
74 பட்டமங்கல தெரு மாயவரம்.

ஏஜண்டு & ஆர்கனைசர் என்ற இடத்திலும் கிடைக்கும்.

தமிழ் நாடெங்கும் ஏஜண்டு தேவை. ஆர்கனைசருக்கு உடனே எழுதவும்.

LEPROSY, LEUCODERMA, PATCHES SYPHILITIC ERUPTIONS, ECZEMA, etc.

No Matter Hereditary or self-acquired. No risk of injection. Cured absolutely. For particulars please write with detailed descriptions of the disease in English.

Post Box No. 11413,
Calcutta.

"சன்மார்க்கன்"

தமிழ்மாதப்பத்திரிகை.

பல அரிய கட்டுரைகளுடன் கைவல்யம்கட்டுரையும் தொடர்ச்சியாக வருகின்றது.

ஆண்டுசந்தா.

உள்நாடு ரூ. 1—0—0.
வெளிநாடு ரூ. 1—4—0.

ஆசிரியர்: —
சுவாமி சிவதேசம்,
"சன்மார்க்கன்" பழனி.

[6-ம் பக்கத்தொடர்ச்சி]

அரசாங்கம் இந்நிலைமையில் நிற்க, யாவரும், அதாவது, 35 கோடி மக்களும் ஜாதி மதங்களை வொழித்து சமதர்மம் அடைந்தாலொழிய, சுயராஜியம் வேண்டாமென்று வாதிப்பது, நடுநிலைமை வாதமாகா. எந்த ஞாயத்திற்கும் பொருந்தா. அறிஞர்களுக்கு உடன்படா.

இந்த விபரீத வாதத்தை, பல சுயமரியாதைத் தோழர்கள் "சண்டமாருதத்திலும்" "குடி அரசு", மற்றுமுள்ள சுயமரியாதை பத்திரிக்கைகளிலும், கூட்டங்களிலும் வரைந்தும், பேசியும் வருவதை நாம் அறிவோம். இந்த வாதம் பொருத்தமுள்ளதேல், கடல் அலை ஓயப்போவது மில்லை தம்பி தலை முழுகப் போவதுமில்லை என்போம். ஜாதி மத நடுநிலைமை, அரசாங்க திட்டத்தில் ஒருந்து வரும்வரை, ஜாதியும் வொழியா மதமும் வொழியா தென அறிக.

ஜாதியும், மதமும் சொத்துரிமையும், முதலாளிகள் தங்கள் செல்வத்தையும், செருக்கையும், ஆதிக்கத்தையும், உரிமையும், காப்பதற்குக் கட்டிக்கொண்டிருக்கும், கோட்டை மதில்கள என அறியவேண்டும். 'ஜாதிமதநடுநிலைமை' அக்கோட்டை வாயில்கள் என அறியவேண்டும். இவ்வாயில்கள் திறந்து இருக்கும்வரை சமதர்மம் நிலையாதெனவும் அறிதல் வேண்டும். ஆதலின் சமதர்மம் நிலைத்து 5 கோடி பாமர மக்கள் 'மிருக' வாழ்விலிருந்து 'மனுஷ' வாழ்வை அடையவேண்டுமாலுல் முதலாளி கோட்டை மதில்களை தரைமட்டமாக்கி, கோட்டை வாயிலுமற்றுப் போகவேண்டும். நமது இந்திய நாட்டில் 6 கோடி பாமரமக்கள் ஜாதி மதங்களால் கட்டுண்டுகிடக்கிறார்களென்றால் உலகில் 150 கோடி பாமர மக்கள் ஏறக்குறைய நம்மவர் நிலைமையிலேயே இருந்துவருகின்றனர். அவர்களுக்கும் நம்மவர்களுக்கும் விடுதலை அடைய வழியொன்றேயுள்ளது. அதாவது 'மதநடுநிலைமை' என்ற பித்தை ஒழித்தெறியவேண்டுமென்பதே. இந்த ஆயிரந்தலைகொண்ட விஷப்பாம்பினை உதறித்தள்ள பாமர மக்களின் சுயராஜ்யம் ஒன்றேவுளது. அதாவது சமதர்ம ராஜ்யம் வந்தால் மாத்திரந்தான் உலகினின்றும், நமது நாட்டினின்றும் மதம், ஜாதி, தீண்டாமை, 'பசிப்பிணி பதினெட்டும்' பறந்துபோம்.

பாமரமக்களுக்கு சுயராஜ்யமோ, சமதர்மராஜ்யமோ, முதலில் வரவேண்டுமென்ற அவசரத்தைக்காட்ட வட்டமேஜை தீர்மானங்களே போதுமான திருஷ்டாந்தமாகும். நேற்று நடந்த தீர்மானங்களை சற்று நோக்குவோம்.

வட்டமேஜை மகாநாட்டில் ஆங்கிலப்பிரதிநிதிகளும், தேசியப்பிரதிநிதிகளும், தாழ்த்தப்பட்டோர் பிரதிநிதிகளும் சேர்ந்து நமது இந்திய தேசத்தில் வழங்கவேண்டிய அரசியல் திட்டமொன்றை தயாரித்து வருகின்றார்கள். முதலில் அரசியல் பாதுகாப்புகளை யோசித்து (1.) சொத்துரிமை, (2) மதசமூக உரிமை, (3) ஜாதிஉரிமைகளை அந்தந்த பொருளுடையோருக்கும், அந்தந்த மதஸ்தர்களுக்கும், அந்தந்த ஜாதியாருக்கும் அரசியல் பாதுகாத்தல் அளிக்கப்படுமென்று தீர்மானித்திருக்கின்றார்கள். இதன் பொருள் என்னவெனில் சொத்து, மதம், ஜாதி, இம்மூன்று சமூக ஏற்பாட்டில் (Social System) எந்த மாறுதலையும் செய்யப்படாதென்பதே. நிகழ்ந்துவரும் சமூக ஏற்பாடுகளில் மாறுதலொன்று மின்றி இருந்தவாறே இருந்து வர இனிவரும் அரசியல் நடத்தப்படும். இந்திய சமூக வாழ்க்கையில் இருந்து வரும் பொருளாதார வித்தியாசங்களும் மதவித்தியாசங்களும் ஜாதி வேற்றுமைகளும், இந்திய ராஜ்யத்தில் ஆதரிக்கப்படும். பொருளுடமையில் தனவந்தனும், ஏழையும், நிலமுடையவனும், நிலமில்லாதவனும் வீடுடையவனும், வீடில்லாதவனும், சொந்தக்காரனும், சொந்தமில்லாதவனும், இருக்கும் நிலைமையிலேயே இருந்துவரவேண்டும். இதுதான் பிரிட்டிஷ் ராஜ்யத்தின் திர்மானத்தின் உள்ளும் புறம்புமான கருத்து. முதலாவது சொத்துரிமையைக்காப்பாற்றவேண்டுமென்பதை சற்று விசாரிப்போம். நமது இந்திய நாட்டில் வாழும் 35 கோடி மக்களில் எவ்வளவு பேருக்கு காக்கவேண்டிய சொத்துக்கள் இருக்கின்றன? கணக்கெடுத்துப்பார்த்த விபரப்படி நிலம்சாகுபடி செய்து பிழைப்போர்களில் 100 லட்சம் பேர் நிலச்சொந்தக்காரர்களும், 2000 லட்சம் பேர் நிலமில்லாமல் கூலிக்கும், வாரத்திற்கும் பயிரிடுவோருமாம்! ஆதலின் 100 லட்சம் நிலச்சொந்தக்காரர்களுடைய நிலங்களை பாதுகாக்க நமது நாட்டை ஆளும் துரைத்தனத்தார் மூன்று வட்டமேஜைகூடி ஆட்சி திட்டம் செய்யப்புகுந்தனர்! மற்ற 2000 சில்லரை லட்சம் மக்களைபாதுகாக்க யாதொன்றும் செய்வதைக்காணோம்!! இந்தப்பெருந்துகைகளில் 6 லட்சம்பேர் தீண்டப்படாதவர்களென்றும் தாழ்த்தப்பட்டவர்களென்றும், ஒடுக்கப்பட்டவர்களென்றும் வழங்கப்பட்டு வருகின்றது. இந்த 6 லட்சம் மக்களுக்கு ஒரு செண்டு நிலமாவது தங்களுக்கில்லையாதலால் இவர்களுக்கு எந்தவித சொத்தை பாதுகாக்க நமது வட்டமேஜை கூட்டத்தார் சொத்துபாதுகாக்கும் திட்டத்தை முதன்மையாகஅரசியல்திட்டத்தில் செய்ய மனம்வந்தது என்று கேட்கின்றோம்? சொத்துவொன்றில்லாத ஏழையஞதிகளாகிய 2000 லட்சம் பேருக்கு என்னத்திற்காக சொத்து பாதுகாப்பு வேண்டுமெனவும் கேட்கின்றோம். சொத்தில்லாத பஞ்சம் பஞதிகளுக்கு வேறெந்த பாதுகாப்பும் செய்யாமல் சொத்து பாதுகாப்புச்செய்யதான் நமது ஏம். சி. ராஜாவும், அம்பேத்காரும் வட்டமேஜைக்குட்புகுந்திருக்கின்றனர் என்று கேட்கின்றோம்? உணவு இல்லாதவனுக்கு உணவு கிடைக்கப்பாதுகாப்பும், ஆடை இல்லாதவனுக்கு ஆடை கிடைக்கப்பாதுகாப்பும், வீடில்லாதவனுக்கு வீடுகிடைக்க பாதுகாப்பும், ஞானமில்லாதவனுக்கு கல்விகிடைக்கப்பாதுகாப்பும், வேலை இல்லாதவனுக்கு வேலைகிடைக்கப் பாதுகாப்பும், செய்வதன்றோ, சமதர்ம ராஜரீகமுறையாகும்? இதை எல்லாம் விட்டுவிட்டு சொத்து யாதொன்றுமில்லாதானுக்கு சொத்து பாதுகாப்பும், மதமில்லாதானுக்கு மதபாதுகாப்பும், ஜாதியில்லாதானுக்கு ஜாதி பாதுகாப்பும் செய்ய திட்டம் செய்வதென்றால் இதைவிட பயித்தியக்காரத்தனம் என்ன இருக்கின்றது?

இது இருக்கட்டும் ஜாதிமத பாதுகாப்பை கவனிப்போம். நமது 6 கோடி தாழ்த்தப்பட்டவர்களுக்கு மதம் ஒன்று இருப்பதாக சொல்லமுடியாது. அவர்கள் இந்துக்கள் அல்ல இந்து தெய்வங்களை அவர்கள் தொழமுடியாது. இந்துகோயில்களில் நுழைய முடியாது. இந்து குளங்களில் அவர்கள் குளிக்கமுடியாது. இந்து தெய்வங்களாலும், கோயில்களாலும், குளங்களாலும் ஆதரிப்புவொன்றுமில்லாத தீண்டாதாருக்கு மதகாப்பு என்வேண்டும்? மதமில்லாதவர்களுக்கு மதபாதுகாப்புஎன்ன பிரயோசனம்? இந்து தெய்வங்களை தொழமுடியாத, இந்துகோயில்களில் நுழையமுடியாத, இந்து குளங்களிலும் கிணருகளிலும்குளிக்கமுடியாத, ஏழு கோடி பஞ்சமர்களுக்கு சமயப்பாதுகாப்பு என்னத்திற்கு?

ஜாதியை பாதுகாக்கும் நிபந்தனையை எடுத்துக்கொள்ளுவோம். அவரவர்கள் ஜாதி ஆசாரங்களை அவரவர் செய்துவர ஜாதிபாதுகாப்பு செய்துள்ளார். இந்த பாதுகாப்பு ஜாதி உள்ளவனுக்குத்தான் வேண்டும். மகாத்மா காந்திக்குவேண்டும்.. மாளவியாவுக்குத்தான் வேண்டும். வர்ணாச்சிரமத்தார்களுக்குத்தான் வேண்டும் ஆனால் ஜாதிக்கும் வருணாச்சிரமத்திற்கும் கோயில்குளத்திற்கும் அப்புறப்படுத்தப்பட்ட பஞ்சமருக்கு ஜாதி சமய வருணாச்சிரம பாதுகாப்புகள் என்வேண்டுமோ அது விளங்கவில்லை.

ஆனால் ஒன்று உள்ளங்கையில் நெல்லிக்கனிபோல் விளங்குகின்றது இந்த மூன்று பாதுகாப்புகளும் சொத்துடையவனுக்கும் மதாபிமானிக்கும் ஜாதியுடையவனுக்கும் ஏற்பட்ட பாதுகாப்புகளேயொழிய ஏழையஞதிகளாகிய 2000 லட்சம் பேருக்கு ஏற்பட்ட பாதுகாப்புகளல்ல. இந்த பாதுகாப்புகள்யாவும் பணக்காரர்களையும் மதப்பித்து கொண்டவர்களையும் ஜாதித்திமிர் பிடித்தவர்களையும் காப்பதற்கு ஏற்பட்ட அரசியல் விதிகளாகுமென அறிக. இந்த பாதுகாப்புகள் யாவும் கடந்த 5000 வருஷங்களாக பலகோடி இந்திய பாமர மக்களும் தாழ்த்தப்பட்டவர்களும் தீண்டாதாரும் பஞ்சமர்களும் பல்லு பறை பதினெட்டென்று வழங்கும் 20 கோடி மக்களும் அடிமைத்தனத்திலும் அறியாமையிலும் மௌடீகத்திலும் பசியிலும், பிணியிலும், இனியும் 5000 வருஷம் கிடந்து வுழல ஏற்பட்ட பாதுகாப்புகளென அறிக.

இன்னொரு ஆபாச பாதுகாப்பை சற்றுபாருங்கள். பஞ்சமர்களுக்கும் தாழ்த்தப்பட்டோருக்கும் வேண்டுமானால் பிரத்தியேகமாக கோயில்களும் குளங்களும், தருமஸ்தாபனங்களும், தீண்டாதார் தங்களுக்கென ஏற்படுத்திக்கொள்ளலாம்! இந்த ஆதிக்கத்தை ஆதரிக்க பாதுகாப்புகள் செய்யப்படுவாம்! இதற்குத்தானா நமது வட்டமேஜை அங்கத்தினர் 7000 மைல் தூரத்திலிருந்து இங்கு வந்ததென கேட்கின்றோம்? இதன் கருத்து என்னவெனில் பிராமணன் பிராமணனாய் இருக்கட்டும், பறையன் பறையனாய் இருக்கட்டும் அந்தந்த ஜாதி அந்தந்த ஜாதியில் இருக்கட்டும், ஜாதிப்புறட்டும், மதப்புறட்டும் வருணச்சிரமமும் தழைத்தோங்கட்டும். சொத்துப்பிரிவினை மதப்பிரிவினை, ஜாதிப்பிரிவினை, வாழ்க, வாழ்க, பல்லாண்டு வாழ்கவென ஆதரிக்கும் சொத்து, மத, ஜாதி, பாதுகாப்புகளென அறிக. அரசும், காங்கிரசும் மற்றும் பல தேசீய ஸ்தாபனங்களும் ஈமாகிய 2000 லட்சம் பாமரமக்களை கை விட்டு விட்டால் என்ன செய்வதென்று கேட்கலாம். அதற்கு ஒரே விடைதான் உண்டு. அதாவது சமதர்மத்தை தங்களுக்குத்தானே நிலைநாட்ட முயற்சிசெய்கல் வேண்டும். நம்மை ஆதரிப்பார் உலகில் நம்மைத்தவிர வேறுயாருமில்லையெனஅறிக. இனி கடை அத்தியாயத்தில் சமதர்மம் இன்னதென விளக்கிக்காட்டி நாம் செய்யவேண்டிய வேலையை சுருங்க உறைப்பாம்.

சத்தியாக்கிரகமா? சண்டித்தனமா?

மேற் கண்ட 6—9—31 ந் தேதி "குடி அரசு"ல் வெளியான "சத்தியாக்கிரகமா சண்டித்தனமா" என்ற தலையங்கத்தை புத்தக ரூபமாக வெளியிட்டிருக்கிறோம். இதை விநியோகிக்க விருப்பமுள்ள சுயமரியாதை அன்பர்கள் முன் பணமனுப்பிப் பெற்றுக்கொள்ள வேண்டுகிறோம். 100 புஸ்தகம் விலை ரூ. 0—12—0.

1 ரூ. ஸ்டாம்பு அனுப்பினால் 100 புஸ்தகம் புக் போஸ்டில் அனுப்பப்படும்.

மானேஜர்,
குடி அரசு, ஈரோடு.

(5ம் பக்கத்தொடர்ச்சி)

வட்டமேஜை மகாநாடிற்குப் போனநமது பிரதிநிதிகள் தீண்டாமையென்னும் கொடுமையை நாம் வைத்துக் கொண்டிருந்ததினால் மானம்கெட்டுப்போனார்கள் என்பதைக்கொண்டு கனம் காந்திஜி பம்பாய்வந்து இறங்கினஉடனே தீண்டாமையென்னும் மானங்கெட்டதைவிட்டு விடுங்களென்று நமது ஜனங்களுக்குச் சொன்னார். வட்டமேஜை மகாநாட்டில் மானங்கெட்டால் சைவத்திற்கு, வைணவத்திற்கு, சங்கராச்சாரிக்கு, மகந்திற்கு மற்றுமுள்ள ஆசாரி குருக்கள்புரோகிதர் பக்தர்கள் இவர்களுக்கென்ன? இவர்கள்சிஷியர் களுக்குத்தானென்ன? மானுபிமானத்தை விட்டுவிடு, மானுபிமானத்தை வைத்துக்கொண்டு வாழாதே என்றல்லவோ இவர்கள் உபதேசங்களிருக்கின்றன. மானுபிமானமில்லாத வைகளைக்கட்டி அழுதுஅவர்கள் கடாட்சமும் பெறக் காத்துக்கொண்டிருக்கும் நாம் மானுபிமானத்தோடு வாழுவதெப்படி? மனிததன்மைவருவது தானெப்படி? மானம்கெடாமலிருக்க கனம். காந்திஜிமார்க்கம் சொல்லுகிறார். மானம் கொட்டுப்போக நமது குருவும் ஆசாரிகளும் பண்டிதர்களும் உபதேசம் செய்கிறார்கள். இதனால்தானே கனம் காந்திஜிக்கு இந்துசமய சாஸ்திரம் தெரியாதென்று கும்பகோணத்துப் பார்ப்பனர்கள்சொன்னார்கள்.

நம்முடைய நாட்டை நாமே ஆண்டு கொள்வது நம்முடையப்பிறப்புரிமை என்று ஆங்கிலேயர்களிடம் சொல்லக்கற்றுக்கொண்டதுபோல தாழ்த்தப்பட்டிருக்கும் ஜாதியார்களும் அவரவர்கள் நாட்டிலுள்ள எல்லாஉரிமைகளும் அவர்களின் பிறப்புரிமை என்றுநாமேன் தெரிந்துகொள்ளவில்லை? ஆங்கிலேயர்களிடம் நமது பிறப்புரிமையைக் கேட்கிறோம். நம்மவர்களின் பிறப்புரிமையை மறுக்கிறோம். சுதந்தரத்தைக் கொடுப்பதற்குத்தயாராகயில்லாத எவனும்சுதந்திரத்துக்கு அருகனல்லன் என்கிற நியாயம் நமக்குப்புலப்படவில்லை. மற்றநாடுகளில் உலகப்பொதுகடவுளின்தன்மையையும், உலகப்பொது விதியின் நியாயத்தையும் உணர்ந்து அங்கீகரித்து நடக்கும் ஏற்பாட்டில் அன்னாட்டுச் சமயப்புரோகிதர்கள் தெய்வம் உலகவிவகார அறிஞர்கள் குறுக்கிடுவதில்லை. நமதுநாட்டிற்கோ உலகப்பொது தெய்வத்தன்மைகளைக் கற்றுக் கொடுக்கவில்லை. உலகப் பொதுவிதியின் விவகாரங்களைச் சொல்லிவைக்கவுமில்லை. ஆனதால் உலகப்பொது விதியும், உலகப் பொதுக்கடவுள்தன்மையும்உணராத நமதுநாட்டு சமயவாதப்புரோகிதக் குருக்களுக்கும் விவகாரப்பொருப்புள்ள ஜனங்களும் குறுக்கிட்டு உண்மையையும் நியாயத்தையும் தடைப்படுத்துகிறார்கள். ஆதாரங்களானகடவுள் சாஸ்திரங்களும் ஒழிந்துபோகவேண்டுமென்று சுயமரியாதைஇயக்கம்சொல்லுகின்றன. அதைக்கேட்டு சுயமரியாதைஇயக்கம் கடவுளில்லை என்கிறது, சமயத்தைக்குற்றம் சொல்லுகிறது என்று சமயவாதிகள் சொல்லுகிறார்கள். எந்தசமயவாதிகள் ஸ்பென்சர் சோடா குடிக்க ஆசைப்படாதவர்கள்,அதற்குஏதாவதுதடைகளுண்டா? மற்றவர்களை சோற்றுக்கடையிலும் தண்ணீர்கிணற்றிலும் மேன்தடைப்படுத்த வேண்டும். எந்தசமயவாதிகள் தங்கள்பிள்ளைகளை ஆங்கிலேயநாட்டிற்கு அனுப்பி ஆங்கிலப்பட்டம் பெற்றுவர ஆசைப்படாதவர்கள்.மற்றவர்கள் பிள்ளைகளைபோரடுப்பொதுப்பள்ளியில் படிக்க ஏன் தடைசெய்யவேண்டும். ஆங்கிலேயசயன்ஸ்படிக்க ஆசைப்படாதசமயவாதிகளுண்டா? அதற்குத்தடையுண்டா? நமதுஞானசாஸ்திரத்தைப்படிக்கமற்றவர்களை கனம் அண்ணாமலைப் பள்ளியில் என் தடைப்படுத்திவைத்திருக்கவேண்டும்,இந்தத்தடைகளெல்லாம் விலகவேண்டுவது நியாயமானால், ஜனனுயகத்து வத்திற்கு விரோதமென்றால் அதற்குக்குறுக்கேநிற்கும் சமயங்களும், சாஸ்திரங்களும் அதற்குஆதாரமான குறுகியமனோபாவத்தை உடைய கடவுளும் ஒழியவேண்டுவது நியாயந்தானே?

சாதிகுலம் பிறப் பிறப்புப்பந்த முத்தி யருவருத்வதன்மை நாம மேது மின்றியெப் பொருட்குமெவ் விடுத்தும் பிரிவறநின்றியக்கம் செய்யும் சோதியாம் கடவுளைச் சுயமரியாதையியக்கம் குற்றம்சொன்னதில்லை சொல்லவந்ததுமன்று.

விண்ணிறைந்த வெளியாய் மன வெளியிற் கலந்தறிவாம் கடவுளைக் குற்றம்சொன்னவர்கள் யார்? இல்லையென்று சொன்னவர்கள் தான்யார்? பகர்வன வெல்லாமாகியல்லவாகிப் பரமாகிச் சொல்லரிய பான்மையாகித்துகளறு சங்கற்பவிகற்பங்களெல்லாம் தோயாத வறிவாகி சுத்தமாகி நிற்கும் கடவுளைச் சுயமரியாதை இயக்கம் இல்லைஎன்று சொன்னதேயில்லை

பூநூல்கலியாணம் செய்துபூனூலணிந்து பார்ப்பாரஜாதியாக்கி வெளியில்வந்தால் தீட்டு அதற்குச்சுத்தியும் செய்து பெண்சாதிபிள்ளைகளோடிருந்து தாசிவீட்டிற்குப்போய் பெண்டாட்டிகோபித்து மறுநாளும் தாசிவீட்டிற்குப்போய் மட்டையடிபட்டு மருநாள் பக்தர்களுக்குக் காட்சிகொடுத்து பதிவிரதைகளின் கற்பை அழிக்கப்பல வேஷமெடுத்து தான் செய்த வேதத்தில் கொலை,களவுகளை ஏற்படுத்திஅதை மறுத்தவர்களை கழுவில்போட உதவிசெய்து, தான்சொன்ன வேதத்தைப் பார்ப்பார்கள் தவிர மற்றவர்கள் கேட்டால்காதில் ஈயத்தைக்காச்சி ஊற்று, வாயில் சொன்னால் ஒன்பதங்குலம் இரும்பைக் காச்சித்தொண்டையில் செலுத்து, சூத்திரன் என்கிற அடிமைகளுக்குப் பிராமணன் தெய்வம், பிராமணர்களுக்கு நான்தெய்வம் அவர்கள்பாதம் என்சிரசில், அந்தணர்களை வணக்குவது அவர்களுக்கு ஊழியம் செய்வது மேமற்றவர்கள் தொழில், அந்தணர்களுக்கு, நானடிமை அவர்கள் வயற்றைப்பெரிதாக்கி இரண்டில்பெருக்கி நிறைத்து வப்படம், வறறல், வாழைப்பழம், வடை, லட்டு, இவைகளைத்துண்டில் கட்டி எவன்கொடுத்துக்கொண்டே யிருக்கிறானே அவன் குடும்பம் குட்டிச்சுவராகப் போனலும் மோக்ஷத்திற்கனுப்பிக் கொண்டேயிருப்பேன். என்னண்டை பறையர்வந்தால் அக்கினியில் குழித்துத் தான்வரச் சொல்லுவேன், அல்லாதவர்களை அன்னியகடவுளிடம் போகச் சொல்லி அவர்களாலே நானும் என் பக்தர்களும் அடியும் உதையும்பட்டு, அதுபொருக்காமல் ஆங்கிலேயரிடம் அடைக்கலம் புகுந்து, அவர்கள் ஆதரவும்பெற்று பின்கோவிலில் எழுந்தருளிபக்கோடிகளுக் கெல்லாம் காட்சி தந்துகொண்டிருப்பதாகச்சொல்லப்படும் அந்தகடவுள் இல்லைஎன்று சுயமரியாதை இயக்கம் சொன்னதுண்டு இன்னும் சொல்லிவருகிறது.

நீதிபெருங் குருவாகி, மனவாக்கெட்டி நிச்சயமாய்ச்சொச்சமதாய் நிமலமாகி வாதமிடும் சமயநெறிக்கு அறியாமல் மௌனத் தோர்பால் நின்றசோதியைப் பற்றிநமக்குக் கவலைவேண்டாமென்றுசொன்னதுமுண்டு.

நமக்கு வேண்டிய காரியங்களை நம்அறிவைக்கொண்டு செய்துகொள்ளுவோம் கடவுள் அதன்குருக்கே வந்து விழவேண்டியதில்லை, கடவுள் வந்து குருக்கே விழுந்து விடுவதினால் நமது தப்பையும், நம்வேலையையும் அவர்தலையில் போட்டுவிடுகிறோம் அவரோ, பழயகாலத்துக் கடவுள் நமது வேலையோ இந்தக் காலத்துவேலை ரொம்ப வயதானவர் அநேகவேலையை உடையவர் விஞ்ஞானவாதி பௌதீகவாதி, சமயவாதி, வானசாஸ்திரவாதி, வட்டதுருவ வாதி, இமயமலை உச்சிஎரினவாதி, ராஜீயவாதி, சீர்திருத்தவாதி இத்தனைவாதிகளையும்கண்டு, அவரவர்திறமையைக் கண்டு அதற்குசாக்ஷி யாயிருப்பதால் நமதுவேலையை அவர் ஏற்றுக்கொள்ளாமல் நமதலையிலேயே போட்டுவிடுகிறார். நமக்கு காரியமும் கெட்டு கைப்பொருளும் போய்விடுகிறதுகுற்றமும்நமக்கும் படுவதில்லை. ஒருதொழிலிலும் தேர்ச்சியடைய முடியவுமில்லை.

உங்கள்

கண்ணையும்

காதையும்

கவனித்துக் கொள்ளுங்கள்

பூவிழல் !!

கண்ணில் பூவிழுந்து பார்வையைத் தடுப்பதை ஆபரேஷன் இல்லாமல் சுகப்படுத்தப்படும். நிலைமை எவ்வாறு இருப்பினும் நான்கு வாரகாலில் நிச்சயமாக குணப்படுத்தி விடுவோம்.

செவிடு !!

பாதி அல்லது முழுவதும் செவிடாயிருந்தால் கூடப் பரவாயில்லை. காதுரைச்சல், தலைவலி இருந்தாலும் அக்கரையில்லை. சுத்தமாக நிவர்த்திக்கப்படும். குணத்திற்கு உத்திரவாதம்.

விபரங்களுக்கு இங்கிலீஷில் விண்ணப்பித்துக் கொள்ளவும்.

"Sri" Works

Beadon St. Calcutta,

சென்னை லோக்கல் போர்டு ஆக்ட.

(1880 ஆம் வரையிலுமுள்ள சீர்திருத்தங்களுடன்கூடியது)

M. S. பார்த்தசாரதி அய்யங்கார், B A, B L,

அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது.

விலை ரூபா 2—0—0. வி பி செலவு ரூ. 0—5—0.

மானேஜர்,

குடி அரசு புத்தகசாலை, ஈரோடு.

தாது புஷ்டிக்கு

"கெய்ரோடைன்"

சாப்பிடுங்கள்.

இந்தியா கவர்ண்மெண்டில் ரிஜிஸ்தர் செய்தது. நபும்சகர்களுக்கும் அளவு மீறிய தாதுபுஷ்டி தரும். உண்மையான நற்சாட்சிகளடங்கிய பெரிய புத்தகம் இலவசமாக அனுப்புகிறோம். விலாசம்:

ஆர். எஸ். பதி அன்கோ (ரிஜிஸ்டர்டு) மதுரை.

[4ம் பக்கத் தொடர்ச்சி]

இரண்டுவருஷகாலமாயிருந்த இளைப்பு வியாதி முற்றிலும் குணமாய்விட்டது. தேகபுஷ்டியுண்டாகிவிட்டது.

கொழும்பு. (சிலோன்)

தங்கள் கம்பெனியிலுள்ள கெய்ரோடைன் மருந்து ஒரு புட்டி வாங்கி நாற்பது நாள் சாப்பிட்டேன். எனக்கு சுமார் இரண்டு வருஷ காலமாக இருந்த இளைப்பு வியாதி முற்றிலும் குணமாகி விட்டது. அதிகமான நீர்க்கடுப்பும் மூலச்சூடும் இருந்தது. பூர்ணமாய்ச்சௌக்கியமாய்விட்டது. தங்கள் கெய்ரோடைன் மருந்தினால் மேற்கண்ட சுகங்களெல்லாம் உண்டாகி நல்ல தேக சுகத்துடன் இருக்கிறேன். தங்கள் மருந்தைப்பற்றி அளவிலாச்சந்தோஷமடைந்தேன். இவ்வளவு அதிசயமான மருந்தைக்கண்டுபிடித்து உலகத்தாருடைய வியாதியைத் தீர்த்து வருகிறபடியால் உங்களுக்கு நான் என் மனப்பூர்வமாகக்கோடி கோடி நமஸ்காரம் அளிக்கிறேன். உங்கள் கம்பெனி நீடுழி காலம் வாழுமாக.

(Sd) பி. வெள்ளையா, முதலாவது நம்பர் தோட்டம்,
18—2—31. சீ பீச்சு ரோடு, கொழும்பு, சிலோன்.

.....மேகநீர்தீர்ந்து உடம்புதங்கநிறமாகிவிட்டது.

மதராஸ்.

எனக்கு.....தங்கள் கேட்லாக் ஒன்று கிடைத்தது. அதை வாசித்துப் பார்த்து அதில் தாங்கள் பிரசுரித்தபடி நான் நெடுநாளாய் எனக்கு ஏற்பட்டுள்ள மேகவியாதிக்கு அனேக வைத்தியர்களிடம் மருந்து வாங்கிச் சாப்பிட்டும் குணமாகாமல் நிரம்பவும் கஷ்டப்பட்டுக்கொண்டிருந்தபின் தங்கள் கெய்ரோடைன் மருந்தை வி. பி. யில் வரவழைத்துச் சாப்பிட்டதில் என் சரீர முழுதும் பெரியம்மை வார்த்ததுபோல் இருந்த மேகநீரானது சூரியனைக்கண்ட பனிபோல் மறைந்து என் சரீரம் தங்கநிறமாகிவிட்டது. எனக்கு அனுப்பின ஐந்து புட்டிகளில், ஒரு புட்டி நானும் மீதி நான்கு புட்டிகள் எனது நண்பர்கள் நால்வருக்குக் கொடுத்தேன். அவர்களும் சாப்பிட்டுத் தேக சுகத்துடனிருக்கிறார்கள். இப்படிப்பட்ட அருமையான மருந்தைக் கண்டுபிடித்து உலகில் அவஸ்தைப்படும் நோயாளரைக் குணப்படுத்தும் உங்களுக்குக் கோடி கோடிநமஸ்காரம்.....

(Sd) சின்னசாமி நாயுடு,
11.2-31 67-நிர் பெரியண்ணமுதலி யெரு, பெரியமெட்டு, சென்னை.

அளவிடமுடியாத மகிமை ஏற்பட்டிருக்கிறது.

திருக்குவளை—தஞ்சாவூர்.

தங்கள் கெய்ரோடைன் மருந்தின் குணாதிசயங்களைப்பற்றி அளவிடக்கூடாத பெருமை பொருந்தியதாகையால் ஒன்றை மட்டும் குறிப்பிட்டுச் சொல்ல முடியவில்லை. மூலச் சூட்டைத் தணித்து இரக்தவிருத்தியை உண்டாக்குவதில் இதற்கு நிகர் ஒன்றையுங் குறிப்பிட முடியாது.

தங்கள் சந்தனாதித் தைலத்தால் எனக்குள்ள தலைவலி நிவர்த்தியாகிவிட்டது. அதின் பெருமையைப்பற்றி அளவிடமுடியாத மகிமை ஏற்பட்டிருக்கிறது. சீக்கிரத்தில் ஆறு பாட்டில்களுக்கு ஆர்டர் அனுப்புகிறேன்.

தங்கள் சித்தர் சஞ்சீவி மாத்திரையை உபயோகப்படுத்திக் குணம் கண்டவர்கள் வேறு மருந்தை அபேட்சிக்கமாட்டார்கள். அதின் பெருமை நிரம்ப மேன்மை பொருந்தியதானதால் எக்காலமும் சித்தர் சஞ்சீவி மாத்திரை இப்போது இருக்கும் குணம் குறையாமல் இதுகள் மாறுமல் இருக்கும்படி.....பிரார்த்திக்கிறேன்.

(Sd) K. V. துரைசாமி அய்யர், திருக்குவளை, தஞ்சாவூர் ஜில்லா
23—2—31

பூரண சௌகரியமாகி தேகத்திடமாகவும் இருக்கிறார்கள்.

அழகாபுரி—ராமநாதபுரம்.

தங்களிடம் "கெய்ரோடைன்" மருந்தை செட்டிய வீட்டுப் பெண்பிள்ளைக்கு வாய் வயிறு நிரம்ப வெந்து அன்னகாரம் முதற் செல்லாமலிருந்தது. அவர்களுக்கு ஷை மருந்தை எண்பது வேளை கொடுத்தேன். பூரண சௌகரியமாகி சௌக்கியமாகவும், தேகம் நிடமாகவுமிருக்கிறார்கள். அப்பால் ஒரு வண்ணானுக்கு நெஞ்சில் கபம் உண்டாகி இரண்டு வருஷம் இடைவிடாமல் இருமலினால் நிரம்ப அவஸ்தைப்பட்டுக் கொண்டிருந்தான். அவனுக்கும் ஷை மருந்தை நாற்பது வேளை கொடுத்தேன். அவனுக்கும்.....
.....முக்கால் வரிசை சௌகரியமாகி தேகமும் நிடமாயிருக்கிறது.

24—2—31. (Sd) இ. ராமய்யா பிள்ளை, கெல்லங்குடி,
அழகாபுரி P. O. இராமநாட் ஜில்லா.

வாய்ப்புண் நீங்கி அதிசயிக்கும்படியான தேக புஷ்டியும் பலமும் உண்டாகிவிட்டது.

பட்டுக்கோட்டை.

கெய்ரோடைன் தேகபுஷ்டியும் அதிசயிக்குப்படியான பலமும் உண்டாகிவிட்டது. தங்களுடைய (கெய்ரோடைன்) மருந்தை ஒரு புட்டி வாங்கி இருபது நாள் சாப்பிட்டேன். என்னுடைய உடம்பு அதிகமாய் மெலிந்து அசதியாய் இருந்தது. வாய்ப்புண் அதிகமாய் இருந்தது. இந்த மருந்தைச் சாப்பிட்ட பின்பு வாய்ப்புண் பூராவும் சௌகரியமாய்விட்டது. மெலிந்திருந்த தேகம் நல்ல இரத்த புஷ்டியாகி உடம்பு தேகபுஷ்டியுண்டாகிவிட்டது. தங்கள் கெய்ரோடைன் மருந்தினால் மேற்கண்ட சுகங்கள் உண்டாகி தேகசுகத்துடனிருக்கிறேன்.....தங்களுடைய கெய்ரோடைன் மருந்துகளின் குணம் வளர்பிறை மதியம் போல் விருத்தியாகி எல்லா இந்தியர்களும் வாங்கி உபயோகப்படுத்தி பூரண சுகமடைவார்களாக.

(Sd) ரா. நடேச ஆச்சாரியார்,
சவுக்கண்டி தெரு, பட்டுக்கோட்டை, (தஞ்சாவூர் ஜில்லா)
24—2—31

வியாதி சௌஸ்தமாயிருக்கிறது.

பாலக்காடு.

தங்களுடைய கெய்ரோடைன்.....பாட்டில் 2 அனுப்பித் தரவேணுமாய்க் கேட்டுக் கொள்கிறேன். இதற்கு முன் அனுப்பித்தந்தது சாப்பிட்டு வியாதி சௌஸ்தமாயிருக்கிறது. இன்னும் அநேக பாட்டில் செலவிருக்கும்.

(Sd) M. சிதம்பரத்தரகர், மருந்துக்கடை,
27—2 31. பாலக்காடு.

பூரண விடுதலை அடைந்தேன்,.....

ஜோலார் பேட்டை.

(ஆங்கிலக் கடிதத்திற்கு மொழி பெயர்ப்பு.)

நான் இடுப்புப்பிடிப்பு, கண்ணெரிச்சல், மொளிக்கு மொளி கடுமையான வலிகளால் அதிகத் துன்பப் பட்டுக் கொண்டிருந்தேன். முக்கியமாய் இடுப்பில் தான் அதிக வலி. தங்களுடைய மருந்தை மிகவும் ஜாக்கிரதையாய் உபயோகித்த பிறகு என்னுடைய வியாதிகளிலிருந்து நான் பூரண விடுதலையடைந்தேன், குறைவில்லாத நல்ல தேகசுகத்தையும் நான் மீண்டும் பெற்றேன். என்னுடைய உடம்பின் நிறையானது 2 பவுண்ட் அதிகமானதைப் பற்றி நான் அதிக சந்தோஷப் படுகிறேன்.....

(Sd) எஸ். இராமநாதன் c/o Mr. சி எஸ். கிருஷ்ணசாமி ஐயரவர்கள்
10—2—31 ஜோலார்பேட்டை.

சோப்பனஸ்கலிதம் குணம்,.....

மதுரை.

ஆங்கிலக் கடிதத்திற்கு மொழி பெயர்ப்பு.

தங்களுடைய முதல்தரமான சித்தர் சஞ்சீவி பேதி மாத்திரையை மூன்று நாள் சாப்பிட்டு அதன் பிறகு தங்களுடைய புகழோங்கிய கெய்ரோடைன் பெரிய புட்டி ஒன்றையும் சாப்பிட்டேன். பேதிமாத்திரை வயிறறிலுள்ள எல்லா மாசுக்களையும் மிகுதியான பொடிக் கிருமிகளையும் வெளிப்படுத்தியது. நான் மொளிகளில் வலியாலும். வாய்வுக் குற்றத்தாலும், பொதுவாகப் பலவீனத்தாலும் வருந்திக்கொண்டிருந்தேன். தங்களுடைய கெய்ரோடைன் சாப்பிட்ட பிறகு மேலே கண்ட எல்லா நோய்களும் பூரணமாய் குணமானதைப் பார்த்து நான் ஆச்சரியப்படுகிறேன். அது சோப்பனஸ் கலிதத்தையும் சுகப்படுத்தினதோடு முகத்திற்கு அழகும் தந்திருக்

கிறது. நமது பலத்தை அளவுக்குமிஞ்சி அதிகப்படுத்துவதற்கு உண்மையில் இது.....இந்தக் கெய்ரோடைன் ஜனனேந்திரிய அமைப்பின் நரம்புகளின் மேல் நேராகச்சென்று வேலை செய்து ஒரு வரை உலக இன்பங்களை யெல்லாம் அனுபவிப்பதற்குத் தகுதியுள்ள ஒரு புதிய பலமுள்ள வாலிபனாக்கி விடுகிறது. வருஷத்துக்கொரு முறை இதை உட்கொண்ட பொழுது அதுகல்ல தேகசுகத்தை அருளுகிறது என்பதை என் அனுபவத்தில் நான் கண்டிருக்கிறேன்.

(Sd) எம். மாணிக்கம் பிள்ளை.

21—2—31. கிளார்க், இந்தியன் பாங்க் லிமிடெட், மதுரை.

விரிய விருத்திக்கு இதைப் போன்ற மருந்தை நான் எங்கும் கண்டதில்லை.

மதுரை.

மகா-ரா-ரா-ஸ்ரீ ஆர். எஸ். பதி அன் கோ அவர்களுக்கு நமஸ்காரம் செய்து எழுதியது.

நான் தங்களிடத்தில் கெய்ரோடைன் என்ற மருந்து ஒரு பாட்டில் வாங்கிச் சாப்பிட்டதில் எனக்கு நல்ல பசியுண்டாகி சாப்பிட்டதெல்லாம் ஜீரணமாகி நகக்கண்ணிலும், கண்ணிலும் இரத்தம் செவ்வரளிப்புஷ்பம் போல் ஏராளமாக உண்டாகி முகத்திற்கு அழகும் தேஜசும் உடம்புக்கு நல்லமேனியும் உண்டாகியிருக்கிறது. தேக புஷ்டியும் நானே ஆச்சரியப்படும்படியான தாதுவிருத்தி ரிம் வீரியவளமும் ஏற்பட்டிருப்பதைப்பார்த்து எனக்கு சந்தோஷம் உண்டாகிவிட்டது. வீரியவிருத்திக்கு இதைப்போன்றமருந்தை நான் எங்கும் கண்டதில்லை. இந்த மருந்தினுடைய பெருமையை எடுத்துச்சொல்ல நான் அருகனல்ல. தங்கள் மருந்தால் எனக்கேற்பட்ட சுகத்துக்கு நன்றிபாராட்டுகிறேன். இத்தக்கெய்ரோடைன் என்ற தாது புஷ்டி மருந்தை எல்லா ஜனங்களும் வாங்கிச்சாப்பிட்டு இதனுடைய மகிமையை அறிந்து நோயன்னியில்சுகமாக வாழ.....பிரார்த்திக்கிறேன்.

(Sd) டி. எஸ். ராமகிருஷ்ணச்சாரி,
2 நிர். அமெரிக்கன் மிஷன் சந்து, ராமநாதபுரம் ரோடு, மதுரை.
19—2—31

நான் தங்களுக்கு என்ன கைமாறு செய்யப்போகிறேன்.

சிலோன்—வதுளை.

தங்கள் கம்பெனியிலுள்ள கெய்ரோடைன் மருந்து ஒரு புட்டி வாங்கி 20 நாள் சாப்பிட்டேன் அம்மருந்தினுடைய சக்தியால் எனது தேகத்தில் நாளடைவில் சம்பந்தப்பட்டிருந்த தேக காங்கை, மூளைக் கொதிப்பு, வாய்வுக்குத்து, பசியின்மை இவை முற்றிலும் சூரியனைக் கண்ட பனிபோல் விலகி சொஸ்தமாகிவிட்டபடியால் இன்னும் நாளொருவண்ணமாக உடலுக்கு வலிமையும் ஆயுள் பலமும் தந்து பூரணசுக முண்டாகுமென்பது நிண்ணயம்.

ஆனதுபற்றி மேற்கண்ட வியாதியால் பின்காலத்தில் அடையப்போகிற கஷ்டநஷ்டங்கள் அனைத்தும் தாங்கள் அனுதாப நிலைமையைக்குறித்து ஆனந்தமுண்டாக்கத்தக்க இம்மருந்தினால் சொஸ்தப்படுத்திக்கொள்ளும்படியான இவ்வநிக்கிரமத்திற்கு ஈடுபடச் செய்தது.....சொல்லத்தகும். மேலும் உமது பரோபகார எண்ணத்தைக்குறித்து மேன்மேலும் நான் தங்களுக்கு என்ன கைம்மாறு செய்யப்போகிறேன்,.....சுபம்.

(Sd) N. கருப்பையா உபாத்தியாயர்,
4—3—31. குருந்துக்கொல்லை, சிலோன், வதுளை.

நிரம்ப பலமாயிருக்கிறது. நிரம்ப சந்தோஷம், மருந்து கைகண்ட பலனைத் தருகிறது. ரூபாய் பெரிதல்ல.

திருவள்ளூர்.

மகா-ரா-ரா-ஸ்ரீ மதுரை ஆர். எஸ். பதி அன்கோ அவர்களுக்கு திருவள்ளூர் பஜார் காபி ஹோட்டல் பாஷ்யமய்யங்கார் எழுதிக் கொண்டது:—

எனக்குப் பசியில்லாமலிருந்தது. இந்தக் கெய்ரோடைன் சாப்பிட்டபிறகு நல்ல பசியுண்டாயிருக்கிறது. சாப்பாடு அதிகம் கொள்ளுகிறது. உடம்புக்கு நல்ல பலம் தருகிறது. உங்களுடைய மருந்துக்கு மிகவும் சந்தோஷப்பட்டேன். எனக்கிருக்கும் சினேகிதர்களுக்கு சிபார்சுசெய்திருக்கிறேன். எனக்கு வயது 31 ஆகிறது. இந்தக் கெய்ரோடைன் சாப்பிட்டபிறகு எனக்கு நிரம்ப பலமாயிருக்கிறது. நிரம்பவும் சந்தோஷம் உங்களுடைய மருந்து கைகண்ட பலனைத்தருகிறது. ரூபாய் பெரிதல்ல. நல்லமருந்து, என்னால் உங்களுக்கு மருந்து ஆர்டர்வரும்.

(Sd) எஸ். டி. பாஷியமய்யங்கார், திருவள்ளூர்.

பூரா சுத்தசுகம், சுகம். சுகம். ஆயுள் உள்ளவரை மறக்கமாட்டேன்

பஹோரவ்—மலாய் நாடு.

மகா-ரா-ரா-ஸ்ரீ ஐயா ஆர். எஸ். பதி. அண்கோ அவர்களுக்கு பா. சு. ம. முகம்பது இஸ்மாயில் எழுதியது. எனக்கு 6 மாதத்துக்கு முன் என்னுடைய உடம்பு நிரம்ப பலக்குறைவும், நிரோகவெய்மையும், பசியில்லாமலும் இருந்தது. நான் தங்களுடைய கேட்லாக்கைப்பார்த்து கெய்ரோடைன் மருந்தைத் தருவித்து 80 வேளை சாப்பிட்டு வந்ததில்.....இப்பொழுது ஷெவியாதிகள் பூராவும் சுத்த குணமாய் தங்கள் மருந்திலிருந்தும் ஏராளமான பசி உண்டாகி தேகத்தில் நல்ல இரத்தமும், நல்ல பளபளப்பும் உண்டாகியும் கை கால் அசதியும் கிடையாது. பூரா சுத்த சுகம். சுகம. சுகம். மேற்கண்ட உதவிக்குத் தங்களை என் ஆயுளுள்ளவரை மறக்கமாட்டேன். (Sd) பி. எஸ். எம், முகம்மது இஸ்மாயில்,
62 மெயின் ரோடு, பஹோரவ். [மலாய் நாடு.]

கேய்ரோடைன் மருந்தை ஜெயிக்க வேறு மருந்து கிடையாது.

ஆயக்காரன் அம்பலம்—திருத்துரைப்பூண்டி தாலூகா.

மகா-ரா-ரா-ஸ்ரீ டாக்டர். ஆர். எஸ். பதி அவர்களுக்கு
ராஜகோபால தேவர் எழுதியது.

தங்கள் கம்பெனி மருந்து "கெய்ரோடைன்" வாங்கிச் சாப்பிட்டதில் அநேகம் வியாதிகள் சவுகரியம். கெய்ரோடைன் மருந்தை ஜெயிக்க வேறு மருந்து கிடையாது. நல்ல மருந்து. 17—3—31

கெய்ரோடைன் தங்கள் கேட்லாக்கில் எழுதியிருக்கிறபடி குணங்கள் செய்திருக்கிறது.

(Sd) த. ரெ. கோவிந்தசாமி,
10—3—31, நிர், 56. ரிவர்சயிட், மலாக்கா. S. S.

பேராச்சரியமான சந்தோஷம். கெய்ரோடைன் வரப்பிரசாதத்தால் பலமும், தேஜசும், சுகமும், வந்தது. வீரிய விருத்தி என்மனதால் அடக்க இயலாது.

மூவார்—மலாக்கா தேசம்.

எனக்கு சில நாளுக்குமுந்தி அனுப்பின "கெய்ரோடைன்" என்னும் மருந்தை சுந்தேகமாகவே வாங்கி அதில் ஏறக்குறைய 16 நாள் சாப்பிட்டதில் ஏற்பட்ட பேராச்சரியமான சந்தோஷத்தை மனப்பூரணமாய்த் தங்களுக்குத் தெரிவித்துக்கொள்வது உண்மை.

எனக்கு ஒரு வருஷமாய் ஏற்பட்ட பலவீனம், அசதி, கண் எரிச்சல், மூத்திரம் மஞ்சள், உஷ்ணம், மலச்சிக்கல் இன்னும் எனக்குத் தெரியாத பல ரோகம், எனக்குச்சாப்பிட மனமில்லாமல் வாடி இளைத்துப்போன தேகம், தங்கள்.....'கெய்ரோடைன்'.....உதவியாலும், நான் அடைந்த பலமும், தேக தேஜசும், சுகமும், வீரிய விருத்தியும் அனுபான முறையில் கண்டபடி ஸ்திரீ சங்கமே கூடாதென்று இருப்பதை நிவர்த்தி செய்ய என் மனதால் இயலாதிருந்ததையும் மேல்கண்ட தமிழ் மருந்து சுந்தேகம் எனக்கு இருந்தது 'கெய்ரோடைனால்' நிவர்த்தியானதும் ஒரே பாட்டில் பூரண சுகத்திற்குப்போதுமென்ற உண்மையும் என் மனமார வாழ்த்துகிறேன். அதன் (கெய்ரோடைன்) சக்தியே மென்மேலும் வியாதி இருளைப்போக்க ஓர் சூரியனைப் புறப்பட்டுவிட வேண்டுமென்று அன்புடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

(Sd) கோ. பக்கிரிசாமி, கணக்குப்பிள்ளை,
Mr. A. K. ராஜப்பதேவர் மனிகை, கோர்டெனல் எஸ்டேட்,
19—4—31. மூவார், மலாக்கா தேசம்.

விற்பனைக்காக நம்மிடம் உள்ள இதர பதிப்புப் புஸ்தகங்கள்.

1.	இயற்கைமதம்	...	0—8—0
2.	சிதம்பர ரகசியம்	...	0—8—0
3.	சுதந்தரப்போர் அல்லது உப்பள முற்றுகை		0—4—0
4.	சுயமரியாதைத் தத்துவக் கீதங்கள்	...	0—4—0
5.	பகுத்தறிவே விடுதலை அல்லது ஜீவாத்மா இல்லை (சித்திரப்படங்களுடன் 100 பக்கங்களுக்கு மேல் உள்ளது)	...	0—6—0
6.	மாதர் சுதந்தரம் or பெண்மக்கள் பெருமை		0—8—0
7.	ஆராய்ச்சி அணிகலம்	...	0—12—0
8.	சென்னை லோக்கல் போர்ட் ஆக்ட்	...	2—0—0
9.	மோட்டார்கார் இயந்திர சாஸ்திரமும் அதன் அனுபோகப் பயிற்சியும் (50 படங்களுடன் 200 பக்கங்கள் அடங்கிய பெரிய புஸ்தகம் தூர்டருடன் 4 அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.)	...	2—0—0
	ஈ. வெ. ராமசாமியின் போட்டோ படம்	...	0—8—0
	சுயராஜ்யம் யாருக்கு	...	0—1—0
	சாமிகளின் அடிமைகள்	...	0—12—0

குறிப்பு:—புஸ்தகங்களுக்கு ஸ்டாம்பு வைத்து அனுப்புவதை வாசகர்கள் புஸ்தக விலைக்கு மேலாக புஸ்தகம் ஒன்றுக்கு ஒன்றரை அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும். 8 அணாவுக்குக் குறைவான தூர்டருக்கு வி. பி. அனுப்பப்படமாட்டாது, தூர்களுக்கு மாதிரி தொகையாவது முன்பணம் அனுப்பவேண்டும்.

'குடி அரசு' 'ரிவோல்ட்' மாலைகள்.

குடி அரசு மாலைகள் தோன்றியது முதல் வருஷத்திலிருந்து சென்ற வருஷம் வரை 5 வருஷகாலம் வெளியான மலர்களைத் தனித்தனி வருஷமாக பைண்ட் செய்து புஸ்தகமாக வைக்கப்பட்டிருக்கிறது.

ஒவ்வொரு வருஷமாலை விலை	ரூ.	4—0—0
ரிவோல்ட்டு ஒரு வருஷமாலை பைண்ட் செய்தது விலை	ரூ.	4—0—0

மானேஜர், குடி அரசு புத்தகாலயம், ஈரோடு

பணாதர். உயர்திரு. சாமி சிதம்பரனார் அவர்களியற்றியது

மாதர் சுதந்திரம் அல்லது

பெண் மக்கள் பெருமை.

என்னும் அரிய நூல் விலை அணா 8. (எட்டு)

கிடைக்குமிடங்கள்:- "குடி அரசு" புத்தகாலயம், ஈரோடு.
இம்பீரியல் பிரஸ், மாயவரம்

'சண்டமாருதம்'

சுயமரியாதைத்தமிழ் தினப்பதிப்பு.

அனேக தந்திச்செய்திகள்
அச்சமற்ற கண்டனங்கள்
ஆணித்தரமான அபிப்பிராயங்கள்
சுருக்கமான குறிப்புகள்
தேனின் இனிய "திரட்டுப்பால்"
நகைச்சுவை மிக்க நாவல்கள்
மெய்கூச்செறியுகும் "மின்வெட்டு"
அறிவைப்பெருக்கும் "அஷ்டதிக்கு"
முதலியன "சண்டமாருத"த்தில் வெளியாகின்றன.

சந்தா விவரம்.

உள்நாடு மாத சந்தா		ரூ. 1—4—0
தனிப்பிரதி	...	ரூ. 0—0—9
வெளிநாடு வருட சந்தா		ரூ. 18—0—0
தாமாதம்	...	ரூ. 10—0—0

மானேஜர்
'சண்டமாருதம்'
திருச்செங்கோடு.

"தமிழன்"

மலாய் நாட்டு சுயமரியாதை தமிழ் தினசரி.

உள்நாடு மாத சந்தா	$ 1.00.
வெளிநாடு ,, இந்தியா	$ 1.50.

ஆசிரியர்:—சுவாமி அர்புதானந்தா.

விலாசம்:— மானேஜர் "தமிழன்"
10, ஜெல்ப்ரோட், சிப்போர்.

Read the "SUPERSTITION OF KHADI"

A Discussion
By
S. Ramanathan
Pattabhi Sitharamayya
& N. S. Varadachari
in English.

Published by Kudi Arasu Publishing House, Erode.

Price per copy two annas. Send 0-3-0 annas postage stamps for a single copy.

Apply to:—
Manager "Kudi Arasu" Erode.

குடி அரசுப் பதிப்பக வெளியீடுகள்.

கைவல்யம் அல்லது கவலைக்கிடமானது.

இது கைவல்ய சாமியாரவர்களால் எழுதப்பட்ட கட்டுரை கன்னத்தொகுதி வெளியிடப்பட்டது. இதில் பதார்) அனேக சாஸ்திர, புராண இதிகாசங்களையும் அவற்றில் உள்ள சாதிப்புரட்டு, சமயப்புரட்டு, மூதனிலைகளையும் உணர்ந்து தெளிதற்ற பண்டிதராகலாம். இதன் விலை அணை. 0—8—0

இராமாயண ஆராய்ச்சி.

இதில் இராமாயணத்தின் ஆபாசங்களை அறியலாம். கம்ப இராமாயணம், வால்மீக இராமாயணம் இரண்டிலும் உள்ள மாறுதல்களையும், ஒன்றற்கொன்று உள்ள வேறுபாடுகளையும் ஆராய்ந்து அவற்றில் உள்ள தெய்வீகப்புரட்டுக்களை வெளியாக்குவது.

இதன் விலை முதற்பாகம் பாலகாண்டம் அணை 0—4—0

இரண்டாம் பாகம் அயோத்தியாகாண்டம் அணை. 0—8—0

ஞானசூரியன்.

இதில் வேதம், புராணம், ஸ்மிருதி முதலிய வைதிகங்களின் ஆபாசங்களைக் காணலாம். மதங்களின் ஆபாசங்களையும், மதச் சண்டைகளின் ஆபாசங்களையும் அறியலாம், இதை ஒரு முறை படித்தால் ஆரியர்களின் புராதன நாகரீகத்தின் வண்டவாளம் முழுதும் தெரியும். பெரியபுத்தகம். 150 பக்கம். இதன் விலை அணை. 0—4—0

மநுநீதி மருமம்.

இது மநுதரும சாஸ்திரத்தில் உள்ள அநீதிகளையும், பார்ப்பனர், பார்ப்பனரல்லாதாரை அடிமைப்படுத்துவதற்கு ஏற்படுத்தி யுள்ள சூழ்ச்சிகளையும் விளக்குவது. இதன் விலை அணை. 0—2—0

இராமலிங்க சுவாமிகள் பாடல் திரட்டு.

இது இராமலிங்க சுவாமியால் பாடிய அருட்பாவில், ஆறாம் திருமுறையில் உள்ள பாடல்களிலிருந்து தொகுக்கப்பட்டது. இதில் உள்ள பாடல்களால், வேதம், புராணம், மதம் முதலிய வைதிகங்களின் சூழ்ச்சிகளையும், அவைகள் பொய் என்பதையும் உணரலாம்.

இதன் விலை அணை. 0—2—0

சுயமரியாதைத் தாலாட்டு.

இதில் தீண்டாமைக் கொடுமை, சாதி சமயக் கொடுமை, முழை பணக்காரக் கொடுமை முதலிய வற்றைக் கண்டித்துக் கூறப் பட்டிருக்கிறது. இனிய பாடல். எளிதில் பொருள் விளங்கும்.

இதன் விலை அணை. 0—2—0

சோதிடப் புரட்டு.

இதில், சோதிடம் என்பது பொய் என்பதையும், பார்ப்பனர்களும், புரோகிதர்களும், ஜன சமூகத்தை ஏமாற்றுவதுதான் சோதிடமென்பதையும் இனிமையான...சுலபமான பாடல்களால் விளக்கிக் கூறப்பட்டிருக்கிறது இதன் விலை அணை. 0—2—0

ஈ. வெ. ராமசாமியின் சீர்திருத்த மகாநாட்டுச் சொற்பொழிவு.

இதில் ஜனசமூகம், சீர்திருத்தம்பெற்றுச் சுகமாக வாழ வேண்டியதற்கான வழிகளைக் காணலாம். மக்கள் அடிமைப்பட்டுப்பகுத்தறிவின்றி வாழ்வதற்குக் காரணங்களை உணரலாம். ஈ. வெ. ராமசாமியின் சொற்பொழிவுகளில் இது தலை சிறந்ததாகும். இதன் விலை அணை 0—2—0.

சுயமரியாதைப்பாடல்.

இதில் சுயமரியாதைக்கென கைகளை விளக்கி, இனிமையான புதியவர்ணமெட்டுகளில் பாடியபாடல்கள் அடங்கியுள்ளன.

இதன் விலை அணை 0—2—0.

தர்ம பரீக்ஷை அல்லது புராண ஆபாசம்.

இது ஒரு பழைய நூல். இதில் புராணங்களின் பொருத்தமற்ற கதைகளையும், முன்னுக்குப்பின் முரணான கொள்கைகளையும் தெள்ளத்தெளிய உணரலாம். இரண்டு இளைஞர்கள் மாறு வேடம் பூண்டு பொது ஜனங்களுக்குப் புராணபுரட்டுக்களை வெளிப்படுத்தும் முறையில் எழுதப்பட்டிருக்கிறது.

இதன் விலை அணை 0—3—0

பங்களும் அல்லது பார்ப்பனக்கொடுமை.

இது ஒருநாடகம், பார்ப்பனர்களின் புரட்டுக்களையும், ஜாதி வேற்றுமை, மதக்கொடுமை, சாஸ்திரக்கொடுமை, முதலியவற்றையும் விளக்கிச் சமதர்மத்தைப்போதிப்பது. இதுவே தமிழில் உள்ள முதல் சுயமரியாதை நாடகம்.

இதன் விலை அணை 0—4—0

மேயோ கூற்று மெய்யா? பொய்யா?

இது அமெரிக்க நாட்டு மாதாகிய "கன்னி மேயோ" எழுதியதில்உள்ள உண்மைகளையும், அதில் சொல்லப்படாம இருக்கும்—நமது நாட்டில் உள்ள வேறுபல ஆபாசங்களையும் எடுத்துக்காட்டிச் சேர்த்திருந்த வேண்டுமென்னும் உணர்ச்சியை உண்டாக்குவது.

இதன் விலை அணை 0—3—0

அகத்தியர் ஆராய்ச்சி.

இதில் மூச்சங்கங்களின் புரட்டுக்களையும், அகத்தியர் சரித்திரப்புரட்டுக்களையும் தமிழ் நூல் ஆதாரங்களோடுவிளக்கப்பட்டிருக்கிறது. சென்னை, பண்டிதர் கா. சுப்பிரமணிய முதலியாரால் எழுதப்பட்டது.

இதன் விலை அணை 0—2—0

கடவுளை நிந்திக்கும் கயவர்கள் யார்?

இதில், கடவுளை நிந்திப்பவர்கள் சுயமரியாதைக்காரர்கள் அல்லவென்றும், புராணமரியாதைக்காரர்கள் தான் கடவுளை நிந்திக்கும் கயவர்களென்றும், இதிகாச புராணங்களின் ஆதாரங்களோடு கொண்டே விளக்கிக் காட்டப்பட்டிருக்கிறது. பண்டிதர் அ. ராகவன் அவர்களால் எழுதப்பட்டது.

இதன் விலை அணை 0—2—0.

கதர்-மூடநம்பிக்கை (இங்கிலீஷ்)

இதில், திரு S. ராமநாதன், அவர்கள் கதரைப்பற்றிச்செய்த உபன்யாசமும், அதற்குத் திருவாளர்கள், பட்டாபி சீதாராமையாவும், என். எஸ். வரதாச்சாரியும் எழுதிய மறுப்புரைகளும், அவைகளுக்கு எஸ். ராமநாதன் எழுதிய பதில்களும் ஆங்கிலத்தில்வெளியிடப்பட்டிருக்கின்றன. இதைப் படித்தால் கதர்ப் புரட்டை உணரலாம். இதன் விலை அணை 0—2—0.

மானேஜர், குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

உண்மை விளக்கம் பதிப்பகத்தில் அச்சிடப்பட்டு திருமதி ராமம்மாள் அவர்களால் வெளியிடப்பட்டது.